
# இலங்கைக் குமரித் தமிழ்ப்பணி மன்றம்

# ஐந்தாம் ஆண்டு நிறைவு மலர்



திரு 2049 (2018)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் குமரித் தமிழ்ப்பணி மன்ற ஐந்தாண்டு நிறைவு மலர்

**தி.ஆ 2044 – தி.ஆ 2049**

**(கி.பி 2013 – கி.பி 2018)**

வெளியீடு :
இலங்கைக்
குமரித்தமிழ்ப்பணி மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலரினுள்ளே ..............................


01 மலராசிரியர் குழு

02 படையல்

03 தமிழ்த்தாயே வாழ்க

04 வாழ்த்துரை முனை.பேரா.திரு.சி.சிவலிங்கராசா

முனை.பண்.செ.திருநாவுக்கரசு

கவிஞர்.க.கணேசலிங்கம்

திரு.மா.கணபதிப்பிள்ளை

கவிஞர்.திரு.செ.மகேசு

திரு.த.குருகுலராசா

திரு.சி.சிறீதரன் (நா.உ)

திரு.எ.அருந்தவசீலன் (ச.நீ)

05 இலங்கைக் குமரித் தமிழ்ப் பணிமன்ற தோற்றுவிப்பு

செவ்வி (தினக்குரல் )

06 யாழ் வீரசிங்கம் நூல் வெளியீடு......................

07 அவுத்திரேலிய நூல் வெளியீடு......................

08 மன்றத் தோற்றுவிப்பிற்கு முன்னரான செயற்பாடுகள்...............

வவுனியா சுத்தானந்த நூல்வெளியீடு.................

09 தொடரும் மன்றப் பணிகள்

தமிழ் நாட்காட்டி

திருக்குறள் நெறித்திருமணம்

பள்ளிகளுக்கு நூல்கள் அன்பளிப்பு

மூத்த குடிகள் நன்மதிப்பு

10 திறந்த கட்டுரைப் போட்டி

11 கிளிநொச்சி - கவிதைகள்

12 ஒருங்கிருக்கை நெறி

13 சான்றோர் நினைவு வெளியீடுகள்

14 தமிழ் வளர்த்த சங்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாண்டு நிறைவு மலர்

## மலராசிரியர் குழு

திருவாளர் த.நிரஞ்சலன்

திருவாளர் ம.யோ.தமிழரசன்

திருவாட்டி நி.வேந்தினி

## மதியுரைக்குழு

திருவாளர் நா.வை.குகராசா

திருவாட்டி ம.நல்லினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் குமரித் தமிழ்ப்பணி மன்ற ஐந்தாண்டு நிறைவு மலர்

**படையல்**

தமிழொளி காட்டி தமிழ் உணர்வூட்டி

தமிழ்ச் சான்றோ னாக்கிய பெருந்தகையே

உன் தாள் பணிந் தேற்றினேன்

இப் படையல், வாழ்க நூறாண்டு!



பொறிஞர், பாவலர், ஆய்வர்.திருமிகு.இ.அகன், பாக்கியம் இணையர்

தமிழின் மேன்மை, தமிழினச் சீர்மை,

உமியனை மொழியரால் உலைவுறாப் புரந்திடத்

தொன்று முதலாய்த் தொடர்திடு ஈகியர்

பொன்னடி போற்றிப் படைத்தனிந் நூலே

இ.அகன் (மதுரைத்தமிழ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *தமிழ்த் தாயே வாழ்க*

தூய மாட்சியும் தீன்சுவை சீர்த்தியும்
தாய்மை வீங்கிடும் தாழ்விலா மாண்புமே
மாய்ந்து வீழ்ந்திடா மாப்புகழ் ஓங்கிடும்
தாயெந் தீந்தமிழ்த் தாள்பணிந்(து) ஏத்தினோம்.

பாரில் வாழ்ந்திடும் பல்லின மாந்தரின்
சீரின் தாய்மொழி சீருற வாழ்ந்திட
வேரும் ஈந்துமே ஏற்றிய அன்னைநீர்
வீறு பொங்கிட வாழ்த்தினோம் வாழ்கவே..!

முப்பால் முத்தமிழ் மூப்பிலாச் செந்தமிழ்
சீருறும் தொல்காப்பு சீர்நூலும் கூரறிவின்
மேற்கணக்கு கீழ்கணக்கு மேன்மையுறு காப்பியங்கள்
போற்றலுறு சீரிளமை சாற்றினோம் வாழ்கவே..!

பூவில் தேனுறு பாங்குமேல் ஓங்கிடப்
பாலில் தீஞ்சுவைப் பாகெனத் தோய்ந்திட
நாவில் பாடிடும் நாற்றிசை ஏழ்தமிழ்க்
கூவி ஏத்தினோம் கூர்த்தமிழ் வாழ்கவே!

ஆற்றல் மீவுறும் ஆசிலா ஆயுளை
வேற்று மாந்தரின் வாதறுவாளுனை
சாற்றும் பேரறச் சால்புற வாழ்ந்திட
ஏற்றிப் போற்றினோம் எந்தமிழ் வாழ்கவே

கேடில் இன்பறம் கூறுநற் றாய்நியே
ஈடில் மாப்புகழ் ஈடற உற்றனை
பாடிப் போற்றவே ஆற்றலும் ஈந்தனை
ஆடிப் போற்றியே ஆர்த்தினோம் வாழ்கவே..!

ஆக்கம் :
பொறிஞர்,பாவலர்,ஆய்வர்,
திருமிகு.இ.அகன் (மதுரைத்தமிழர்)
வெளியீடு:
இலங்கைக் குமரித் தமிழ்ப்பணி மன்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முனைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராசா
மேனாள் தலைவர் தமிழ்த்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

## வாழ்த்துரை

அன்பர் குமரிவேந்தன் அவர்கள் முன்னின்று இயக்கும் குமரித் தமிழ்ப்பணி மன்றத்தின் செயற்பாடுகள் பற்றி நாம் நன்கு அறிவோம். உண்ணும் சோறும் பருகும் நீரும் சுவாசிக்கும் காற்றும் எல்லாமே தமிழ் என்று வாழுகின்றவர் திரு.குமரிவேந்தன் அவர்கள். தீவிரமான தமிழ் பற்றுக் காரணமாக தன் உடல் நலத்தையும்,பொருள் வளத்தையும் தியாகம் செய்பவர். தமது குடும்பத்தினரின் உதவி ஒத்தாசையுடன் குமரித் தமிழ்ப்பணி மன்றத்தை நிறுவிப் பணியாற்றி வருகின்றார்.

தமிழ் மொழியின் தொன்மை,சிறப்பு,பயன்பாடு, வளம் முதலியன பற்றி ஆய்வுரீதியான நூல்கள் பலவற்றை எழுதிய குமரிவேந்தன் தமிழ்கூறும் நல்லுலகத்தினால் நன்கு அறியப்பட்டவர். ஆய்வு நெறிமுறை வழுவாது இவரெழுதிய நூல்கள் காலங்கடந்தும் பேசப்படும் சிறப்புக்குரியவை.

இவரின் தமிழர் நாட்காட்டி ஒருபெரும் முயற்சி. இவ்வாறான செயற்பாடு ஒன்றைச் செய்வதற்குக் குன்றா உழைப்பும் குறையா ஊக்கமும் தேவை. குமரிவேந்தனிடம் இவை இயல்பாகவே இருக்கின்றன.

பன்மொழிப்பண்டிதர் வண.தனிநாயகம் அடிகளார் பிறந்த மண்ணிலே பிறந்தவர் குமரிவேந்தன். அவரின் உறவினரும்கூட. நெடுந்தீவு அறிவாற்றலுக்கும், கலைவெளிப்பாட்டுக்கும், பெயர்பெற்றபூமி. அந்த மண்ணிலே கால் தோயநடந்த கவிஞர்கள்,கலைஞர்கள்,அறிஞர்கள் பலரை நான் நன்குஅறிவேன். அவர்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கு நிறையவே கிடைத்தது. புகழ் பெற்ற அறிஞர்களை மாத்திரமன்றி புகழ்பெற்ற கவிஞர்களையும், கலைஞர்களையும் உலகுக்குத் தந்து நிமிர்ந்த அந்த மண்ணின் மகிமையை நான் குமரிவேந்தனிடம் கண்டேன். தமிழர்களின் தலையாயதலை அடையாளமான குடுமி அவரின் அழகிற்கு அழகு சேர்க்கிறது. குடுமியோடும் உத்தரியத்தோடும் அவரை சபைகளில் காணும்போது பலர் தமிழின், தமிழரின் அடையாளத்தை காண்பதாகக் கூறியதை நான் கேட்டிருக்கிறேன்.

குமரித் தமிழ்ப்பணிமன்றம் ஐந்தாவது அகவையில் கால் வைக்கும் வேளையில் நாமும் அவருடன் இணைந்து பூரிப்படைகின்றோம். குடும்ப நிதிப்பலத்திலே இவ்வாறானதொரு பணிமன்றத்தினை கொண்டு நடத்தும் திறன் குமரிவேந்தனின் ஆளுமையைப் புலப்படுத்துகின்றது.

குமரித்தமிழ்ப் பணிமன்றம் தொடர்ந்து தமது பணியை முன்னெடுக்க வேண்டுமென்று வாழ்த்துகின்றோம். குமரிவேந்தனும் அவரது குடும்பத்தினரும் எல்லா நலனும் பெற்றுவாழ இறைவனை இறைஞ்சுகின்றேன்.

பேரா.சி.சிவலிங்கராசா,
திருநெல்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாநிதி பண்டிதர் செ. திருநாவுக்கரசு
ஆசிரிய கலாசாலை ஓய்வுநிலை விரிவுரையாளர்

## மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

இந்த மண்ணில் பிறந்தவர்கள் இருவகைப்படுவர் பிறந்தோம், இருந்தோம், சென்றோம் எனத் தங்கள் வாழ்வின் தடங்கள் எதுவும் இல்லாமல் கதைமுடிப்பவர்கள் ஒருவகையினர். தங்களால் முடிந்தவரை மானிடம் பயனுற வாழ்வதற்கான பணிகள் மூலம் தடம் பதித்து விட்டு செல்பவர்கள் இன்னொரு வகையினர். தாம் வாழும் சமூகத்தின் மீதுள்ள பற்றினால் தம் சக்திக்குரிய வகையில் தமது நல் வாய்ப்புக்களை பயன்படுத்தி சமூகம் தளைத்திடக் கூடிய செயல்களில் வாழும்போதே ஈடுபட்டு உழைப்பவர்கள் தான் இரண்டாவது வகையினர். இத்தகைய பண்பும், பலமும், மானிடம் தழுவிய உழைப்பும், பரந்த மனமும் படைத்தவர்தான் கலாபூசணம் நா.வை.மகேந்திரராசா என்னும் இயற்பெயர் கொண்ட குமரிவேந்தன் அவர்கள்.

இவர் நெடுந்தீவு மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்டவர் வைத்திலிங்கம் நாகமுத்து இல்லற இணையரின் மகனாக பிறந்தவர். சொந்த ஊரிலுள்ள அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை, நெடுந்தீவு மகாவித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி கற்றபின் 7ம் வகுப்பிலிருந்து க.பொ. த உயர்தரம் வரை வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்று தேறியவர். தொடர்ந்து மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் மின் பொறியியல் துறையில் தேசிய பட்டய கல்வி நெறியை பயின்று தேர்ந்தவர். இலங்கை மின்சாரசபையில் மின்பொறியியல் கண்காணிப்பாளராக தமது 55 ஆவது வயது வரையில் பணியாற்றி முன்கூட்டியே ஓய்வு பெற்றவர். எல்லோரிடமும் அன்பாக பழகுபவர். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கொள்கை உடையவர். எப்பொழுதும் எதையாவது துருவித்துருவி கற்றுக் கொண்டே இருப்பவர்.

1974ல் வேலுப்பிள்ளை சின்னத்தங்கச்சி இணையரின் மகளான புனிதலீலாவதி என்ற நல்லினியை திருமணம் செய்து இல்லறத்தின் இனிய கனிகளாக ஐந்து மக்கட் செல்வங்களை பேறாக பெற்றவர். 1983 களில் தொடங்கிய உள்நாட்டு போர் காரணமாக நாட்டின் அசாதாரண நிலைகளிலும் இவரது உடன் பிறப்பான அரியராசா படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியாகினார். தொடர்ந்த போர் காரணமாக தனது பிள்ளைகளின் கல்வி தடங்கலுற்றதால் பிள்ளைகளின் வளமான கல்வி வாய்ப்புக்களுக்காக 2002 இல் தமிழ் நாடு சென்றார். அதிலிருந்து 2010 வரை அங்கேயும் இங்கேயுமாக கழிக்க வேண்டியதாக இருந்தது. தமது பட்டப்படிப்பினை நிறைவு செய்த பிள்ளைகளில் சிலர் வெளிநாடுகள் சென்று வாழக்கூடிய சூழ்நிலை உருவானது. துன்பத்திலும் , இன்பத்திலும் இதுவரைக் காலமும் கிடைக்க தாமதமாயிருந்த தமிழ் கற்கும் நல்வேளை தமிழகத்தில் இவருக்கு கிட்டியது. பொறிஞரும், தமிழ் அறிஞருமான உயர்திரு அகன் என்பாரின் நட்பும் பேரன்பும் கிடைக்கப் பெற்றதால் அவரின் பாவாணர் நூலகத்தினூடாக தனது தமிழ் அறிவை மேலும் வளர்ப்பதில் கரிசனை எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். தமிழ் மொழி சார் ஆய்வுக்குரிய புலன்களில் அக்கறை செலுத்தினார். தமிழ் மொழி, வரலாறு, இலக்கண இலக்கியங்கள், தொடர்புபட்ட சமயங்கள், உலகலாவிய தமிழும், தமிழரும் ஆகியவற்றோடு, சமகால உலகியலில் பல்துறை விடயங்களில் ஆராய்வூக்கத்துடனும், அறிவு நாட்டத்துடனும் கற்று தன்னை வளப்படுத்திக் கொண்டார். இவரது முயற்சிகளுக்கு உற்ற பெருந்துணையாக மனைவியார் நல்லினியும் விளங்கினார். 2006 இல் மகளுக்கும் 2010 ல் மகனுக்கும் சீர்திருத்த முறையிலான திருக்குறள் நெறி திருமணத்தை செய்து வைத்த பெருமைக்குரியவர். அத்தோடு இவரும் திருக்குறள் நெறித் திருமணங்களை தலைமைதாங்கி நடாத்தி வைக்கின்றார். ஏனைய இருபிள்ளைகளுக்கு கிறீஸ்தவத்திலும், ஒருபிள்ளைக்கு இந்து பிராமணிய நெறித்திருமணமாகச் செய்து வைத்து சமயப்பன்மையியம் பேணுகிறார்.

யாழ். தனிநாயக அடிகள் சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கப் பொருளாளர் (1993 - 1995), கிளிநொச்சி மாவாட்ட தமிழ்ச் சங்க செயலாளர் (2005-2007), கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்க இணைப்பு செயலாளர் (2007-2008) எனப் பொதுப் பணிகளில் தமிழ் உணர்வுடன் ஈடுபட்டபின், உயரிய பணியொன்றில் தம்மை இணைத்துக் கொள்ள விரும்பி 2013 ல் “இலங்கைக் குமரித் தமிழ்ப் பணிமன்றத்தை” தனது குடும்ப உறுப்பினர்களுடன் தொடக்கினார். தன்னுடையதும், தனது குடும்பத்தினரதும் பெயர்களை தனித் தமிழில் மாற்றிக் கொண்டவர் குமரிவேந்தன் மறைமலை அடிகள், பரிதிமாற்கலைஞர், பெருஞ்சித்திரனார், இலங்கையின் இளமுருகனார், வேந்தனார் ஆகியோரது சென்நெறியில் தம்மையும் சேர்த்து செயற்பட விளைந்தார்.

தமிழாய்வு நூல்களை எழுதி வெளியிடல் தமிழர் நாட்காட்டி வெளியிடல், பாடசாலை மாணவர்களுக்கும், நூலகங்களுக்கும், தமிழ் ஆர்வலர்களுக்கும் தமிழ் நூல் , நாட்காட்டி போன்றவற்றை இலவசமாக தந்துதவுதல், மாணவர்கள், மற்றும் வளர்ந்தோர் இடையே தமிழியல் சார்ந்த போட்டிகளை முத்தமிழ் துறைகளிலும் நடத்தி புத்தகப் பரிசில்கள் அளித்து ஊக்கப்படுத்தல், கருத்தரங்குகளை ஊக்குவித்தல் சமூகம் தழுவிய பல்துறைசார் சான்றோரை கௌரவித்தல் முதலான சமூகம் தழுவிய பல்துறை பணிகளை இலங்கைக் குமரித்தமிழ்ப் பணிமன்றத்தினூடாக செயற்படுத்தி வருவது காலமறிந்து கூவிய சேவலின் பணிபோன்றது.

தனது நடை, உடை, பாவனைகளையும் மாற்றி அமைத்துக் கொண்ட குமரிவேந்தன் அவர்கள் குடும்பி வைத்துக் கொண்டதால் **“குடும்பி வேந்தன்”** எனவும் அழைக்கப்படுகின்றார். வேட்டி ,சால்வை,நசனல் அணிந்து அதிகம் காட்சியளிப்பார். தூய தமிழ் நடைமுறையை பேண துடிப்பவர். தனது எழுத்துக்களில் அதனையே கடைப்பிடித்து வருகின்றார். 70 வயதினை அடைந்த போதும் துடிதுடிப்பான இளைஞர் போல் தமிழ்ப் பணியில் தன்னை ஒப்படைத்து செயற்படுகின்றார். மகன்கள் வாழும் அவுத்திரேலியாவுக்கும் துணைவியாருடன் அடிக்கடி சென்று வருகின்றார். அங்கு நடைபெற்ற திருக்குறள் மகாநாடு (2014) பங்கு பற்றினார். அவுத்திரேலியாவில் சிட்னிநகர் தமிழ் ஒலிபரப்பில் (ஏ.ரி.பி.சி) ஒலிபரப்பாளர் திரு. அலோசியசு, தமிழ் ஒலிபரப்பாளர் (மெல்போன் ஏ.ரி.பி.சி கிளை) திருவாட்டி சாந்தினி புவனேந்திரராசா, சிட்னி இன்பத் தமிழோசை பிரபாகரன் ஆகியோருடனான நேர்காணலின் போது தனது அனுபவங்களையும் எண்ணங்களையும் பகிர்ந்து கொண்டுள்ளார் (2015) இவர்களின், நேயர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இவரின் நூல்களான உலக உயர்தனிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மொழி செந்தமிழ், தமிழர் இலக்கிய இலக்கணம் (ஓர் அறிமுகம்) தமிழர் மெய்யியல் கோட்பாடு ஆகிய நூல்கள் சிட்னி, அவுத்திரேலியாவில் புரட்டாதி 2015 இல் வெளியிடப் பெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். குமரிவேந்தன் அவர்களது முதல் நூலான **"பெய்யென பெய்யும் மழை"** 2010ஆம் ஆண்டு சென்னையிலும், 2011இல் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மன்றத்தில் பெருந்திரளானோர் முன்னிலையில் இந் நூலும், **"ஒருங்கிருக்கை (யோகாசன) நெறி"** என்ற நூலும் வெளியிடப்பட்டது.

இவரது முதலாவது நூல் வள்ளுவர் வாக்கினை அணிசெய்யும் மகளிர் மாண்புக்கு முக்கியமளித்த நூலாகும். 2012 ல் இவரது முதல் தமிழர் நாட்காட்டி வெளியிடப்பட்டுள்ளது. அத்தோடு தனது பேரன்புக்குரிய அகன் தமிழக ஏடுகளில் எழுதிய சிறுகதைகள் 32 யை தொகுத்து **"அகனின் விழிப்புக் கதைகள்"** என்ற பெயரில் தனது நன்றிக் கடனை தீர்க்க முயன்றார். அதே ஆண்டு குமரிவேந்தனின் **"மதுரை எரிகிறது"** புதிய நோக்கு சிந்தனைகளிலான நூல் வெளிவந்தது. **"தமிழியற் சான்றோர் பகுதி - 1"** சில அறிஞர் பற்றிய உணர்வு பூர்வமான நூலுமாக 2013ல் கிளிநொச்சி பிரதேச சபை மண்டபத்தில் வெளியிடப்பட்டன. **"உலக உயர் தனிச் செம்மொழி செந்தமிழ்;"** தமிழ், தமிழர், தமிழ் உலகம் பற்றிய வியப்பான சிந்தனைகளை எம்மிடையே ஏற்படுத்தின. தொடர்ந்து தமிழர் இலக்கிய இலக்கண நூலும் **"தமிழர் மெய்யியற் கோட்பாடு"** என்ற நூலும் 2015 இல் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் வெளியிடப் பெற்றன. **"தமிழியற் சான்றோர் பகுதி 2,3"** ஆகியவற்றை இணைத்து **"கிறிஸ்தவர்களின் தமிழ்க் கொடை"** என்னும் பெயரில் 2017 இல் உலகத் தாய்மொழி நாளன்று நெடுந்தீவு தேவானந்தா பண்பாட்டு மண்டபத்தில் வெளியிடப்பட்ட சிறந்த நூல். இதில் தனிநாயகம் அடிகள், டாக்டர் சாமுவேல் கிறின், வீரமாமுனிவர், மயூரம் வேதநாயகம் பிள்ளை, ஆபிரகாம் பண்டிதர் ஆகியோரைப் பற்றி விரிவாகவும் மேலும் பத்து அறிஞர்கள் பற்றிச் சுருக்கமாகவும் தகவல்களை தந்துள்ளது. குமரித் தமிழ்ப் பணிமன்ற வெளியீடுகளான இந் நூல்கள் யாவும் குமரிவேந்தனின் உசாத்துணை தேடலையும் தமிழ் ஆர்வத்தையும் பிரக்ஞை பூர்வமான தரிசிப்புக்களையும் நாம் உணர்ந்து கொள்ள வழிவகுத்துள்ளது. தேவனேய பாவாணரின் வழிநின்று மொழிநூல் அகழாய்வு செய்த திறத்தை அறிய முடிகிறது. எதுவித பொருளாதார நலன்களையும் எதிர்பாராது திறந்த மனத்துடன் தன்னால் இயன்ற தமிழ்ப் பணியை ஆற்ற வேண்டுமென்ற தணியாத பேராவலை புரிந்து கொள்ள முடிகின்றது.

ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவைகளாகவே இவரது நூல்களின் பாடுபொருள்களும், செல்நெறி போக்குகளும் காணப்படுகின்றன. மாணவர் சமுதாயத்தை இலக்கு வைத்தும் இளைஞர் சமுதாய விழிப்புக் கருதியும் தமிழ் ஆர்வலர்களின் விரிவான சிந்தனைக்குரிய திறவுகோலாகவும் குமரிவேந்தனின் எழுத்துக்கள் அமைந்து சிறந்துள்ளன. 2006 ம் ஆண்டளவில் **"தமிழ் மகள் ஔவை"** என்ற நூலினையும் குமரிவேந்தன் வெளிக்கொணர்தமை பற்றி அறியமுடிகிறது. அதனுடன் நெடுந்தீவு கிராமத்தின் வாழ்வியல் தழுவி தொடக்க கால சான்றோர் பற்றிய நூல் ஒன்றினையும், திருக்குறள் சிந்தனைகள், தொல்தமிழர் (இலங்கை), தமிழ் மொழித் தூய்மை, தமிழர் மதமும், பண்பாடும் ஆகிய நூலாக்க முயற்சிகளில் இவர் ஈடுபட்டு உழைத்து வருகின்றார். தனி ஒரு மனிதனின் சாதனைக்குரிய பணிகள் இவையெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரிவேந்தனின் தூய தமிழ் - சமூகப்பணி மக்களால் போற்றப்படுவதே அவற்றுக்கான அங்கீகாரமாகும். 2006 ஆம் ஆண்டு கிளிநொச்சி பண்பாட்டு பேரவை நன்மதிப்பளித்தது. தமிழ்நாட்டில், சியோன்மலை சோழப்புரத்தில் நடைபெற்ற தேவநேயபாவாணர் பிறந்தநாள் நினைவு விழாவில் ( 2010) குமரிவேந்தன் கௌரவிக்கப்பட்டார். கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகமும், பண்பாட்டு பேரவையும், "கரைஎழில்" விருது வழங்கி (2015) பாராட்டியது. கிளிநொச்சி மாவட்ட செயலகமும், பண்பாட்டு பேரவையும் இணைந்து "கலைக்கிளி விருது" வழங்கி (2016) கௌரவித்தது. இலங்கை கலாசார அலுவல்கள் அமைச்சு (2017) க்கான கலாபூசண விருது வழங்கி மதிப்பு செய்தது. இந்தப் பெருமை யாவும் அவரது கடின உழைப்பிற்குக் கிடைத்த வெகுமதிகள்.தமிழ் அன்பர் குமரிவேந்தனின் தன்னலமற்ற தமிழ் பணிக்கு மனங்கோணாது அவரது வாரிசுகள் , உடன்பிறப்பு உதவி வருகின்றனர். துணைவியார் வலது கரமாய் விளங்கி கணவரின் சகல பணிகளிலும் தாமும் இணைந்து கொள்கிறார்.

நல்ல மனைவி, நல்ல பிள்ளைகள் நல்ல குடும்பம் தெய்வீகம் என்பதற்கமைவாக குமரிவேந்தனின் இல்லறம் மேன்மை பெறுகின்றது. நெடுந்தீவு, அரியாலை, கிளிநொச்சி, வவுனியா, தமிழ்நாடு, அவுத்திரேலியா என வாழ்வின் சுழற்சியில் அலைக்கழிக்கப்படும் அன்பர் தற்போது மனைவி, மகள், மகன் குடும்பத்தாருடன் கிளிநொச்சியில் நிரந்தரவாசியாகிவிட்டார். மீண்டு தொடங்கும் மிடுக்குடன் அவரது பணி தொடர்கிறது. தமிழை ஆளவும், தமிழால் நிலை பெற்று வாழவும் முடிகிறது. இலங்கைக் குமரித்தமிழ்ப் பணிமன்றத்தின் 5 ஆம் ஆண்டு நிறைவுக்கும் உலகத்தாய் மொழி நாளுக்கும் ஒரு சேர விழாவெடுப்பதையிட்டு மகிழ்வடைவதோடு அன்னைத் தமிழோங்க எனது நிறைவான வாழ்த்துக்கள். மென் மேலும் இப் புனித செயலது அவரின் மனமும் உழைப்பும் வெற்றி பெற வாழ்த்துகிறேன். எல்லாம் வல்ல இறையருளை பணிந்து இறைஞ்சி குமரிவேந்தன் வாழ்வும் வளமும் சிறக்க வேண்டுகின்றேன்.

கலாநிதி பண்டிதர் செ. திருநாவுக்கரசு
ஆசிரிய கலாசாலை ஓய்வுநிலை விரிவுரையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிஞர்

திரு.க.கணேசலிங்கம்

மேனாள் வேளாண்பண்ணை முகாமையாளர்

விரிவுரையாளரும்

## ஐந்தாண்டை நிறைவு செய்யும் குமரித் தமிழ்ப்பணி மன்றத்தை வாழ்த்துகிறேன்

தனித்தமிழ் பற்றும்
தமிழியல் ஆய்வும்
தளராஉறுதியும்
தாகமே தமிழென-முதுமையிலும்
இளைஞனாய் வலம் வரும்
குமரிவேந்தனே!
ஓயாததேடலும்
ஒழியாதஆய்வுமாய்
தாயேதமிழாய்
தம்பணிநல்கும்-மனித
நேயனேவாழ்க! நும்பணி!
வளர்கநம் தமிழ்மொழி

மண் மானப்பற்றும்
பண்பாட்டுப்பேணலும்
கண்ணாய் கொண்டு
எண்ணமும் செயலும்
திண்ணமும் திடமுமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணலின் வாழ்வுஅர்ப்பணமானது
மொழிச் சிதைப்பும், மொழியழிப்பும் கண்டு
விழித்தெழுந்து வீறுகொண்டே
எழுச்சி பெற எழுதும் எங்கள்
தமிழ் ஏந்தல் அண்ணல் வாழ்க!
பழித்தொழிக்கும் பண்பாட்டுக் கோலம் கண்டு
பதைத்தெழுதும் பண்பாட்டு தமிழ் மறவன்
தமிழனது நாட்காட்டி தந்தமாந்தன்
தாயகமே நெடுந்தீவாய் மகிழும் மாந்தன்
தூயதமிழ் வாழ்வுக்காய் உழைக்கும் செம்மல்
சொல்வதனை செயலாக்கும் ஆற்றலாளன்
தேயமெலாம் தமிழ் வளர்த்த மாந்தர்க்காக
தேடிப் பல நூலாய்ந்து தெரியவைத்தார்

தமிழ்ப் பணியே தமதுயிராய் கொண்டுநாளும்
தன் குடும்பவிருப்போடு அர்ப்பணிப்பாய்-இலங்கைக்
குமரித் தமிழ்ப் பணிமன்றம் தன்னை
தோற்றுவித்த பெரும் தகையேவாழ்க! வாழ்க!

ஐந்தாண்டில் நிறைந்தபணிஆற்றும் வள்ளல்
தமிழ்த் தொண்டில் தலைசிறந்தகலைஞனாக
கரைஎழில் விருதினொடு-கலைக்கிளியும்
பாராட்டாய் பெற்றதிருகுமரிவேந்தன்
கலாபூசணவிருதும் பெற்றார்
ஆண்டைந்தில் தமிழ்பணியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகம் நிறைந்துவாழ்த்துகின்றேன்
குமரித் தமிழ்ப்பணிமன்றம்
கூட்டிடும் தமிழ்ப்பணிஓங்கும்
குமரிக் குடும்பத்தின்
கூறும் நல் உலகம் எங்கும்
இக்குடும்பப் பங்களிப்பால்
இப்பணிகள் தொடர்கிறது.
தக்கப்படிதமிழ் வளர்த்து
தரணிபுகழ் படைக்கிறது

தலைவன் இவர் குமரிவேந்தன்
நல்லினியாள் அவர் துணைவி
கலைவளர்க்கும் பணிமனையின்
ஆளுநராய் விளங்குபவர்
கலைஞன் மேனாள் பிரதேச சபை
கரைச்சித் தவிசாளர்
மேன்மைமிகுபண்பாளர்
நா.வை.குகராசாஆளுநராய்
இம் மன்றிலேஅயராதபணியில்
கவிஞன் கணக்காளன் கண்ணியமும்
கொண்டவன் வேந்தினியின் கைபிடித்த
நிரஞ்சலன் இம்மன்றின் செயலாளன்.

சொல்லினியகுடும்பத்தின்
பிள்ளைகளாய் வந்துதித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லினியபணிகளிலேயே

தமை இணைத்து

நாளெல்லாம் நற்குடும்பம் தமிழ் வளர்க்கும்.

நல்லதமிழ்ப் பெயரினிலேயே

நல்லரசன், எழிலரசன், தமிழரசன்

வேந்தினி, வெற்றிச்செல்வி

தமிழ் பணிமன்றத்தின்

உயர் பணியாற்றும் உறுப்பினர்கள்

எங்கும் தமிழ், எதிலும் தமிழ்

என்னும் நோக்காய்

தம்குடும்பப் பெயரெல்லாம்

தமிழில் வைத்தார்

தமிழர் தம் பண்பாட்டுத் திருமணத்தை

தன்னில்லம் தனில் நடாத்திசிறப்பும் பெற்றார்

இங்குபல தமிழ் நூல்கள் ஆக்கி, ஆக்கி

தமிழ் வளர்க்கும் தமிழனிவன் குமரிவேந்தன்

பொங்கும் தமிழ் ஓங்கும்

புவனியெல்லாம் புகழ் விளங்கும்

தங்குதடையின்றி

தமிழ்ப்பணியில் சேர்ந்திடுவோம்

இங்குதமிழரது

இன்னல்களைநீக்கிடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நெறித் திருமணங்கள்

தமிழர் நாட்காட்டி

தமிழறிஞர் அறிமுகங்கள்

மூத்தகுடிமதிப்பளித்தல்

முனைவர்களின் தமிழ் உறவு

அனைவருக்கும் தமிழ் கல்விஎனும்

அயராதபணிவளர்க்க

நூல்களினைஅன்பளித்தல் -

நீண்ட பெருநோக்கில்

நிறைந்தபணியாக்க

தம் பணியைதமிழ்ப் பணியாய்

தம் குடும்பஅணியாலேயே

குமரித் தமிழ்ப்பணிமன்றமிது

தழைத்தோங்கவாழ்த்துகிறேன்

கிளி தமிழ்ச்சங்க செயலாளர்(மேனாள்)

தகைமை நிறைந்திலங்கு

தனதாற்றல் காட்டியவர்

இனமான மொழியோடு இனிய

தமிழ் வளர்த்துநிற்போர்

கனமானஅறக்கொடைகள்

கல்விக்காய் உவந்தளித்தோர்

தினம் தமிழே உயிரென்று

உழைக்கின்ற பேராளர்

மனம் நிறைந்து வாழ்த்துகிறேன்

மலரட்டும் தமிழ்ப்பணியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.மா.கணபதிப்பிள்ளை, முதுமாணி,
பட்டப்படிப்புக்குப் பின்னான முகாமைத்துவ பட்டயம்,
இலங்கை கல்வி நிர்வாக சேவை,
மேளாள் துணை முதல்வர்
றோயல் கல்லூரி, கொழும்பு - 07

## கலாபூஷணம் திரு. வை. குமரிவேந்தன் (மகேந்திரராசா) அவர்களுக்கான வாழ்த்துச் செய்தி

மணிமேகலை என்ற காப்பியத்தில் குறிப்பிடப்படும் 'நாகநீள்நகர்' என்ற நெடுந்தீவில் பிறந்த மகேந்திரராசா அவர்கள் ஒரு விஞ்ஞானப் பொறியியல் பட்டதாரி. ஆனால் அவரின் உள்ளமோ ஆதி திராவிடத்தில் நாட்டங் கொண்டதாகவே காணப்பட்டது. 'பலர் பேசுவார்கள் பேசுவது போல் வாழ்வதில்லை' ஆனால் தன் நடத்தையில் 'தனித்தமிழ்' பாங்கை ஏற்படுத்திக் கொண்டு அதற்கு தக்கதாக வாழ்ந்து காட்டும் ஈழத்தின் தன்னிகரில்லா தலைமகன் அவர். அவருக்கு 2017ல் கலாபூஷணம் விருது வழங்கியமையால் கலாசார அமைச்சு பெருமையடைந்தது. 1946ல் பிறந்த அவர் 2002இல் அரச மின் பொறியியலாளர் பதவியில் இருந்து இளைப்பாறும் வரையில் அறிவுத் தேடலில் ஈடுபட்டே வந்தார். 2002இல் இந்தியாவுக்குச் சென்றதும் தமிழ் நாட்டின் பொறியியலாளர், ஆய்வில் அறிஞன், பாவலர் திரு. அகனின் நட்புக் கிடைத்தது. நல்ல நட்பால் பாவாணர் அரண் நூலகத்தில் தமிழ்க் கல்வியைக் கற்கும் போதுதான் ஆதி திராவிடர்களின் வாழ்வும், வகிபாகவும் எந்தளவுக்கு உயர்ந்திருந்தது என்பதை கசடறக்கற்றார்.

19ஆம் 20ஆம் நூற்றாண்டு காலத்தில் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருந்த தனித்தமிழ் இயக்கத்தின் மறுமலர்ச்சிக் கருத்துக்களில் அவர் நாட்டம் காட்டுகின்றார். வேதாச்சலம் என்ற பெயரை தமிழ் மாற்றம் செய்து மன்றமலை அடிகள் என வைத்ததுபோல, இத்தாலிய மதப்போதகர் பொஸ்கி அவர்கள் தமிழ் நாட்டிற்கு வந்து தமிழ் கற்ற போது தமிழரால் கவரப்பட்டு ' தைரியநாதசுவாமி ' என்றழைக்கப்பட்டார். தனித்தமிழ் இயக்கத்தின் தூய நடத்தைகள் கண்டு தனது பெயரைத் தனித்தமிழுக்கு 'வீரமாமுனிவர்' என மாற்றிக் கொண்டார். இத்தகைய கருத்துக்களால் குமரிவேந்தன் கவரப்பட்டார். இதற்கு இந்தியாவில் காணப்பட்ட அறிஞர்கள் காரணமாக இருந்தனர். பொருள் தேடி அலையும் உலகில் 'தமிழின் தூய நிலை வேண்டி' தேடினார். தேடிக்கொண்டே இருக்கிறார். தன் மகேந்திரராசா என்ற பெயரை தூய தமிழுக்கு மாற்றி 'குமரிவேந்தன்' எனவும், தனது மனைவியின் பெயரான புனிதலீலாவதி என்ற பெயரை மாற்றி 'நல்லினி' எனவும் தனது பிள்ளைகளுக்கான பெயர்களை மாற்றியதோடு இல்லாமல் பிள்ளைகளின் திருமண வைபவங்களை தூய தமிழ் மரபு அடிப்படையில் நிகழ்த்தினார். தமிழன் எப்படி வாழ்ந்தான் என்பதற்கு அடிப்படையாக குடும்பி வளர்த்து வேட்டி சால்வையோடு என்றும் தரிசிக்கும் ஒருவராக மாறிய குமரிவேந்தனை ' குடும்பி வேந்தன் எனவும் அழைப்பர்.

இந்நிலையில் 'தான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்று நினைத்த குமரிவேந்தன் அவர்கள் தம் தொடர்ச்சியான அறிவுத்தேடலின் பயனாக 2010


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் முனைவர் திருமாறன் அவர்கள் தலைமையில் அவரது மகனின் திருமணத்தின் போது 'பெய்யெனப் பெய்யும் மழை' என்ற நூலை கோயம்பேடு சென்னையில் வெளியிட்டு வைத்தார். அதன் தொடர்ச்சியாய் 2011 இல் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மன்றத்தில் பெய்யெனப் பெய்யும் மழை. ஒருங்கிருக்கை (யோகாசன) நெறி, தமிழ் நாட்காட்டி ஆகியவற்றை வெளியிட்டார். இந்த தமிழ் நாட்காட்டி தமிழ் பேசும் இடம் எங்கும் செல்வாக்குப் பெற்று காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இத் தமிழர் நாட்காட்டியால் கவரப்பட்டே இந்திய துணைத்தூதர் அதிகௌரவ நடராஜா அவர்கள் குமரிவேந்தனை தேடிக் கண்டறிந்து நட்புரிமை பூண்டார். 2013 இல் கிளிநொச்சி பிரதேச சபை மண்டபத்தில் மதுரை எரிகிறது. தமிழியல் சான்றோர் பகுதி 1, அகனின் விழிப்புக் கதைகள் என்ற நூல்கள் வெளியிடப்பட்டதுடன் இவ்வாண்டே குமரித்தமிழ்ப்பணி மன்றமும் தோற்றுவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 2015 இல் உலக உயர் தனிச்செம்மொழி செந்தமிழ், தமிழ் இலக்கிய, இலக்கண (ஓர் அறிமுகம்) தமிழர் மெய்யியல் கோட்பாடு (திருக்குறள் ஔவை நூல்கள்) ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டது. அதைத் தொடர்ந்து 2017 இல் நெடுந்தீவு பிரதேச மண்டபத்தில் தமிழியச் சான்றோர் பகுதி 11.111 வெளியிடப்பட்டது. அது மாத்திரமல்லாமல் நெடுந்தீவின் மூத்த குடிமக்களை கௌரவித்து அவர்களைப் பெருமைப் படுத்தியதும் பாராட்டுக்குரிய விடயம்.

அவுத்திரேலியாவில் சிட்னி நகரிலும், இலங்கையிலும், இந்தியாவிலும் பல கௌரவப் பெயர்களைத் தனதாக்கிக் கொண்ட போதும் எந்தவிதப் பெருமையும் இல்லாது, ஆதி திராவிட நடத்தையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு தொடர்ந்து தேடலுக்கான வாசிப்பில் ஈடுபடுவதும், அவற்றைப் பகிர்ந்து கொள்வதும் அவரது பணியாக காணப்படுகின்றது. புராதன தமிழ் மக்களின் வாழ்வியல் அம்சங்கள் உயர் தரமானவை, அவை கடற்கோள்களால் இயற்கை அனர்த்தங்களால் அழிவு பெற்று விட்டது. இன்று கண்டதே காட்சி என்றும், தானே அறிஞன் என்றும் எண்ணிக்கொண்டு தலைகீழாக நடக்கும் தமிழர்களின் போக்கை கண்டிக்கும் வகையில் அவரது அங்கலாய்ப்புக்கள் காணப்படுகிறது.

தாய்மொழி என்பது தனியாக ஓர் ஊடகம் மட்டுமல்ல 'அது ஒரு பண்பாட்டுக் காவி' அந்த மொழியின் புராதனமானவர்கள் எங்கள் மூத்த தமிழர்கள் எங்கள் தமிழ்மொழி ஆதிமொழி, அதை ஆய்வுகள் மூலம் நிரூபிக்க முயலும் குமரிவேந்தன் அவர்கள் வரலாற்று ஆதாரங்களுடனும் நவீன மரபணுப்பரிசோதனை முறை மூலமும் நிரூபிக்க முயலுகிறார். ' காற்றுக்கு பறக்கும் கடதாசிகள் போல் தமிழர்கள் வாழாது தம் பண்டையப் பெருமையை உணர்ந்து உயர்வு பெற்று வீராப்போடு வாழப்பழகுங்கள் என்றவாறு அவர் குறிப்பிடும் விடயங்கள் இன்றைய தமிழரை சிந்திக்க வைக்கத்தக்கவை.

எந்த எதிர்பார்ப்பும் இல்லாது தன்னினத்தின், மொழியின் பெருமைக்கு அயராது உழைக்கும் திரு. குமரிவேந்தன் அவர்களின் பணி தொடர வேண்டும். அறியாமை விஞ்சி விடுதலை தவறிக்கெட்டு பாழ்பட்டுக் கிடக்கும் தமிழ் சமூகத்திற்கு அவரது அறை கூவல்கள் உரம் தரட்டும். விழிப்புணர்வடைந்த ஒரு தமிழர் சமூகத்தை அவர் அகக் கண்களால் காணும் முயற்சி வெற்றி பெற்று நிசக் கண்களால் காணும் அந்த காலத்திற்காக அயராது உழைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்லத்தம்பி மகேசு (நெடுந்தீவுமகேசு)
மேனாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்

## ஓங்கட்டும் குமரித்தமிழ்ப்பணி

மண்ணும் வளமும் மணக்கும் வகைசீர்

மலர்ந்தவனப்பூக்கள்.

எண்ணும் எழுத்தும் இயைந்தேநடக்கும்

எழில்சேர் மண்மனைமக்கள்.

கண்ணும் கருத்தும் கவரும் தோற்றம்.

கலைசூழ் தமிழ்வாழ்க்கை.

வண்ணம் நெடுந்தீவதன்தாள் பணிந்தே.

வணங்கிச் செயல் தேர்ந்தோன்.

சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த மூத்தவர்கள்

எங்கள் குலப் பெருமைஎடுத்தாண்டுநின்றவர்கள்.

நடுவூர் நெடுந்தீவின் நலம் பெருகவாழ்ந்தவர்கள்.

நாகலிங்கம் வைத்திலிங்கம் நாடேற்றும் தந்தையவர்

தேடரியஉயிர் அன்னை சின்னத்தம்பி நாகமுத்து

திசைபோற்றும் அவர் மகவுதிகழ் மகேந்திரராசன்.

செய் கருமம் பொன் குவிக்கசேயெனவே வந்துதித்தோன்.

எங்கள் தவப்புதல்வன் எழிலோடறிவுடையான்.

இலங்கைக் குமரிவேந்தன் இவர்தம் உயர்வுரைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கும் பலபெயர்கள் இசைக்கும் புகழ்விரிக்கும்
செந்தமிழன்,தமிழ்ஐயா,குடும்பிவேந்தன் வாழும்
சிந்தைக்கினிய சிறப்புரைக்கும் பெயர்கொண்டோன்.

அமெரிக்கன் மிசன்பள்ளிஆரம்பக் கல்விதர
தமக்குரிய இடைநிலைக் கல்வி நெடுந்தீவுனுயர்
பள்ளியதில் பண்புயரக் கற்றார் தொடர்கல்வி
ஏழாம் வகுப்பிலிருந்து எழுச்சிதரு உயர்கல்வி.
தாழாது க.பொ.த உயர்சித்தி யாழ்ப்பாணக்
கல்லூரி வாழ்த்தக் கற்றார் பெருமைபெற்றார்

எல்லோர் கவனத்தும் ஏற்றமுற்றார் தோற்றமுற்றார்.
பல்கலைக் கல்விப்பேர் பட்டம்பொறியியலில்
மொறட்டுவைப் பல்கலைக் கழகத்தே
கற்றகல்விப்பேர் விளங்க இலங்கை மின்சாரசபை
மின்பொறியியலாளரென மேலானார் பண்பாளர்.
விவேகமிக்க மங்கைநல்லாள் வேலுப்பிள்ளை புனிதலீலாவதி
சிநேகமிக்க மனைவாழ்வில் சேர்ந்தாள் சுகம் கனித்தாள்.

உறவுக்குச் சகோதரர்கள் உரிமைக்குப் பிள்ளைகளே.
பெருமைக்குள் முன்னேறி பீடுநடை போட்டினித்தார்.
அமிழ்தாம் மொழிவிளங்க தமிழ்நாட்காட்டி செய்தார்
அழகுபுனிதம் அகச்சீர் தரும் பலநூல்
தந்தார்புகழ் சிறந்தார் தமிழ்போற்றும் சீராளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கும் குமரித்தமிழ் மன்றம் இயற்றிவைத்தார்.
துலங்கும் தமிழின் தூய்மை பெருக்கவந்தோன்.
உலகத் தமிழ்மொழிநிலைத் தொளிரும் வகைதெரிந்தோன்.
கிறீத்தவரின் தமிழ்கொடை நூல்தந்தே தவமியற்றி
நிலைக்கும் மொழிதமிழின் நெறியுரைத்த பேரறிஞன்.

மூத்தமொழியெம் தமிழைப் போற்றும்
முன்னோர் முதலமைச்சர்
தேர்ந்தவிருதைப் பெற்றே சிறந்தோன்
செயலால் தமிழ் மாறன்
ஆர்த்தான் கலாபூசணவிருதால்
அழியா இலக்கியப் பேர்.
சேர்த்தான் குமரிவேந்தன் தமிழ்நூல்
செய்தான் உல கேற்ற

கலைக்கிளிவிருது கரைஎழில் விருது
கலைவல்லார் விருது
மேலைத்தேயத் தமிழார் வியக்க
மேதினிகொண்டாட
நூல்கள் பலவும் படைத்தான் களித்தான்
நுகர்ந்தோர் புகழ்ந்தேற்ற
காலம் களிக்கக் கற்றோர் புகழ்ந்தார்
கலைமகள் வாழ்த்துகிறாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மதிப்பிற்குரிய திரு.த.குருகுலராசா,
மேனாள் கிளி/வலய கல்விப் பணிப்பாளர்,
மேனாள் கல்வி அமைச்சர்,
வட மாகாண சபை உறுப்பினர்.

## வாழ்த்துரை

குமரிவேந்தன் அவர்கள் தான் உருவாக்கிய கழகத்தினூடாக தமிழ்பேசும் உலகத்திற்கு நூல்களைப் படைப்பதன் மூலம் பல செய்திகளை சொல்லிவந்துள்ளார். ஐந்து வருடகாலத்திற்கு மேலாக குமரிகழகத்தினூடாக தனது சொந்தப்படைப்பாக பத்து நூல்களை வெளியிட்டுள்ளார்.

தமிழ் ஒரு வாழும்மொழி எனும் அடிப்படையில் அதனைப் பேணிப்பாதுகாத்துக் கொள்ளும் பொறுப்புடைமையை தமிழ் பேசும் எல்லோரும் செய்து கொள்வதில்லை. ஆயிரத்தில் ஒருவர் கூட இவ்வாறான எழுத்துப்பணியை செய்வதில்லை. இது இவ்வாறிருக்க ஐந்து ஆண்டுகளில் பதினொரு நூல்களை இவர் வெளியிட்டுள்ளார். பல ஏடுகளை, அகராதிகளை, இலக்கண நூல்களை ஆய்வறிக்கைகளைப் படித்து ஆய்ந்தறிந்து தமிழ்மொழிசார் படைப்பினை வெளியிடுவது சுலபமான பணியன்று. குமரிவேந்தன் அவர்கள் இக் கடினமான பணியைத் துணிந்து செய்திருப்பது போற்றுதற்குரியது. இவரது எழுத்தாக்கங்களுக்கூடாக இவரது தமிழ்ப் புலமை, தமிழ்மொழிப் பற்று, தமிழோடு வாழ்தல், தமிழுக்குத் தலைவணங்குதல், தமிழின்பால் ஏற்பட்ட ஈர்ப்பு, தமிழ்த் தொண்டாற்றிக் கொண்டிருக்கும் விருப்பு, தமிழ்மேல் கொண்டுள்ள மோகம் ஆகியவற்றைக் காணக்கூடியதாகவுள்ளது. படைப்பாளிக்கு தனது பணியின் வலிதெரியும். எல்லோராலும் செய்யமுடியாத சிறப்பான பணியை கடந்த ஐந்து ஆண்டுகளாக இவர் ஆற்றி வருகிறார்.

தனது காலம், நேரம், பொருள், குடும்பம் என்பவற்றை தமிழுக்காக உகந்தளித்து வெளியிடப்படும் தமிழ் எழுச்சி, சமய பண்மையியமும் அக இகமும் என்ற இரு நுல்களை வெளியிட்டுவைக்க, அவரதுபணிக்காக அவரை வாழ்த்துகிறேன். குமரிவேந்தனின் தமிழ்ப்பற்றும் நாட்டுப்பற்றும் மேலும் விரிவடைந்து, தொடரும் காலங்களில் தமிழுக்காக மேலோங்கிய சேவைசெய்ய எனது பணிவான வாழ்த்துக்கள்.

த.குருகுலராசா,
வடக்குமாகாண சபை உறுப்பினர்,
கானான்,
தருமபுரம்,பரந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாண்புமிகு திரு.சி.சிறீதரன்
நாடாளுமன்ற உறுப்பினர்,
யாழ் மாவட்டம்.

# அகவை ஐந்தில் தமிழுக்கு அணிசெய்யும் குமரித் தமிழ்ப்பணி மன்றம்

தமிழன்னையின் வளர்ச்சிக்காக தளராது உழைக்கும் தமிழார்வலர்களின் முயற்சியால், முனைப்பாக தமிழ்ப்பணி ஆற்றும் அமைப்புக்களுள் மொழி, பண்பாட்டு மீட்பு, காப்பு, வளர்ச்சி என்பவற்றை தாரக மந்திரமாக்கி, கிளிநொச்சியைத் தாயகமாகக் கொண்டு இயங்கிவரும் "இலங்கை குமரித் தமிழ்ப்பணி மன்றம்" தூய தமிழ் மொழிப் பிரயோகத்தை வலியுறுத்தும் வண்ணமும், மொழி, இன அடையாளங்களை மீட்பது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும் நூல்களை வெளியிட்டுவைப்பது வழமை.

அந்தவகையில் தமிழ்ப்பணி மன்றத்தின் தமிழுக்கான பணிகள் ஆரம்பித்து ஐந்து ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு எம் மண்ணின் வேர்களான மூத்தோர் கௌரவிப்பும், இரு பெரும் நூல்களின் வெளியீடும் ஈடேறவுள்ளதை எண்ணி உளப்பூரிப்படைகிறேன்.

பெய்யெனப் பெய்யும் மழை, ஒருங்கிருக்கை நெறி, தமிழியற் சான்றோர், அகனின் விழிப்புக் கதைகள், உலக உயர்தனிச் செம்மொழிச் செந்தமிழ் போன்ற ஏராளமான நூல்களின் வரிசையில் **"தமிழ் எழுச்சி"**, **"சமயப் பன்மையியமும் அகஈகமும்"** என்னும் இரு நூல்களும் இன்றைய தமிழரின் இருப்பழிந்து போகும் நிலையின் ஏதுக்களையும், அவ் அழிவுப் பாதையை விட்டு நீங்கி தமிழும், தமிழரும் தம் நிலை உயர்த்த வேண்டியதை உணரவேண்டிய அவசியத்தையும் உணர்த்தும் வகையில் வெளியிடப்படவுள்ளமை விரும்பத்தக்கதே!

தமிழ் மொழிக்கும் இனத்திற்கும் உரம் சேர்க்க உழைக்கும் குமரித் தமிழ்ப்பணி மன்றத்தின் அரும்பணிகள் மென்மேலும் சிறந்திட இவ் அகவைநாளில் வாழ்த்துக்கள் கூறும் அதேவேளை, விழா சிறக்கவும், நூல் வெளியீடு முழுமைபெறவும் முழுமனதாய் வாழ்த்திநிற்பதில் பேருவகை அடைகின்றேன்.

சிவஞானம் சிறீதரன்.
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
இணைத்தலைவர் – மாவட்ட
ஒருங்கிணைப்புக்குழு
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ශ්‍රී ලංකා රතු කුරුස සමාජය
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
SRI LANKA RED CROSS SOCIETY

Delft Division
Delft, Jaffna
Sri Lanka.
Tel : 94 21 56 81 409

**பசுந்தீவு பெற்றெடுத்த மைந்தனின்
மலர் மலர வாழ்த்துகின்றேன்.**

தனிநாயக முதலியார் வழித்தோன்றலில் நெடுந்தீவில் புகழ் பெற்று விளங்கிய அமரர் திரு. திருமதி . இடா. நாகலிங்கத்தின் பேரனான நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் தற்போது கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட பாராட்டுக்குரிய கலாபூசணம் வைத்திலிங்கம் மகேந்திரராசா (குமரிவேந்தன்) அவர்கள் ஆரம்பக் கல்வியை நெடுந்தீவில் கற்று, தொடர்ந்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும், பின்பு உயர் கல்வியை பல்கலைக் கழகத்தில் கற்று மின்சார பொறியியலாளராக தனது பணியில் திறம்பட சேவையாற்றியவர். சேவையில் நன் மதிப்பையும் பெற்றவர். நெடுந்தீவு மங்கையை கரம் கோர்த்து நற்பிள்ளைகளை பெற்றெடுத்து அவர்கள் சீரும் சிறப்போடும் சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிற்காலத்தில் இவர் தமிழ் மீது கொண்ட ஆர்வத்தினால் " குமரித் தமிழ்ப்பணி மன்றம்" என்ற அமைப்பை உருவாக்கி தனித்தமிழ் பாவனையை ஊக்குவித்து திறம்பட செயற்பட்டு வருகின்றர். அந்த வகையில் உலகிலேயே முதன் முதலாக தமிழ் நாட்காட்டியை வடிவமைத்து தொடர்ந்து அச்சிட்டு வருகிறார். தமிழிலே நாட்காட்டியை பார்த்த யாழ்ப்பாண இந்திய துணைத்தூதுவர் பெரும் மதிப்பிற்குரிய ஆறுமுகம் நடராசா அவர்கள் நெடுந்தீவு மக்கள் மீது கொண்ட அன்பினால் மிக்க மகிழ்ச்சியடைந்து குமரிவேந்தன் அவர்களை வரவழைத்து பாராட்டியதும் தமிழ் மக்களின் பெருமையை உலகெங்கும் பறைசாற்றக் கூடியதாக இருந்தது.

அந்த வகையிலே தனித்தமிழ் குமரிவேந்தன் அவர்கள் பல்வேறு தேவைகளைக் கொண்ட தமிழ் நூல்களை எழுதி வருகின்றார். அதன் தொடராக தற்பொழுது வெளியிட இருக்கின்ற " தமிழ் எழுச்சி " "சமய பன்மையியமும், ஆன்மீகமும்" என்ற இரு மலர்களையும் மக்கள் பார்வைக்கு மலரவிடுவதையிட்டு மகிழ்ச்சியடைந்து பாராட்டுகின்றோம். இனி வரும் காலங்களிலும் இவரது தமிழ்ப்பணி தொடர நெடுந்தீவு மண்ணின் மைந்தர்கள் சார்பாக மனதார வாழ்த்துகின்றோம்.

(எற்வேட், அருந்தவசீலன் யே.பி)
தலைவர் இலங்கை செஞ் சிலுவைச் சங்கம், நெடுந்தீவுப் பிரிவு
பொருளாளர் இ.செ.சங்கம் யாழ் கிளை
தலைவர் நெடு நல்லிணக்கத்துக்கும், சமாதானத்துக்குமான குழு

E. Arunthavaseelan
Hony. Chairman
Sri Lanka Red Cross Society
Delft Division, Delft

The Sri Lanka Red Cross Society ( SLRCS) is a member of the International Red Cross and Crescent Societies made u of National Societies in 178 Countries making it the Largest humanitarian organization in the world. SLRCS works in close cooperation with International Federational and International Committee of the Red Cross.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக் குமரித் தமிழ்ப்பணி மன்றத்தோற்றுவிப்பு – 2013 நிகழ்வும் / நூல்கள் வெளியீடும்

இம்மன்றமானது தி.ஆ.2044 சுறவத்திங்கள் 14 ஆம் நாள் (கி.பி.2013 -01 -27) ஞாயிற்றுக்கிழமை கரைச்சிப்பைந்திர (பிரதேச) சபை மண்டபத்தில் அமரர்.திரு.இரா.தானியல் நாகலிங்கம் அரங்கில் திரு.நா.வை.குமரிவேந்தன் (மகேந்திரராசா) அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டது. இவ்வரங்கில் சான்றோர் நன்மதிப்பு (கௌரவிப்பு)ம் இலங்கைக் குமரித் தமிழ்ப் பணி மன்றத்தின் வெளியீடாக இதன் நிறுவநர் யாத்த மூன்று நூல்களான "அகனின் விழிப்புக் கதைகள்", "மதுரை எரிகிறது", "தமிழியச் சான்றோர் பகுதி – 1" என்ற நூல்களும், தமிழ்மணி முனைவர் திரு அகளங்கன் தலைமையில் வெளியிட்டு வைக்கப்பெற்றது.

விழாவின் சிறப்பு விருந்தினர்களாக முனைவர். பண்டிதர். திரு.செ.திருநாவுக்கரசு, (மேனாள் கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியின் துணை முதல்வர்) சரைச்சிப்பைந்திர (பிரதேச)ச் செயலர் திரு.கோ.நாகேசுவரன், மேனாள் கிளிநொச்சிக் கல்விப்பணிப்பாளர் திரு.த.குருகுலராசா, கொழும்பு றோயல் கல்லூரியின் துணை முதல்வர் திரு.மா.கணபதிப்பிள்ளை, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் திரு.ச.இலலீசன் அவர்களும், கிளி/நடுவக (மத்திய)க் கல்லூரி ஆசிரியர் திரு.அ.சத்தியானந்தன் அவர்களும், கவிஞரும் அரச வேளாண் பண்ணை முகாமையாளரும் விரிவுரையாளருமான திரு.க.கணேசலிங்கம் அவர்களும் கலந்து வெளியீடு மதிப்பீட்டு உரைகளை வழங்கி சிறப்புச் செய்தனர்.

அத்தோடு வரவேற்பு நடனத்தை மழலையர் நி.தளிரினி வழங்க, வரவேற்புரையை கவிஞர் திரு.க.கணேசலிங்கம் கவிதை நடையில் வழங்கினார். முனைவர் தமிழ்மணி திரு.அகளங்கள் அவர்களின் தலைமையுரையைத் தொடர்ந்து மண்ணின் மைந்தர்களான சான்றோர் நன்மதிப்புச் செய்யப்பட்டனர். அந்த வகையில் கரைச்சிப் பகுதியில் 1948 களிலிருந்து தொடர்ந்து வசித்து வருபவரும் அன்றிலிருந்து இன்று வரை உழவுத்தொழிலையே செய்து வருபவருமான திரு.க.பசுபதிப்பிள்ளை அவர்களுக்கு "உழவர் கோன்" என்ற பட்டம் அளித்து பொன்னாடை போர்த்தி நன்மதிப்புச் செய்யப் பெற்றார்.

திரு.கு.ஆனந்தராசா (திருநகர்), திருவாட்டி.தே.நாகம்மா (யெயந்திநகர்), ஆகியோர் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக கோவில், இன்பியல், துன்பியல் நிகழ்வுகளின் போது உடல் தொண்டோடு திருமறை ஓதி வருவதாலும் அவர்களுக்கும் "கணீர்த்தமிழ் அருளோசை" என்ற பட்டமளித்து பொன்னாடை போர்த்தி சான்றிதழ் வழங்கி நன்மதிப்பு செய்யப் பெற்றனர். கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக பதிப்புத் துறையில் ஈடுபட்டிருக்கும் வவுனியா வாணிகணனி பதிப்பக உரிமையாளர் திரு.பொ.செல்வநாயகம் அவர்களுக்கும் "பதிப்புப் பொறை" என்ற பட்டமளித்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னாடை போர்த்திச் சான்றிதழ் வழங்கி நன்மதிப்புச் செய்யப்பட்டார்.

அத்தோடு சிறுகதை எழுத்தாளர் கலைவல்லார் (கலாபூசணம் ) திரு.இ.நடராசா, ஊடகவியலாளர் கலைவல்லார் திரு.க.இரத்தினசிங்கம், விசுவமடுவைச் சேர்ந்த முற்போக்குச் சிந்தனையாளர், குமுகாயத் தொண்டருமான திரு.ஆ.தருமலிங்கம் ஆகியோர் பொன்னாடை போர்த்திச் சான்றிதழ் வழங்கி நன்மதிப்புச் செய்யப் பெற்றனர். அத்தோடு கடின உழைப்பால் உயர்ந்தவர்களான திரு.ம.தெய்வேந்திரம், திரு.அ.சண்முகநாதன் என்போருக்கும் பொன்னாடை போர்த்தி சான்றிதழ் வழங்கி நன்மதிப்புச் செய்யப் பெற்றனர். உருத்திரபுரப் பகுதியிலே பலவித பெறுமதிமிக்க தொண்டுகளை ஆற்றிவரும் திரு.மு.அருளம்பலம் (மேனாள் பள்ளி முதல்வர் ) அவர்களுக்கும் பொன்னாடை போர்த்தி சான்றிதழ் வழங்கி நன்மதிப்புச் செய்யப் பெற்றனர்.

நூல்களின் வெளியீட்டுரைகளை முனைவர் திரு.செ.திருநாவுக்கரசு, திரு.ச.இலலீசன், திரு.அ.சத்தியானந்தன் ஆகியோர் வழங்கினர். சிறப்புரையை திரு.கோ.நாகேசுவரன் கரைச்சிப் பைந்திரச் செயலரும், வாழ்த்துரையை திரு.த.குருகுலராசா அவர்களும் நன்றியுரையை இம்மன்றத்தின் ஆளுநர்களில் ஒருவரும் கரைச்சிப் பைந்திரசபைத் தலைவரும், சமாதான நீதவானும் ஆன திரு.நா.வை.குகராசா அவர்கள் வழங்கினார். நிறுவுநர் தமது உரையில் இந்த அரங்கின் பெயர் பற்றிய விளக்கத்தையும் வழங்கினார்.

நெடுந்தீவின் கல்வி வளர்ச்சியில் மிக அக்கறைப்பட்ட ஒருவர் அமரர் திரு.தானியல் நாகலிங்கம், நெடுந்தீவின் நடுவில் அமைந்துள்ள நெடு.உயர்நிலைப்பள்ளிக்கான காணியையும் விளையாட்டுத் திடலுக்கான காணியையும் தனது உறவினர்களின் ஒப்புதலோடும் வழங்கி ஆங்கிலப் பள்ளி ஒன்று உருவாக முயன்றவரும், தனது வீட்டில் 'கட்சன் வாசிகசாலை' ஒன்றை உருவாக்கி அயலவர் கல்வி கற்க உறுதுணையாய் இருந்தவரும், நெடுந்தீவின் பனை தென்னை வளர்ச்சி, மந்தைவளர்ப்புப் பற்றியும், நெடுந்தீவு மக்களின் கடல் போக்குவரவிற்காக குறிகட்டுவான் என்ற இறங்கு துறை உருவாக தூண்டுதலாய் இருந்தவரும் ஆவார் என புகழாரம் சூட்டினார்.

அத்தோடு வெளியிடப்பெற்ற மூன்று நூல்களின் முதற்படிகளை திரு.மு.அருளம்பலம், திரு.ம.தெய்வேந்திரம், திரு.அ.சண்முகநாதன் பெற்று சிறப்புச் செய்தனர். நூலின் சிறப்புப் படிகளை நண்பர்கள் ஊரவர்கள், உறவுகளுக்கு வழங்கப்பட்டது. இறுதி நிகழ்வாக கிளிநொச்சி கல்வி வலய, துணுக்காய் கல்வி வலய உயர்நிலைப்பள்ளி, கல்லூரி நூலக பயன்பாட்டிற்கான நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (நிழற்படங்கள் இணைக்கப்பட்டுள்ளது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கைக்குமரித் தமிழ்ப் பணிமன்றம் தோற்றுவிக்கப்பட்ட பின் இதன் நிறுவநர் தினக்குரல் செய்திதாளுக்கு வழங்கிய செவ்வி ஆனித்திங்கள் 16ஆம் நாள் 2013அன்று வெளிவந்தது. இதனை இங்கு மீள் பதிப்புச் செய்கின்றோம்.**

இலங்கை மின்சார சபையில் மின் கண்காணிப்பாளராயிருந்து ஓய்வு பெற்றவரும் தனிநாயக அடிகளார் சிக்கனக்கடன் கூட்டுறவுச் சங்கப் (யாழ்ப்பாணம்) பொருளாளராக, கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கச் செயலாளராக (2005-2008) இருந்தவரும், 2011இல் மறைமலை அடிகளாரை அடியொற்றி தனித்தமிழில் ஆக்கங்கள் செய்யப்பட வேண்டும் என்னும் கொள்கைப் பிடிப்பில் பெய்யெனப் பெய்யும் மழை, ஒருங்கிருக்கை(யோகாசன) நெறி ஆகிய நூல்களினூடாகத் தனித் தமிழில் (வடமொழிச்சொற்கள்,கிரந்த,ஆங்கில எழுத்துக்கள் தவிர்த்து) எழுத முடியுமென்பதையும், தமிழர்நாள்காட்டி ஒன்றை அறிமுகப்படுத்தி நா.வை.மகேந்திரராசா எனப்பட்ட குமரிவேந்தன் கடந்த யெனவரி 27 இல் கிளிநொச்சி பிரதேச சபை மண்டபத்தில் அமரர் இரா. தானியல் நாகலிங்கம் அரங்கில் இலங்கைக் குமரித் தமிழ்ப் பணி மன்றம் என்ற புதிய அமைப்பையும் தொடக்கி அதன் முதல் வெளியீடாக தான் ஆக்கிய மூன்று நூல்களான அகனின் விழிப்புக் கதைகள், மதுரை எரிகிறது, தமிழியச் சான்றோர் ஆகிய நூல்களையும் தமிழர் நாட்காட்டி திருவள்ளுவர் ஆண்டு (தி.ஆ) 2044(கி.பி. 2013) ஆகியவற்றையும் வெளியிட்டதோடு சான்றோர் கௌரவிப்பு நிகழ்வும் நடத்தப்பெற்றது. இவருடனான நேர்காணலை இங்கு தருகின்றோம்.

***01. கேள்வி***

**நீங்கள் நிறுவிய புதிய அமைப்பிற்கு குமரித் தமிழ்ப்பணி மன்றமெனப் பெயரிடக் காரணமென்ன?**

***பதில்***

15 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இலங்கையும் இந்தியாவும் ஒரே நிலப்பரப்பாக இருந்ததாகவும் கூறப்படுகிறது. அத்தோடு மாந்தவியல், குமுகவியல், மொழியியல், நிலவியல் நூலாரும் கோண்டவன அல்லது லெமூரியா அல்லது குமரி (கிழக்கு ஆபிரிக்காவுடன் அண்மித்ததாய்) என்றொரு நிலப்பகுதி குமரி (இந்து)மாவாரியிலிருந்து கடல் கோள்களால் நீருள் மூழ்கிவிட்டதாகவும் கூறுகின்றனர்.

இந்தக் குமரி பெருநிலப் பரப்பில் தான் முதல் மாந்தன் தோன்றினானென்றும் உலக முதல் மொழியாகிய தமிழ் இங்கே தான் முகிழ்ந்ததென்றும் மொழியியல் அறிஞர்களின் (பாவாணர் போன்ற) ஆய்வுகள் செப்புவதால் அந்த 50,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட குமரிமாந்தரின் நினைவாக இவ்வமைப்பை நிறுவியுள்ளேன். இங்கு சாதி, சமய, பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் கட்டாயமாக இருந்திருக்க முடியாது.

***02. கேள்வி***

**குமரித் தமிழ்ப்பணி மன்றத்தின் நோக்கு இலக்கு என்ன?**

***பதில்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரி மாந்தரிடம் சாதியில்லை, சமயமில்லை, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளில்லை, ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்னும் கொள்கை. ஒரே மொழி, இவற்றை அடியொற்றி நாம் பேசுகின்ற தமிழ், நாம் எழுதுகின்ற தமிழ், எம்மை அடையாளப்படுத்துகின்ற எமது பெயர், எமது வழிபாட்டு மொழி எல்லாமே தனித் தமிழாய் இருக்க வேண்டும் என்பதே எம் நோக்கம். இது தனிநாயகம் அடிகள் பிறந்த 100 ஆவது ஆண்டு.இன்று தமிழ் செம்மொழியானதற்கு இவருமொரு உந்து ஆற்றலென்றே கூற வேண்டும். இவர் நமது பைந்திர (பிரதேச) பேச்சுவழக்கை (யாழ்ப்பாண,வன்னி, மட்டக்களப்பு, மலையக, இசுலாமிய போன்ற) மாற்றி ஒரு பொது ஒலிப்பினூடாக ஒரே மாதிரியான பேச்சு வழக்கை உருவாக்க முயன்றதாக சில அறிஞர்கள் கூறுவர்.

அவற்றையே நாமும் முன்னெடுக்கின்றோம். இயன்றவரை மேடைப் பேச்சுத் "தமிழும், எழுத்துத் தமிழும் 90 வீதம் தமிழ் இலக்கண, மரபு வழிபட்டதாய் இருப்பதால் மகிழ்வடையலாம். ஆனால், சிலரின் சூழ்ச்சியால் தமிழின் தூய்மை கெட்டு பல கிளைமொழிகள் தோன்றும். இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்."

***03. கேள்வி***

**இதைச் சீர் செய்ய என்ன செய்ய வேண்டும்? உங்கள் இந்த முயற்சி வெற்றி அளிக்குமா?**

***பதில்***

இதற்கு நாம் வீதியில் இறங்கிப் போராட வேண்டியதில்லை. பகுத்தறிவு, தாய்மொழி உணர்வு, அதில் பற்று, தவறென்று தெரிந்த பின் அதைத் திருத்திக் கொள்ளும் மனப்பக்குவம், போலிமைகளுக்கு இடம் தராமை போன்றன இருந்தால் போதுமானது.

எனக்குப் பெற்றோர் இட்டபெயர் மகேந்திரராசா. இது வடமொழிப் பெயரெனத் தெரிந்ததால் மகேந்தரம் என்னும் வடமொழிப் பெயர் குமரி என்றும், ராசா என்ற வடமொழிப் பெயர் வேந்தன், மன்னன், கோன்,அரசன் என்றும் தமிழ்ப்படுவதால் குமரிவேந்தன் என மொழிபெயர்த்து வைத்துக் கொண்டேன், எனது குடும்ப உறுப்பினர்களின் பெயர்களையும் தமிழ்ப் பெயர்களாக மொழி பெயர்த்தோம்.

இன்று நாம் பயன்படுத்துகின்ற ஐந்திரங்கள் (பஞ்சாங்கம்) தமிழ்ச் சொற்களுக்கு முதலில் வரக்கூடாதென இலக்கண மரபுப்படி தவிர்த்த ட, ல, ர, ற, போன்ற தமிழ் எழுத்துக்களையும் ஜ, ஸ, ஹ, ஸ்ரீ போன்ற கிரந்த வேற்று மொழி எழுத்துகளையும் எம்மை அடையாளப் படுத்துகின்ற பெயர்களின் முதலெழுத்தாக வைக்க (யூனூன் தமிழாம்) ஐந்திரத்திற்காகவே உயிர் வாழும் தமிழரைத் தூண்டுகின்றது.

அத்தோடு இந்த ஸ்ரீ எழுத்தை வண்டி இலக்கத் தகட்டிலே கூட எழுத எதிர்ப்புத் தெரிவித்து 55 ஆண்டுகளுக்கு முன் சிறை சென்று மீண்டவர் பலர் இன்று உணர்ச்சியே அற்ற பலர் (வரலாறு தெரியாதவர்கள்) தமது பெயரின் முன் இந்தச் சிறி (ஸ்ரீ) யை எழுதி ஏதோ பல்கலைக்கழகம் சென்று முனைவர் (கலாநிதி) ப் பட்டம் பெற்றவர் போல் களிகூர்கின்றனர். இன்னொரு பகுதியினர் தந்தை, பாட்டனின் பெயரின் முதலெழுத்துகளை ஆங்கிலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தமிங்கில மொழியில்) எழுதி இன்பத்தில் திளைக்கின்றனர். தான் தமிழன், தம் கடவுளர் தமிழ்க் கடவுளர், அவர்களின் தூவித்தொழல் (அர்ச்சனை) தமிழிற்றான் நடைபெற வேண்டும் என்ற உணர்வு உள்ளவனால் எந்தவித இடர்பாடுமின்றி இவற்றைச் சீர்செய்ய முடியும்.

அது மாத்திரமல்லாமல் தமிழ் ஊடகங்கள் குறிப்பாக செய்தித்தாள்கள், சிற்றிதழ்கள், வானொலி, தொலைக்காட்சி, இணையத் தளங்களின் பங்களிப்பு இதில் முதன்மையானது. அத்தோடு பகுத்தறிவுச் சிந்தனையோடும், நடுநிலையோடும் மதச் சார்பின்றி வரும் ஆக்கங்களுக்கு பக்கச் சார்பின்றி அவற்றை வெளிப்படுத்தவும் இவ்வூடகங்கள் முன்வர வேண்டும். இதன் மூலம் சரிதவறுகளைப் புரிந்து கொள்ளும் நிலை உருவாகும். ஒன்றைப் பற்றிய உண்மை தெரிந்த பின், புரிந்து கொண்டபின் அதைச் சீர்செய்ய முயலவேண்டும்.

மாந்தன் மற்றைய உயிரிகளை விட பகுத்தாயத்தக்கவன், அதாவது பகுத்தறிவாளன். எனவே, நாமும் நம் முன்னோரும் வாழையடி வாழையாக விட்ட தவறுகளை நம் பின் வரும் தலைமுறையினரும் தொடர்ந்து கைக்கொள்ள வேண்டுமா? இவையெல்லாம் ஒவ்வொரு தமிழனின் மனதில் உணர்வில் எழுச்சி பெற்றால் வெற்றியளிக்கும்.

### *04. கேள்வி*

**இலங்கைக் குமரித்தமிழ் பணி மன்றத்தின் உறுப்புரிமை பெறத் தேவையான தகுதிகள் என்ன?**

### *பதில்*

இது ஒரு மதச்சார்பற்ற தனித்தமிழ் அமைப்பு. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்னும் அடிப்படையில் அமைந்தது. தற்பொழுது எனது குடும்ப உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப் பட்டுள்ளது. கூடியவிரைவில் இதன் யாப்பு வெளியிடப்படும். உறுப்பினராக பதிவு செய்ய விரும்புவோர் தனித் தமிழ்ப் பெயரைக் கொண்டவராகவும் இணைந்த பின்போ அல்லது அதன் முன்போ தங்கள் குடும்ப உறுப்பினர்களின் பெயர்களைத் தனித் தமிழில் சூட்ட மனங் கொண்டவராகவும் தமதில்லங்களில் நடைபெறுகின்ற இன்பியல், துன்பியல் நிகழ்வுகள் அனைத்தும் வேற்றுமொழி தவிர்த்து தனித்தமிழில் நடைபெறவும் ஒழுக்க (புகைத்தல், மது அருந்துதல், ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற ) வாழ்வு வாழ்பவராகவும் தமிழர் பண்பாட்டு நிகழ்வுகளில் எமது பண்பாட்டுச் சீர் உடைகளையும் அணியவேண்டும் என்பது கட்டாயமான அடிப்படை விதிகள்.

### *05. கேள்வி*

**நீங்கள் வெளியிட்ட நூல்களின், தமிழர் நாள் காட்டியின் உள்ளீட்டை சுருக்கமாகக் கூறுங்கள்.**

### *பதில்*

எனது பகுத்தறிவினூடாக உணர்ந்தவற்றை பிறரும் உணரும்வகையில் எழுத வேண்டும் என்ற அவாவின் மேலீட்டால் மொழிப்பற்று, மொழியுணர்ச்சி, தனிமனித ஒழுக்கம், குமுகாயக் கூட்டுறவு, மாந்தநேயம், உயிரிரக்கம் போன்ற உயிர்த் தன்மைகளைத் தூண்டும் வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்தமிழில் எழுதி வெளியிட்டுள்ளேன், 'அகனின் விழிப்புக் கதைகள்', சாதி, சமய, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் மனித நேயச் செயற்பாடுகளுக்கு இடையூறாய் வருமானால், அவற்றைக் களைந்தெறிய திருக்குறள், தொல்காப்பியவழி கிளர்ந்தெழ வேண்டும் என்பதையும், மதுரை எரிகிறது என்ற நூல் 2000 ஆண்டுகள் முற்பட இருந்தே தமிழனும் தமிழ் மொழியும் எப்படியெல்லாம் இன்று வரை கபடத் தனமாக சிதைத்துச் சீரழிக்கப் படுவதானது தொடர்வதையும், தமிழியச் சான்றோர் என்ற நூல் உண்மைத் தமிழறிஞர் தம்மைத் தூற்றுவார், கொச்சைப் படுத்துவார், குழிபறிப்பார் முன்னும் சோர்ந்து விடாமல், தம் வறுமை நிலையிலும் தமிழ்க் காழ்ப்புணர்வு கொண்டவர் நடுவிலும் தமிழ் வீறுடன் தமிழ் வாழ என்னென்ன செய்தார்கள் என்பதையும் விளக்கியுள்ளேன். தமிழர் நாள் காட்டி: தமிழர் ஆண்டு திருவள்ளுவரின் பிறப்பையும் தைப்பொங்கல் நாளையும் அடிப்படையாகக் கொண்டு, தமிழன்னையை வாழ்விக்க தங்களை ஈகம் செய்த 35 தமிழியச் சான்றோர்களின் நிழற்படங்களுடன் அவர்கள் பற்றிய சிறு குறிப்புகளுடனும் வெளியிட்டுள்ளேன்.

***06. கேள்வி***

**உங்கள் நூல்வெளியீடுகள் பற்றி சொல்லுங்கள்**

***பதில்***

இன்றைய நாள்வரை எந்த அரசியலிலும் ஈடுபட்டவனல்ல. ஆனால், சில தற்குறிகள் என்மேல், என்தமிழ்மேல், இதில் பங்கு கொள்ள இருந்த அறிஞர்கள் மேல் கொண்ட காழ்ப்புணர்வால் நோகடித்து விட்டார்கள். எனது 2011 ஆம் ஆண்டு வெளியீடுகளான பெய்யெனப் பெய்யும் மழை, ஒருங்கிருக்கை (யோகாசன) நெறி ஆகிய நூல்களை (100,000ரூபா பெறுமதியானவை) கிளிநொச்சி, வவுனியா,நெடுந்தீவு (யாழ்) மாவட்டங்களிலுள்ள 32 உயர்நிலைப் பள்ளிகளுக்கு நேரிற் சென்று அன்பளிப்பாக வழங்கியிருந்தேன்.

இம்முறையும் இப்பள்ளிகளுக்கு இவ்வெளியீட்டு நிகழ்வில் நூல்களை அன்பளிப்பாக வழங்க அழைப்பு விடுத்திருந்தேன். இது தமிழ் மாணவரின் நலன் கருதியே செய்யப்பட்டதென்பதை பள்ளிகள் மறந்து புறக்கணித்து விட்டன. குமரித் தமிழ்ப் பணி மன்றத் தொடக்க விழாவிலேயே 'உழவர்கோன், கணீர்த் தமிழ் அருளோசை, பதிப்புப் பொறை' போன்ற சிறப்புப்பட்டங்களை, அகவை முதிர்ந்த, ஒழுக்கமுடைய மேற்குறித்த மக்களுக்குச் சூட்டி, பொன்னாடை போர்த்தி, குமரித் தமிழ்ப் பணி மன்ற நன்மதிப்புச் சான்றிதழ்களையும் வழங்கினோம். அத்தோடு எனது நூல்களை வெளியிட்டோரும் முதற்படிகளை பெற்றுக் கொண்டவர்களும் தம் உடலுழைப்பாலும் உண்மை அறிவாலும் உயர்ந்து சென்றவர்களே, இந்நிகழ்வுகளை ஆண்டுதோறும் செயற்படுத்த குமரித் தமிழ்ப் பணி மன்றம் மனங்கொண்டுள்ளது. தமிழன்னையை வாழ்விக்க விரும்பும் கொடையாளர்களை ஆவலோடு எதிர்பார்க்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*07. கேள்வி*

**தொடர்ந்து எழுதுவீர்களா?**

*பதில்*

நலிவடைந்துள்ள தமிழன்னை நீடுவாழ்வு பெற ஒல்லும் வழியெல்லாம் உழைப்பதை மனதிற் கொண்டு தொடர்ந்து எழுத விரும்புகின்றேன். எனது ஆக்கங்கள் அளவையியல் (எண்-ஏரணம்)வழியில் தமிழ் இலக்கியம், தமிழ் மொழி, தமிழினம், பற்றியதாகவே இருக்கும்.

*08. கேள்வி*

**கடைசியாக என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

*பதில்*

இன்றுவரை இயற்கை கொடுத்த கொடையான துணைவி, பிள்ளைகளின் ஒத்துழைப்போடு இப் பணியைத் தொடர்கின்றேன். இலங்கைக் குமரித் தமிழ்ப் பணி மன்றம் என்ற அமைப்பையும் தொடக்கி இதனூடாக அகவை முதிர்ந்த, ஒழுக்க சீலர்களான உழவர்களை, இல்லத்தரசிகளை தொழிலாளர்களை, தன்னார்வக் குமுகாயத் தொண்டர்களை ஆண்டு தோறும் நன்மதிப்பு (கௌரவிப்பு)ச் செய்யவும், ஒருங்கிருக்கை (யோகாசன) நெறிப் பயிற்சிகளை நடத்தி முடிவில் சான்றிதழ் வழங்கவும் ஆர்வமுள்ளோர் தமிழ் படிக்க தற்போதைக்கு ஒரு தற்காலிக படிப்பகம் அமைக்கவும், தனித்தமிழில் பயனுள்ள தமிழ் ஆய்வுத் தேர்வுகளை நடத்தி பரிசில்கள் வழங்கவும் பயனுள்ள தனித்தமிழ் ஆக்கங்களை ஏற்று அன்புக்குரியவர்கள் நினைவாக வெளியிடவும் அறக் கட்டளைகளை உருவாக்கி அதனூடாக ஆண்டு தோறும் நினைவுப் பேருரைகள் செய்யவும் இந்த அமைப்பு மனங்கொண்டுள்ளது. இவற்றிற்குச் செயல்வடிவம் கொடுக்க நிதி தேவை. இவை பயனுள்ளனவை தான் என்று உணர்கின்ற தமிழ்நெஞ்சங்கள் 0776203788 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**நேர்காணல் எசு. சுப்பிரமணியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நூல்களின் வெளியீடும், யாழ் மாவட்ட பள்ளி நூலகங்களுக்கான நூல்கள் அன்பளிப்பும்

மன்றத்தின் நிறுவநர் யாத்த மூன்று நூல்களான உலக உயர்தனிச் செம்மொழி செந்தமிழ், தமிழர் இலக்கிய இலக்கணம் (ஓர் அறிமுகம்), தமிழர் மெய்யியற் கோட்பாடு (திருக்குறள் ஔவை நூல்கள் ) ஆகியவற்றின் வெளியீடு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் தி.ஆ.2046 மீனத்திங்கள் 15 ஆம் நாள் (29.03.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.30 மணிக்கு செந்தமிழ் சொல்லருவி திரு.ச.இலலீசன் (கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் துணை முதல்வர்) அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இவ்வெளியீட்டு விழாவின் முதன்மை சிறப்பு விருந்தினர்களாக யாழ் இந்தியத் துணைத் தூதர் மாண்புமிகு திரு.ஆ.நடராசன் அவரது துணைவியார் திருவாட்டி சாந்தி நடராசன் அவர்களும், வடமாகாண கல்வி அமைச்சர்,மாண்புமிகு திரு.த.குருகுலராசா அவர்களும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு.சி.சிறீதரன் அவர்களும், யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் முனைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராசா அவர்களும், யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகத்துறைத் தலைவர்.முனை.பேரா.திரு.வேல்நம்பி, தீவகக் வலய கல்விப்பணிப்பாளர் திரு.நி.யோண்குயின்ரசு, முதல்வர் யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை முனைவர் டேவிட் சதானந்தன் சொலமன் அடிகளார், மேனாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர், ஊர் மன்றத் தலைவர், நெடு.ப.நோ.கூ.ச. தலைவர்.புலவர்.அ.வெ.அரியநாயகம், வவுனியா தமிழ்ச்சங்க தலைவரும், ஆசிரியருமான தமிழருவி திரு.த.சிவகுமாரன், கொழும்பு தமிழ்ச்சங்க நூலகச் செயலாளரும், றோயல் கல்லூரியின் துணை முதல்வர் திரு.ம.கணபதிப்பிள்ளை அவர்களும் கலந்து கொண்டனர்.

மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து செல்வி.நி.தளிரினியின் போற்றி நடனமும் பின் கரைச்சிப்பைந்திர சபைத் தலைவரும், குமரித்தமிழ்ப்பணி மன்றத்தின் ஆளுநர்களின் ஒருவருமான நா.வை.குகராசா அவர்களின் வரவேற்புரை நிகழ்த்தப் பெற்றது. இவற்றைத் தொடர்ந்து முதன்மை சிறப்பு விருந்தினர்கள் பொன்னாடை, மாலையிட்டு நன்மதிப்பு செய்யப் பெற்றனர். தலைமையுரையை செந்தமிழ் சொல்லருவி திரு.ச.இலலீசன் அவர்கள் வழங்க வாழ்த்துரைகளை முனைவர் இடேவிற்.சதானந்தன், சொலமன் அடிகளாரும், வடமாகாண கல்வி அமைச்சர் மாண்புமிகு திரு.த.குருகுலராசா அவர்களும் வழங்கினர்.

அடுத்த நிகழ்வாக நூல் வெளியீடுகள் நடைபெற்றன. இதில் உலக உயர்தனிச் செம்மொழி செந்தமிழ் என்ற நூலை மாண்புமிகு திருவமை.நடராசன் சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையர் வெளியிட்டு வைக்க முதற்படியை மேனாள் இலங்கை மின்சாரசபையின் மேலதிக முகாமையாளர் திரு.வ.சுப்பிரமணியம் பெற்றுக்கொண்டார். 'தமிழர் இலக்கிய இலக்கணம்' என்ற நூலை வண.சொலமன் அடிகளார் வெளியிட அதன் முதற்படியை குமுகத் தொண்டரும் ஸ்ரீநிகேதபவன் உரிமையாளருமான திரு.கலாநாதன் பெற்றுக் கொண்டார். 'தமிழர் மெய்யில் கோட்பாடு' என்ற நூலை மாண்புமிகு திரு.த.குருகுலராசா வெளியிட மருத்துவர் மருதைனார் (இலண்டன்) அவர்கள் பெற்றுக் கொண்டார்.

தமிழர் நாட்காட்டியின் விளக்க உரையை மன்ற நிறுவநர் வழங்க மதிப்பீட்டுரையை திரு.மா.கணபதிப்பிள்ளை நிறைவு செய்தார். உலக உயர்தனிச் செம்மொழி செந்தமிழ் என்ற நூலின் வெளியீட்டுரையையும், மதிப்பீட்டுரையையும் வழங்கிய முனைவர்.பேரா.திரு.சி.சிவலிங்கராசா அவர்கள் குறிப்பிடும் போது சென்ற நூற்றாண்டில் தமிழறிஞர் திரு.வையாபுரிப்பிள்ளையின் கருத்துக்களை யாரும் மறுதலிக்க முடியாதபடி இருந்ததாகவும் ஆனால் இந்நூல் அவரின் கருத்துக்களை மறுத்து சான்று காட்டி நிறுவியுள்ளதாகவும், இந்நூலுக்கு பல்கலைக்கழகம் முனைவர் (கலாநிதி) பட்டம் வழங்கலாம் என்றும் பாராட்டினார். தொடர்ந்து தமிழருவி திரு.செ.சிவகுமாரன் அவர்கள் தமிழர் மெய்யியற் கோட்பாட்டு நூலின் வெளியீட்டு மதிப்பீட்டு உரைகளைச் செய்யும் போது இந்நூல் முன்னெப்போதும் கேட்டிராத புதிய கருத்துக்கள் பலவற்றை வெளிப்படுத்துவதாகவும் இந்நூல் பள்ளி மட்டத்தில் கொண்டு செல்லப்பட வேண்டும் என்றும் விளம்பினார்.

தமிழர் இலக்கிய இலக்கணம் என்ற நூலுக்கு வெளியீட்டுரை வழங்கிய முனைவர் பேராசிரியர்.திரு.வேல்நம்பி அவர்கள் இந்நூல் நாவலர் பெருமானின் நூல்களைப் போல கேள்வி மறுமொழி என்ற அடிப்படையில் இன்றைய தலைமுறையினர் அறிந்து கொள்ள வேண்டிய தமிழர் நூல்களான தொல்காப்பியம், திருக்குறள், ஔவை நூல்கள், பதினெண் மேற்கணக்கு, கீழ்க்கணக்கு நூல்கள், காப்பியங்கள், முச்சங்கங்கள், பற்றிய பல தகவல்களுடன் வெளிவருவதாகவும் இந்நூல் மாணவர் நடுவில் கொண்டு செல்ல வேண்டியது என்றும் கூறினார்.

இவற்றைத் தொடர்ந்து முதன்மை விருந்தினர் மாண்புமிகு திரு.ஆ.நடராசன் அவர்கள் தமது சிறப்புரையை ஆற்றினார். மேலும் யாழ் மாவட்ட 98 உயர்நிலைப்பள்ளிகள் கல்லூரிகளுக்கு அழைப்பிதழ் விடுக்கப்பட்டு அதில் 70 பள்ளிகள் வருகை தந்து தமது பள்ளி நூலகங்களுக்கான நூல்களை பெற்றுக் கொண்டனர்.

சிறப்பு நிகழ்வாக கண்டி இலக்கிய வட்ட உறுப்பினர்கள் சிவத்தொண்டர் தொழிலதிபர் திரு.ஈ.எசு.பி.கணேசலிங்கம் (யே.பி), தொழிலதிபரும், கண்டி மாவட்ட மனித உரிமைகள் அமைப்பின் அமைப்பாளருமான திரு.வே.சிதம்பரநாதன் (யே.பி), கண்டித்தமிழ் சங்கத்தின் மேனாள் பொதுச்செயலாளரும் மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவரும், கடந்த 45 ஆண்டுகளுக்கு மேலாக தன்னை இலக்கியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியிலேயே ஈடுபடுத்தி வரும் இந்நாள் தினக்குரல் செய்தித்தாள் கண்டிக்கிளையின் முகாமையாளருமான திரு.இரா.அ.இராமன் (யே.பி) அவர்களின் தலைமையில் தம்மை கண்டி மாவட்ட இலக்கிய வட்டத்தில் இணைத்து பல்வேறு பதவிகளில் தமது தமிழ் இலக்கிய ஆற்றல்களை வெளிப்படுத்தி வருபவர்களுமான திரு.றொபட் டேனியல், எசு.சிவராச், திருவாட்டி சந்திரவதனரட்ணராச குருக்கள் (யே.பி ), சேகரன் சோமபாலன் (யே.பி), கலைஞர்.எசு.கரிதாசு, அ.ச.ம.பீலிக்சு ஆகியோர் வருகை தந்து இந்தியத்துணைத்தூதர் அவர் தம் துணைவியார், மன்ற நிறுவநர், தமிழருவி.திரு.சிவகுமாரன் ஆகியோரை நன்மதிப்புச் செய்து விழாவை சிறப்பித்தனர். அத்தோடு ஆசிரியர்கள், பள்ளி மாணவர்கள் பெற்றோர், தமிழ் உணர்வாளர்கள், நண்பர்கள், உறவுகள் விழாவில் பெருமளவில் கலந்து விழாவிற்கு மெருகூட்டி சிறப்பித்தனர். (விழா நிழற்படங்கள் இணைக்கப்பட்டுள்ளது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுத்திரேலியத் தலைநகர் சிட்னியில் தமிழ் நூல்கள் வெளியீடு

செந்தமிழன் நா.வை.குமரிவேந்தன் (மகேந்திரராசா) அவர்கள் எழுதிய நூல்களான "உலக உயர் தனிச் செம்மொழி செந்தமிழ்", தமிழர் இலக்கிய இலக்கணம் (ஓர்அறிமுகம்), "தமிழர் மெய்யியல் கோட்பாடு (திருக்குறள், ஔவைநூல்)" ஆகிய மூன்று நூல்களும், "தமிழர்நாட்காட்டி (திருவள்ளுவர் ஆண்டு) முறை" அறிமுகமும் 27.09.2015 ஞாயிற்றுக்கிழமை மாலை 05.00மணிக்கு 221,வென்ற்வேத் அவனியு,பென்டல்கில், நியூ சவுத் வேல்சில் எழுத்தாளரும். தமிழ் அறிஞரும், தமிழ் உணர்வாளரும், "அவுத்திரேலியத் தமிழோசை" ச் சிற்றிதழின் ஆசிரியருமான திரு.மாத்தளைச் சோமு அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியின் முதல்நிகழ்வாக இறைவணக்கத் திருக்குறள் பாக்கள், தமிழ்மொழி வாழ்த்து, அவுத்திரேலியத் தேசியப் பாடல் செல்வி.லோசிகாயோகராசா அவர்களால் பாடப்பெற்றது. வரவேற்புரையை திருவாட்டி.யனனி எழிலரசன் (மதன்ராசா) அவர்கள் கவிதை, உரை நடையில் நிகழ்த்தினார். இதன்பின் தாயகத்தில் இறுதிப்போரில் உயிரிழந்தவர்களுக்காகவும், தமிழ்நாட்டின்தமிழ் ஈகிகளுக்காகவும் ஒருநிமிடஅமைதி வணக்கம் (மௌன அஞ்சலி) செலுத்தப்பட்டது. பின்தலைவர் தமது தலைமையுரையில் நூலாசிரியரை அறிமுகம் செய்து வைத்து தமிழென்றால் தமிழ்தான் என்றும் தனித்தமிழ், தூய தமிழென்று, தமிழ் இல்லையென்றும், இந்தஅடிப்படையிலே யாக்கப்பட்டவைதான் இந்நூல்களென்றும், கம்பன் கூடக் கம்பராமாயாணத்தைத் தமிழில் தான் எழுதினான் என்றும்,மூலநூலான வட மொழியிலிருந்து மொழிபெயர்ப்புச் செய்யும் போது விபிடனன்,இலக்குவன் எனத்தமிழில் எழுதினாரேயன்றி கிரந்த அல்லது வடமொழி உச்சரிப்பில் எழுதவில்லையென்றும், எப்பொழுதும் பிறக்கும் பிள்ளைகளுக்குத் தமிழில் பெயரிட வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

இன்றைய பெற்றோர்கள் தம்பிள்ளைகள் "மம்மி", இடடி என்று அழைப்பதில் மகிழ்வடைகின்றனரென்றும், ஆனால் அம்மா,அப்பா என்று அழைப்பதில் தமிழின் சிறப்பு எவ்வளவு வெளிப்பட்டு நிற்கிறதென்பதை "அ"உயிராகவும், "ம் / ப்" மெய்யாகவும், இவை இரண்டும் சேரும்போது உணர்வற்ற (கோமா) ஒரு உயிருள்ள உடலை மட்டுமே காணமுடியுமென்றும்,ஆனால் இவற்றுடன் உயிர்மெய் எழுத்து "மா/பா"..... சேரும்போது உயிருள்ள, உணர்வுள்ள, உடலாக அம்மா/அப்பா, என மாறுகிறது. எவ்வளவு கருத்தாழமுள்ள சொல்.மம்மி எகிப்த்தில் புதைக்கப்பட்டுள்ள உயிரற்ற உடலைக்குறிப்பதாகவும் விளக்கினார்.

வாசிப்புப் பற்றிக் குறிப்பிடும் போது நூலாசிரியரின் 55அகவைக்குப் பின்னான தொடர்ந்த வாசிப்பு இந்நூல்களை யாக்கத்துண்டியுள்ளதையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியாவின் முதன்மை அமைச்சராயிருந்த "வின்சன்ட் சேர்ச்சில்,"அவர் நோய்வாய்ப்பட்டிருந்த கடைசி நேரத்திலும் தன் கையில் வைத்திருந்த நூலைப் படித்து முடிக்கும்வரை தனது உயிர் உடலிலிருக்க மருந்து தருமாறு மருத்துவரிடம் வேண்டிக்கொண்டாராமென்பதைக் கூறி வாசிப்பின் உயர்வைப் பெருமையை வெளிப்படுத்தினார். அத்தோடு இன்றைய கல்வி முறையானது தொழில் கல்வியோடு மட்டும் நின்றுவிடுவதால் நாகரிகம், பண்பாடு, ஒழுக்கம் போன்றன கற்றலில் உள்வாங்கப்படாமையால் குடும்ப வன்முறைகள், சிறுவர்தவறான வழிநடத்தலும், கொலைகளும் வெளிப்பட்டு நிற்பதாகவும் கூறியதோடு, மாணவர் நடுவில் அற, அறிவு, பண்பாடு, ஒழுக்கவியல் போன்றன கற்பிக்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

இதற்குத் திருக்குறள், ஔவைநூல்கள், சங்க இலக்கியங்கள், காப்பியங்கள் பெருந்துணை செய்யுமென்றும், இவற்றை அம் மூன்று நூல்களும் வெளிப்படுத்துவதாகவும், நூல்களே மனிதனை சமுதாயத்தில் வாழவைக்குமென்றும், இந்நூல்கள் அவுத்திரேலியத் தமிழ்ப் பள்ளிகளின் பாடநூலாக்கப்பட வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தார். அத்தோடு நூலாசிரியரை 2004இல் திருச்சியில் சந்தித்ததையும் நினைவு கூர்ந்தார். இந்நூல்களின் ஒவ்வொரு பக்கத்தையும் ஒருநாள்படிக்கவேண்டும் என்றார். தொல்காப்பியத்தை முதன்முதலில் பதிப்பித்து வெளிக்கொணர்ந்தவர் சி.வை.தா.என்றும்,இவரைத்தொடர்ந்தே உ.வே.சா. இதில் ஈடுபட்டாரென்றும்,இதற்கும் உதவியாய் நின்றவர் சி.வை.தா அவர்களேயென்றும் இலங்கையரின் இலக்கிய முன்மாதிரியையும் பாராட்டினார்.

அடுத்து தமிழர் நாட்காட்டி (திருவள்ளுவர்ஆண்டு)முறையின் அறிமுக உரையை நூலாசிரியர் நா.வை.குமரிவேந்தன் அவர்கள் ஆற்றிய போது தமிழர் தாமாக தமது வாழ்வியலோட்டத்தில் கடைப்பிடிக்கக் கூடிய சில உறுதிமொழிகளை எடுப்பதன் மூலம் தமிழை வாழவைக்க முடியுமெனக் குறிப்பிட்டார். இந்நாட்காட்டிமுறையானது மறைமலை அடிகளின் காலத்தால் (1920)தொடக்கப்பட்டதென்றும்,தமிழர்க்கொரு தொடராண்டு முறையை ஏற்படுத்த திருவள்ளுவரை கிறீத்துவுக்கு 31ஆண்டுகள் முன்பிறந்தவராகவும் (கி.மு.31), இதன்படி தி.ஆண்டு 2046 எனவும், ஞாயிற்றுத்தமிழ்த்திங்கள் (மாதங்) களான சுறவம் (தை),கும்பம் (குடை),மீனம் (மீன்), மேழம் (ஆடு),விடை (எருது), ஆடவை (ஆண்குறி), கடகம் (நண்டு), மடக்கல் (சிங்கம்), கன்னி (பெண்குறி), துலை (சமன்கோல்தராசு), நளி (தேள்), சிலை (சிற்பம்),போன்றனவற்றைப் பயன்படுத்தவும் முடிவுசெய்து வெளிப்படுத்தியவை. இப்பெயர்களெல்லாம் வானிலே குறித்த திங்களில் உடுக்கள் அல்லது நாள்மீன்கள் (நட்சத்திரம்) தோன்றும் வடிவங்களென்றும் குறிப்பிட்டு இம் மாதங்களுக்கு அருகில் அடைப்புக்குறியில் தற்போது பயன்பாட்டிலுள்ள தை, மாசி, பங்குனி..........போடப்பட்டுள்ளதாகவும், தமிழ் எழுத்து இலக்கங்களுடன் அதன் இன்றைய இலக்கமும், இன்றைய நடைமுறையிலுள்ள ஆங்கில நாட்களும் இடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தமிழுக்குத் தொண்டாற்றிய பன்னாட்டு அறிஞர்களின் (36பேர்)சிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புக்கள், அவர்களின் நினைவுநாட்கள், புகைப்படங்களும், தமிழ், திருக்குறள் பற்றிய சில மொழி அறிஞர்கள்குறிப்புக்கள், வடமொழி சொற்களுக்கான தமிழ்ச்சொற்கள்,கடந்த 75ஆண்டுகளுக்கு மேலாக தாயகத்தில் நடைபெற்ற முதன்மைச் செய்திகள் என்பன குறிக்கப்பட்டுள்ளதையும் வெளிப்படுத்தினார். இவை தமிழருடையவை தமிழரை அடையாளப் படுத்துபவையென்றும் இத்தமிழ் எண்கள் மொரிசியசு நாட்டின் பணத்தாள்களில் நடைமுறையில் இருந்ததென்றும், எமது பழைய ஆவணங்களில் பிறப்பு, இறப்பு, காணிஉறுதி, நூல்களின் பக்கங்களில் பயன்பாட்டில் இருந்து உள்ளன. பல மொழிகளை எக்குழப்பமின்றி கற்கும், நடைமுறையில் பயன்படுத்தும் தமிழர் இத்தமிழர் நாட்காட்டி முறையைப் பயன்படுத்துவதால் எக்குழப்பமும் ஏற்படாதென்றும், எதற்கும் தமிழ் உணர்வும், இன உணர்வும் இருந்தால் போதுமென்றார்.

இலக்கண வரம்பை மீறி பிறமொழி எழுத்துக்களை, சொற்களை தமிழில் புகுத்துவதன் மூலம் பல கிளைமொழிகள் தோன்றி புதுமொழியாகுமென்றும் இப்படி தோன்றியவைதான் கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு, சிங்களம் போன்ற பல மொழிகள். இந்தியாவில் உள்ள மொழிகளில் 25 இந்து மொழிகள் தமிழோடு நேரடித் தொடர்போடும், 128 மொழிகள் வட்டார மொழிகளாகவும் ஆக 153 மொழிகளுக்கு தமிழ் தாயாக உள்ளதையும் சுட்டிக்காட்டி, இப்படிப் போனால் தமிழ் அழியும் என்றார்.

அடுத்து உலக உயர்தனி செம்மொழி செந்தமிழ் என்னும் நூலின் வெளியீட்டுரையை சிட்னியில் பலராலும் அறியப்பட்ட சிறந்த தமிழ் சொற்பொழிவாளரான திரு.இரம்மியா யனார்த்தன்,அனகன்பாபு அவர்கள் வழங்கினார். அவர் தமதுரையில் இந்நூலில் ஆசிரியர் தமிழின் உயர்ச்சியினையும் அதன் சிறப்பு, பெருமைகளையும் ஒரு மாலையாக கோர்த்து தந்து இருப்பதாகவும் நூலின் முன்னுரையே பல சிறப்புத் தகவல்களைக் கொண்டுள்ளதாகவும், ஊன்றிப் படிக்க வேண்டிய நூல் என்றும், இந்நூல் ஆராய்ச்சியாளர்களால் ஆய்வு செய்யப் படவேண்டிய நூல் என்றும் கூறினார். இந்தியன் நடுவனரசு தமிழை செம்மொழியாக்க நூறாண்டுகளுக்கு மேலாக கடத்திய பின் அண்மையில் (2004) அதை செம்மொழியாக்கியது.

பட்டினத்தார் பெரியசெல்வந்தர், பல சுகபோகங்களை கண்டுகழித்தவர் ஆனால் அவர் ஐம்பது வயதை அடைந்தபோது இறைவன் பால் பற்றுக்கொண்டு செல்வம், குடும்பம், சுகபோகம் எல்லாவற்றையும் துறந்து "காதற்ற ஊசியும் வாராதுகாண் கடைவழிக்கு" என்று வாழ்வில் வெறுப்புற்று இறைவன்மேல் காதலுற்றார். அதுபோல் தனது ஐம்பத்தைந்தாவது வயதின் பின் குமரிவேந்தன் அவர்கள் தமிழ்மீது காதல் கொண்டதால், பற்றுக்கொண்டதால் உருவானதே இந்நூல்கள் என்று புகழ்ந்துரைத்து வள்ளுவர் ஒரே பொருளில் இரண்டு குறள்களை யாத்திருக்க மாட்டார் என்றும் "நாகாக்க" என்றது "உனது தாய் மொழியைப் பாதுகார்" என்று தான் கூறுகின்றார் என்னும், ஆசிரியர் கருத்து மேலானது என்று கூறி உரையை நிறைவு செய்தார்.

"தமிழர் மெய்யியல் கோட்பாடு" என்னும் நூலை அவுத்திரேலிய தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிபரப்பு நிலைய (ஏ.ரி.பி.சி) நிகழ்ச்சித் தொகுப்பாளரும், வென்வேத் தமிழ்ப்பள்ளியின் ஆசிரியையும், கவிஞரும், பெண்ணிய சிந்தனையாளருமான சௌந்தரி கணேசன் அவர்கள் வெளியீட்டுரையை வழங்கும் போது திருக்குறள் வெளிப்பட்ட நாள்முதல் பலதரப்பட்டவர்களாலும் பயன்படுத்தப்படும் ஒரு நூல் என்றும், வாழ்க்கை ஓட்டத்தில் அது பெரும்பங்கு வகிக்கின்றது என்றும், காலத்துக்கு காலம் பலர் அதற்கு கருத்துரை வழங்கினாலும் அது தனது நடுவக கருத்தில் நின்று மாறுவதில்லை என்றும், குறிப்பிட்டு, கவிதையை எழுதி விடலாம், கதையை எழுதிவிடலாம் ஆனால் ஒரு மெய்யியல் (தத்துவ) நூலுக்கு கருத்துரை கூறுவது என்பது தற்துணிவுடையவர்களால் மட்டுமே முடியுமென்றும் ஆசிரியரின் முயற்சி போற்றப்பட வேண்டும் என்றார்.

இந்நூல்கள் மாணவர் மட்டத்தில் கொண்டுசெல்லப்பட வேண்டியவை என்றும், இளம் தலைமுறையினருக்கு மிக பயனுடையதென்றும் தெரிவித்தார். ஔவை நூல்கள் பற்றி குறிப்பிட்ட அவர் காலத்திற்கு காலம் பல ஔவையார்கள் (பத்துக்கு மேற்பட்டவர்கள்) வாழ்ந்துள்ளதாகவும், ஆசிரியர் மூவரைக் குறிப்பிட்டுப் பின் சங்ககால ஔவையையும், நீதி நூல் ஔவையையும் மட்டுமே இந்நூலில் சுட்டுவதாகவும், நீதி நூல் ஔவையின் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் போன்றன முழுமையாக சிறந்த கருத்துரைகளோடு வழங்கப்பட்டுள்ளதாவும், இவரின் வேறுசில பாடல்களும், கதைகளோடு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

ஆனால் சங்ககால ஔவை இந்த நூலின் மூலம்தான் வெளிக்கொணரப்பட்டிருக்கின்றார் என்றும், இவள் அழகானவள், இளமையானவள் என்ற காரணத்தால் இளமையே இல்லாத ஆண்டாளைபோலவும், அறிவும் அழகும் உடைய புனிதவதி என்ற காரைக்கால் அம்மையாரை பேய்யுருவாக மாற்றப்பெற்ற பின்னரேதான் முன்னுக்கு கொண்டுவர பட்டிருக்கிறார் என்றும் கண்ணகி, மணிமேகலை, சீதை போன்றோரையும் குறிப்பிட்டார். இது அன்று நிலவிய பெண்களை தாழ்த்தும்அல்லது இழிவுபடுத்தும் ஒரு செயற்பாடாகக் கொள்ளக் கிடக்கிறது என்றும் தம் கருத்தை முன்வைத்தார் ஆனால் இன்று அந்நிலை மாறியுள்ளதை போற்ற வேண்டும் என்று கூறி இந்நூல் பள்ளிகளில் பாடநூலாக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இவரைத் தொடர்ந்து கோம்புச் தமிழ் பள்ளியின் முதல்வரும் சிறந்த, பேச்சாளருமான திரு.திருநந்தகுமார் அவர்கள் "தமிழர் இலக்கிய இலக்கணம் ஓர் அறிமுகம்" என்ற நூலின் வெளியீட்டுரையில் ஒருவன் தனக்கு நன்றாகத் தெரிந்த அவனுக்கு முதன்மை வாய்ந்ததென கருதுவதை எழுத முனைகின்றான், வாசகனும் தான் புரிந்து கொள்ளும் வகையில் அது அவனது வாசிப்பிற்கு ஏற்றதாய் ஒரு தொடர்நிலையை ஏற்படுத்தும் போது அதில் ஆழமாக ஊன்றுகின்றான். நூலின் கருத்து அவனின் பழக்கப்பட்ட வாசிப்பிற்கு ஏற்றதாய் இல்லாவிட்டால் வாசிப்பை நிறுத்தி விடுகின்றான் என்ற கருத்தை முன்வைத்தார்.

வாசிப்பு ஒருவரை சிந்திக்க வைத்து அதை விளங்கிக் கொள்ளவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகராதிகள் கூறுகின்ற கருத்துக்களை விட சிறந்த கருத்துருவாக்கத்தை தருகிறது என்றும், இந்நூலின் சிறப்பு என்னவென்றால் ஆறுமுகநாவலர் அவர்கள் ஆக்கிய கேள்வி- விடை நூல்கள் போல் ஆக்கப்பட்டதே ஆகும் என்றும், இந்நூலில் தொல்காப்பியம், திருக்குறள், சங்கங்கள், சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், இலக்கண நூல் பற்றிய அத்தனையுமே உள்ளெடுக்கப்பட்டுள்ளன. இது மாணவர் கற்பதற்கு இலகுவாகவும், வடமொழித் தாக்கமானது பல நூறு ஆண்டுகளாக அறிஞர் பெருமக்களாலும், பொதுவானவர்களாலும் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், அதிலிருந்து விடுபடுவதும், பயன்பாட்டை தவிர்ப்பதும் கடினம் என்றும் குறிப்பிட்டு நூலாசிரியர் மிகவும் ஆழச்சிந்தித்து இந்நூலை ஆக்கியுள்ளார் என்றும், நாமும் முயற்சிப்போம் என்றும் கூறினார்.

இந்நூல்களின் வெளியீட்டுரைகளைத் தொடர்ந்து இம் மூன்று நூல்களின் மதிப்பீட்டுரையை சங்க இலக்கியங்கள், காப்பியங்களை துறைபோகக் கற்ற "இலக்கியச் செம்மல்" தனபாலசிங்கம் அவர்கள் குறிப்பிடும் போது செம்மொழிகள் என்று கூறப்படும் சீனம், சமற்கிருதம், இலத்தீன், கிரேக்கம் போன்ற மொழிகளில், சீனத்தை தவிர மற்றையவை எல்லாம் வழக்கிலில்லாதவை என்றும் பழைய சீனத்தை இன்று வாசிக்க முடியாது அது போல ஏனையவையும் வாசிக்க முடியாதவை என்றும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் இலக்கியங்களை, காப்பியங்களை இன்றும் வாசிக்கக் கூடிய நிலையயில் சீர் இளமையோடு கன்னித்தமிழாகவே உள்ளதென்றும், ஏனைய செம்மொழி இலக்கியங்களைப் போல இயற்கை முரண் செய்திகளையோ, கடவுளரையோ, தொன்மக் (புராண) கதைகளையோ, நம்ப முடியா கற்பனைகளையோ உள்வாங்காது இயற்கையையும், மனித வாழ்வையும் நடுவகப் படுத்தி யாக்கப்பட்டவையே தமிழ் இலக்கியங்கள், காப்பியங்களென்றார்.

கலித்தொகை, பரிபாடலில் ஒரு சில தொன்மக் கதைகள் கூறப்படுவதாகவும், இவ்விலக்கியங்கள் வேறு எந்த மொழி இலக்கியங்களை சாராததாகவும் அவற்றில் நின்று பெறப்படாததாகவும், கடன்படாததுமாக யாக்கப்பட்டவை என்பதையம், இந்த உயர் தமிழ்ச் செம்மொழி நூல் சுட்டுவதாகவும் அதன் தொன்மை, தொடர்ச்சி, இளமை அதன் உயர்ச்சியை வெளிப்படுத்துவதையும், சிந்துவெளி நாகரிகத்தில் தொடங்கி கந்தரோடை வரையான அகழ்வுகள், தமிழின் தமிழ்பிராமியின் தொன்மையை வெளிப்படுத்தலையும், சிந்து வெளி நாகரிகம் எனப்பட்ட அரப்பா, மொகஞ்சாதரோ நாகரிகங்கள் இன்று அவை பெரும்பாலும் தமிழ் நாகரிகமே என உலகம் ஊகம் கொள்கின்றது.

இவற்றையெல்லாம் இந்த நூல்கள் தொட்டுக் காட்டுவதாகவும், தமிழ் செம்மொழியே என 1887 களில் முனைவர் சூரியநாராயண சாஸ்திரி (பரிதிமாற்கலைஞர்) சான்றுகள் காட்டியும் அது நிறைவேற்றப்படாததையும், அதன் பின் உ.வே. சாமிநாதையரின் அயரா உழைப்பால் ஏட்டுச்சுவடிகள் தேடி எடுக்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பிக்கப்பட்டு வெளிவந்த பின்பே பலரும் தமிழின் செம்மொழித் தன்மையை கண்டனர் என்றும் நாம் அவருக்கும் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும் என்று கூறினார். ஆனால் மு.கருணாநிதி அவர்கள் சிலப்பதிகாரத்தின், அம்பிகாபதியின் மூல அமைப்பையே மாற்றி தமிழை சிதைத்த ஒருவர் என்றும், ஆனால் சேக்ஸ்பியர் எதை எழுதினாரோ அதன் மூலத்தை இன்றும் மாற்றாது அதன் படியே அவரின் நாடகங்களை அரங்கேற்றி வருகிறார்கள் என்றும் குறிப்பிட்டார்.

அத்தோடு இம் மூன்று நூல்களிலும் கூறப்பட்டவை இறும்பூது (அற்புதம்) ஆனவை, கடினமானவை, சிக்கலானவை. ஆனால் இவை ஈழமண்ணிலேயே நம்பிக்கை ஊட்டும் வகையில் இப்படியான நூல்கள் பதிப்பிக்கப்பட வேண்டும் இலக்கிய இலக்கண காப்பிய மறுமலர்ச்சிக்கு வழிகோல வேண்டும் என்றும் குமரிவேந்தன் அவர்கள் தான் எவற்றையெல்லாம் தொட்டுக்காட்டினாரோ அவற்றையெல்லாம் இந்நூல்களின் மூலமாக நிறுவியுள்ளார் என்று பாராட்டி உரையை நிறைவு செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய் மொழி நாள் விழா - 2018
# நெடுந்தீவில் தமிழுக்கு விழா

இலங்கைக் குமரித் தமிழ்ப் பணிமன்றமும், யாழ் இந்தியத் துணைத் தூதரகமும் இணைந்து திருவள்ளுவர் ஆண்டு 2048 கும்பத் திங்கள் ஒன்பதாம் நாள் (21.02.2017) செவ்வாய்க்கிழமை நெடு.தேவானந்தா பண்பாட்டு மண்டபத்தில் உலகத் தாய்மொழி நாளையும், கிறீத்தவர்களின் தமிழ்க் கொடை, தமிழியச் சான்றோர் பகுதி 2,3 என்ற நூலையும் வெளியிட்டுக் கொண்டாடியது. இவ் விழாவிற்கு மன்ற நிறுவநர் செந்தமிழன் நா.வை.குமரிவேந்தன் அவர்கள் தலைமை தாங்கினார். இவ் விழாவின் முதன்மை விருந்தினராக மாண்புமிகு திரு.ஆ. நடராசன் இந்தியத் துணைத் தூதுவர், மாண்புமிகு திரு. க. குருகுலராசா வடமாகாண சபைக் கல்வி அமைச்சர், மற்றும் சிறப்பு விருந்தினர்களான வடமாகாண சபை உறுப்பினர்களான திரு. கே. என். விந்தன் கனகரெத்தினம், திரு. வை. தவநாதன், திரு. சு. பசுபதிப்பிள்ளை, வண. தமிழ்நேசன் அடிகளார், புலவர் ஆ.வெ. அரியநாயகம், மேனாள் கொழும்பு றோயல் கல்லூரி துணை முதல்வர் திரு. மா. கணபதிப்பிள்ளை, மேனாள் கோட்டக்கல்விப் பொறுப்பாளர் திரு.க. அரசரெத்தினம் , திருவாட்டி சா. கிருச்ணதாசன், (நெடு. கோட்ட. கல்விப் பொறுப்பாளர்), நெடுந்தீவு பைந்திரச் (பிரதேச) சபை செயலாளர்.

திரு. கு. இரத்தினராசா , நெடுந்தீவு செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு. எ. அருந்தவசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழ் வாழ்த்தை மன்றச் செயலாளர் திரு. த. நிரஞ்சலன் கவிதையில் வழங்க, வரவேற்பு நடனத்தை செல்வி நி. தளிரினி வழங்கினார். வரவேற்புரையினை மன்றத்தின் ஆளுநர் நா.வை. குகராசா (சமாதான நீதவான்) நிகழ்த்தினார். வாழ்த்துரைகளை இந்து, றோ.க.சமயக்குரவர்கள் வழங்கினர். இதைத் தொடர்ந்து நெடுந்தீவின் பல் தொழில் சார் மூத்த குடிகள் ( அகவை 80க்கு மேற்பட்டோர் ) 30 பேருக்கு இந்தியத் தூதரகமும், மன்றமும் பொன்னாடை போர்த்தி மார்பணி அணிவித்து, மாலையிட்டு நன்மதிப்பு (கௌரவிப்பு) செய்யப் பெற்றன. அத்தோடு அங்கிருந்து பல்கலைக் கழகம் செல்லும் மாணவர்கள் (2016 -2017) 7 பேருக்கு மார்பணி அணிவித்து நூல்கள் அன்பளிப்புச் செய்து, இந்தியத் துணைத் தூதரால் பொற்கிளியும் வழங்கப் பெற்றது. இடையிடையே நெடு/ உயர் நிலைப்பள்ளி, றோ/கா/மகளிர் கல்லூரி நடன அளிக்கைகளை அரங்கேற்றினர்.

அண்ணாவியார் வெள்ளத்தம்பியின் நெறியாள்கையில் சங்கிலியன் நாட்டுக் கூத்து , நெடு.ஐக்கிய இளைஞர் கலை மன்றத்தால் அரங்கேற்றப்பட்டது. கிறீத்தவர்களின் தமிழ்க் கொடை நூலை இந்தியத் துணைத் தூதர் வெளியிட்டு வைக்க அதன் முதற் படியை நெடு. செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு. எ. அருந்தவசீலன் பெற்றுக் கொண்டார். இந் நூலின் வெளியீட்டு உரையை புலவர் திரு. அ. வெ. அரியநாயகம் வழங்க, நூலின் மதிப்பீட்டு உரையை வண. தமிழ்நேசன் அடிகளார் வழங்கினார். தொடர்ந்து முதன்மை விருந்தினர் உரையை மாண்புமிகு திரு. ஆ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராசன் வழங்க, சிறப்பு விருந்தினர் உரையை திரு. மா. கணபதிப்பிள்ளை , திரு.அ.ச.ம. பீலிக்சு (துணை முதல்வர், புனித மரியாள் உயர் நிலைப் பள்ளி கண்டி) நிகழ்த்தினர். தலைவர் தமது உரையில் உலகத் தாய் மொழி உருவாக்கத்தின் வரலாற்றையும், பல் தொழில் சார் மூத்தோர் நன்மதிப்புப் பற்றியும் குறிப்பிட்டார். இறுதி நிகழ்வாக பள்ளி மட்டத்தில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதலாம், இரண்டாம்,மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களுக்கும், கலந்து கொண்டவர்களுக்கும் சான்றிதழ்களும், நூல்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

வளர்ந்தோருக்கான திறந்த கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும் மார்பணி, நூல்கள், சான்றிதழ், அன்பளிப்பாக வழங்கப்பட்டன. யாழ் கரிகணன் பதிப்பக உரிமையாளர் திரு. இராசகுமார் அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட நாவலர் சிலைகளும் நெடு. பள்ளிகளுக்கும், பைந்திரச் செயலகம், பைந்திரச் சபை ஆகியவற்றுக்கும் வழங்கப்பட்டன. இவற்றின் நூலகங்களுக்கு நூல்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இவ் விழாவில் பள்ளி முதல்வர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் , உறவுகள், நண்பர்கள் கலந்து சிறப்பித்தனர். அவர்களும் கலந்து நூல் வெளியீட்டையும் திருமண விழாவையும் சிறப்பித்தனர். இந்நூலுக்கான அணிந்துரையையும் திரு. கு. திருமாறன் அவர்களே வழங்கியிருந்தார். (நிழற்படம் இணைக்கப்பட்டுள்ளன)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் குமரித் தமிழ்ப்பணிமன்ற தோற்றுவிப்பிற்கு முன்னரான நிறுவுநரின் தமிழ்ப்பணி சார்ந்த செயற்பாடுகள்

01. பிள்ளைகளின் உயர்கல்வி தடங்கலுற்றதால் தமிழ் நாட்டில் 2002 இல் இருந்து 2005 வரை அங்கு பட்டப்படிப்பு. இதன் போது இவர் சந்தித்த இவரது துணைவியாரின் நண்பி பாக்கியம் அவர்களின் கணவர் பொறிஞர், பாவலர், ஆய்வர்.திரு.இ.அகன் அவர்களின் தமிழ் நட்பு. இந்த மதுரைத் தமிழரின் பாவாணர் நூலகத்தினூடாகவும் இவரின் வழிகாட்டலாலும் தமிழுணர்வும், தமிழர் தாழ்வுணர்ச்சியையும் அடிமைத்தனத்தையும் புரிந்து கொள்ளுதல். இதன் முதற்படியாக தனது, தனது துணைவி, பிள்ளைகளின் பெயர்களை தமிழ் மொழியில் மாற்றிக் கொள்ளல். (மகேந்திரராசா - குமரிவேந்தன், புனிதலீலாவதி - நல்லினி, புனிதராசா - நல்லரசன், மதன்ராச் - எழிலரசன், தமிழ்ராச் - தமிழரசன், சுவேந்தினி - வேந்தினி, யெயந்தி - வெற்றிச்செல்வி) தமது பெயர்கள் தமிழ் அல்ல என்று தெரிந்த போது அதை மாற்றிக் கொண்டார்.

02. கிளிநொச்சி மாவட்டத்தின் தமிழ்ச்சங்க செயலாளராக 2005 - 2007 வரை செயற்பட்டார். இக்காலப்பகுதியில் திருக்குறள் மாநாடு இரண்டு (2) நாள் நிகழ்வாக அரங்கேறியது. இதில் கிளிநொச்சிக் கல்வி வலயத்திற்குட்பட்ட பள்ளிகள் மட்டத்தில் கலை, இலக்கிய, பேச்சுப் போட்டிகள் நடத்தப்பெற்று வெற்றி பெறும் மாணவர்க்கு விழா நாளன்று பரிசில்கள் வழங்கல், கலைஞர்களை நன்மதிப்பு (கௌரவித்தல்) ச் செய்தல் , போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்களின் நிகழ்வுகளை அரங்கேற்றுதல் போன்ற நிகழ்வுகளுடன் அறிஞர்களின் உரைகளும் இடம்பெற்றன. விழாநாள் தொடக்கம் சேர, சோழ, பாண்டியன், பண்டாரவன்னியன், இராவணன் அணிவகுப்புக்களுடன் கோலாட்டம், கும்மி, மங்கள இசையுடன் வருகைதந்து ஊர்வலம் விழா மண்டபவாயிலில் முடிவுறும். முதல் நாள் நிகழ்வாக அறிஞர் பேருரைகளும், பட்டிமன்றமும் நடைபெறும் (இரண்டாம் நாள் நிகழ்வுகளின் (2006) (நிழற்படங்கள் சில இணைக்கப்பட்டுள்ளன).

3)2006 சுறவத் திங்களில் தனது பிள்ளைகளில் முதல் திருமணத்தை தனதில்லத்தில் திருக்குறள் நெறித் திருமணமாக தனது மகள் வேந்தினிக்கு நடத்தி வைத்தார். இத்திருமணத்தை அந்நாள் கிளி. மாவட்ட தமிழ்ச்சங்கத் தலைவர் திரு. வே. இறைபிள்ளை அவர்கள் நடத்தி வைத்தார்.(நிழற்படம் இணைக்கப்பட்டுள்ளன)

4) 2006 இல் பன்முகப்படுத்தப்பட்ட அரச நிதியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஒதுக்கப்பட்ட நிதியில் தமிழ்ச் சங்கத்திற்கு ஒதுக்கிய அன்றைய ஆட்சியாளர்கள் கால் (1/4) ஏக்கர் காணியில் (தற்போதைய தொடர்வண்டி நிலையத்திற்கு எதிராக மேற்குப் பக்கமாகவும், அரச மரக்கூட்டு நிறுவனத்திற்கு தெற்குப் பக்கமாகவும் சங்கச் செயலாளர் இவரின் நேரடி மேற்பார்வையில் கட்டி முடிக்கப்பட்டது, கட்டிட நிழற்படம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைக்கப்பட்டுள்ளது) 2007 -2008 இல் இணைப்புச் செயலாளராக வவுனியாவிலிருந்து செயற்பட்ட வேளை இக்கட்டிடம் மேனாள் கிளிநொச்சி அரச முதல்வராக இருந்த திரு. இராசநாயகம் அவர்களால் 2007 இல் திறந்த வைக்கப்பட்டது (தற்போது இக்கட்டிடம் இருந்த இடமுமில்லை.

5) நாட்டுச்சூழலால் 2008 - 2009 வரை இடம்பெயர்ந்து வவுனியாவில் தங்கல். 2009 இல் கிளிநொச்சியில் மீள்குடியேற்றமும், தமிழச்சங்கத்திலிருந்து ஒதுங்கலும்.

6) 2010 சுறவத் திங்களில் பாவாணர் கோட்டம், சீயோன்மலை, சோழபுரம், விருதுநகர் தமிழ் நாட்டில் நடைபெற்ற பாவானர் பிறந்த நினைவு நாள் நிகழ்வில் கலந்து கொண்ட போது நாநூறுக்கு மேலான தமிழ் சார்ந்த நூல்களை எழுதிய முதுமுனைவர், செந்தமிழ் அந்தணர் திரு. இரா.இளங்குமாரனாருக்கு பொன்னாடை போர்த்தி விருது வழங்கும் பெரும் பேறு கிட்டியது. தமிழ் நாட்டில், இலங்கையிலும் கூட பல்லாயிரம் திருக்குறள் நெறித் திருமணங்களை இன்று வரை நடத்தி வைத்துக் கொண்டிருக்கிறார். அத்தோடு குமரித் தமிழ்ப் பணிமன்ற நிறுவனருக்கும் துண்டுபோர்த்தி நன்மதிப்பு செய்துள்ளனர். பாவாணர் கோட்ட அமைப்பாளர்கள் ( நிழற்படம் இணைக்கப்பட்டுள்ளது.)

07) இக் குமரித் தமிழ் குடும்பத்தின் கடைசி திருமணம் ( 5வது) திருக்குறள் நெறித் திருமணமாக கோயம்பேடு, சென்னை தமிழ் நாட்டில் மடங்கள் திங்கள் 2010 இல் பேராசிரியர், முனைவர்.திரு.கு.திருமாறன் ( திருச்சி) ஐயா தலைமையில் நடைபெற்றது. இதன்படி பிள்ளைகள் ஐவரில் இருவருக்கு திருக்குறள் நெறித் திருமணமாகவும், இருவருக்கு கிறீத்தவ திருமணமாகவும், ஒருவருக்கு இந்துத் திருமணமாகவும் நடாத்தி ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதை இக் குடும்பம் சான்று காட்டியுள்ளது.

இதே திருமண விழாவிலேயே குமரித் தமிழ்ப் பணிமன்ற நிறுவனரின் முதல் நூலான பெய்யென பெய்யும் மழை என்ற நூலும் பேரா.முனைவர். திரு. கு. திருமாறன் அவர்களால் வெளியிட்டுரை வழங்கி வெளியிட்டு வைத்தார். இதன் முதற் படியை முனைவர். பேரா. திரு. தமிழகன் அவர்கள் பெற்றுக் கொண்டார். இவருடன் இந் நூலாசிரியரின் தமிழுக்கு அடித்தளமிட்ட பாவலர், ஆய்வர், பொறிஞர் திரு.இ. அகன் அவர்கள், பாவாணர் கோட்ட அமைப்பாளர் பாவலர் ஆசிரியர் உலகத் தமிழ்க் கழகப் பொருளாளர் முதல் மொழி சிற்றிதழ் ஆசிரிய குழு உறுப்பினருமான திரு. நெடுஞ்சேரலாதன் அவர்களும், பொதிகை தொலைக்காட்சி அறிவிப்பாளர் திருவாட்டி. இராசேசுவரி அவர்களும் கலந்து நூல் வெளியீட்டையும் திருமண விழாவையும் சிறப்பித்தனர். இந்நூலுக்கான அணிந்துரையையும் திரு. கு. திருமாறன் அவர்களே வழங்கியிருந்தார். (நிழற்படம் இணைக்கப்பட்டுள்ளன)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மன்றத்தில் இரு நூல்கள் வெளியீடு

நா.வை. குமரிவேந்தன் எழுதிய இரு நூல்களான பெய்யென பெய்யும் மழை (மீள் வெளியீடு), ஒருங்கிருக்கை (யோகாசன) நெறி ஆகிய இரு நூல்கள் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மண்டபத்தில் மேழத் திங்கள் தி. ஆ.2042 (2011-05-14) அன்று வெளியிடப்பட்டன. இவ்விழாவிற்கு கொழும்பு றோயல் கல்லூரியின் துணை முதல்வரும், கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகச் செயலாளருமான திரு.மா. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார். வரவேற்புரை மேனாள் உதவிக் கல்விப் பணிப்பாளராகிய திரு. செ. மகேசு நிகழ்த்தினார். தலைமை உரையை தொடர்ந்து பெய்யென பெய்யும் மழை என்ற நூலை முனை.பேரா.திரு.சி. சிவலிங்கராசா அவர்கள் வெளியிட்டு வைக்க மேனாள் அஞ்சல் முதல்வர் திரு.க. தம்பிஜயா முதற்படியைப் பெற்றுக் கொண்டார்.

ஒருங்கிருக்கை (யோகாசன) நெறி நூலை இலங்கை மின்சார சபை முதன்மை பொறியியலாளர் திரு. பிரபாகரன் வெளியிட்டு வைக்க குமுகத் தொண்டனும் சமாதான நீதவானுமாகிய திரு. து. கனகரத்தினம் அவர்களும் பெற்றுக் கொண்டனர். இருநூல்களின் வெளியிட்டு மதிப்பீட்டுரைகளை முனைவர். பண்டிதர். திரு. செ. திருநாவுக்கரசு, யாழ் பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் முனை.பேரா. திரு. சி. சிவலிங்கராசா, தமிழருவி தா. சிவகுமாரன் (ஆசிரியர், வவுனியா தமிழ்ச்சங்கத் தலைவர்), ஒருங்கு இருக்கைநெறியாளர் திரு.யாக்கோபு.சேரம் அவர்களும் சிறப்புரைகளை வண.தமிழ்நேசன் அடிகளார், கிளிமாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு.த. குருகுலராஜா, ஊடகவியல் விரிவுரையாளர் திருவாட்டி. தேவகௌரி சுதாகரன், மாண்புமிகு சி. சிறிதரன் நா.உ. அவர்களும் ஆற்றி சிறப்புச் செய்தனர். பெருந்தொகையினராக நண்பர்கள், ஊரவர், உறவினர்கள் கலந்து விழாவை சிறப்பித்தனர் எனலாம். (நிழற்படம் இணைக்கப்பட்டுள்ளது.)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் மன்றத்தின் பணிகள்

## 01. தமிழர் நாட்காட்டி



| திருவள்ளுவர் ஆண்டு (தி. ஆ) உ0சகூ (2049) | | சுறவம் (தை) | | ஆங்கில ஆண்டு கி.பி 2018 தை - மாசி | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | அறிவன் (புதன்) | வியாழன் | வெள்ளி | காரி (சனி) |
| 1 க 14.01.2018 | 2 உ 15.01.2018 | 3 ங 16.01.2018 | 4 ச 17.01.2018 | 5 ரு 18.01.2018 | 6 சா 19.01.2018 | 7 எ 20.01.2018 |
| 8 அ 21.01.2018 | 9 கூ 22.01.2018 | 10 க0 23.01.2018 | 11 கக 24.01.2018 | 12 கஉ 25.01.2018 | 13 கங 26.01.2018 | 14 கச 27.01.2018 |
| 15 கரு 28.01.2018 | 16 கசா 29.01.2018 | 17 கஎ 30.01.2018 | 18 கஅ 31.01.2018 | 19 ககூ 01.02.2018 | 20 உ0 02.02.2018 | 21 உக 03.02.2018 |
| 22 உஉ 04.02.2018 | 23 உங 05.02.2018 | 24 உச 06.02.2018 | 25 உரு 07.02.2018 | 26 உசா 08.02.2018 | 27 உஎ 09.02.2018 | 28 உஅ 10.02.2018 |
| 29 உகூ 11.02.2018 | 30 ங0 12.02.2018 | முன்னிலை (சந்நிதி) | அழி (சங்கரி) | [illegible] | உரையாடல் (சம்பாஷணை) | கலையறநூல் (சாத்திரம்) |

தமிழ் இலக்கங்கள்

க 1 உ 2 ங 3 ச 4
ரு 5 சா 6 எ 7 அ 8
கூ 9 க0 10 ய
கக 11 யக
கஉ 12 யஉ
கங 13 யங
கச 14 யச
கரு 15 யரு
உ0 20 உய
உக 21 உயக
க00 100 ம
உ00 200 உம
ங00 300 ஙம
கருசா 156 மருயசா
க000 1000 ஆ
க00க 1001 ஆக
க0ச0 1040 ஆசய

தமிழ் அறிஞர் நினைவுநாள்: ஆ. குமாரசாமி புலவர், புலவர் பெரியதம்பிப்பிள்ளை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவள்ளுவர் ஆண்டு [தி. ஆ] உ0சகூ [2049] — **கும்பம் (மாசி)** — ஆங்கில ஆண்டு கி.பி 2018 மாசி - பங்குனி

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | அறிவன் (புதன்) | வியாழன் | வெள்ளி | காரி [சனி] |
|---|---|---|---|---|---|---|
| செய்தித் தாள் (பத்திரிகை) | [illegible] | 1 க 13.02.2018 | 2 உ 14.02.2018 | 3 ங 15.02.2018 | 4 ச 16.02.2018 | 5 ரு 17.02.2018 |
| 6 சா 18.02.2018 | 7 எ 19.02.2018 | 8 அ 20.02.2018 | 9 கூ 21.02.2018 | 10 க0 22.02.2018 | 11 கக 23.02.2018 | 12 கஉ 24.02.2018 |
| 13 கங 25.02.2018 | 14 கச 26.02.2018 | 15 கரு 27.02.2018 | 16 கசா 28.02.2018 | 17 கஎ 01.03.2018 | 18 கஅ 02.03.2018 | 19 ககூ 03.03.2018 |
| 20 உ0 04.03.2018 | 21 உக 05.03.2018 | 22 உஉ 06.03.2018 | 23 உங 07.03.2018 | 24 உச 08.03.2018 | 25 உரு 09.03.2018 | 26 உசா 10.03.2018 |
| 27 உஎ 11.03.2018 | 28 உஅ 12.03.2018 | 29 உகூ 13.03.2018 | 30 ங0 14.03.2018 | திருவிழா (உற்சவம்) | நிகழ்ச்சி நிரல் [illegible] | உடனுறை (சமேத) |

**தமிழ் இலக்கங்கள்**

அ000 — 8000 — அத்த
க0000 — 10000 — யத்த
எ0000 — 70000 — எயத்த
கூ0000 — 90000 — கூயத்த
க00000 — 100000 — ரத்த

திருவள்ளுவர் ஆண்டு [தி. ஆ] உ0சகூ [2049] — **மீனம் (பங்குனி)** — ஆங்கில ஆண்டு கி.பி 2018 பங்குனி - சித்திரை

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | அறிவன் (புதன்) | வியாழன் | வெள்ளி | காரி [சனி] |
|---|---|---|---|---|---|---|
| வேளாண்மை (விவசாயம்) | மலர் தவசம் (தானியம்) | குறும்பு (சேட்டை) | அரசுக் கட்டில் (சிங்காசனம்) | 1 க 15.03.2018 | 2 உ 16.03.2018 | 3 ங 17.03.2018 |
| 4 ச 18.03.2018 | 5 ரு 19.03.2018 | 6 சா 20.03.2018 | 7 எ 21.03.2018 | 8 அ 22.03.2018 | 9 கூ 23.03.2018 | 10 க0 24.03.2018 |
| 11 கக 25.03.2018 | 12 கஉ 26.03.2018 | 13 கங 27.03.2018 | 14 கச 28.03.2018 | 15 கரு 29.03.2018 | 16 கசா 30.03.2018 | 17 கஎ 31.03.2018 |
| 18 கஅ 01.04.2018 | 19 ககூ 02.04.2018 | 20 உ0 03.04.2018 | 21 உக 04.04.2018 | 22 உஉ 05.04.2018 | 23 உங 06.04.2018 | 24 உச 07.04.2018 |
| 25 உரு 08.04.2018 | 26 உசா 09.04.2018 | 27 உஎ 10.04.2018 | 28 உஅ 11.04.2018 | 29 உகூ 12.04.2018 | 30 ங0 13.04.2018 | செருக்கு (அகங்காரம்) |

**தமிழ் இலக்கங்கள்**

$10^{16}$ = வெள்ளம்
$10^{17}$ = அந்நியம்
$10^{18}$ = அர்த்தம்
$10^{19}$ = பரார்த்தம்
$10^{20}$ = பூரியம்
$10^{21}$ = முக்கோடி
$10^{22}$ = மாகோடி — மாயுகம்

தொல்தமிழர்கள் பெரிய பெரிய தொகை எண்களுக்கெல்லாம் பெயரிட்டு இருந்தனர். இன்று பயன்படுத்தும் 1.2.3.... போன்றன. தமிழர் தம் எழுத்து இலக்கங்களில் இருந்து உருவாக்கப் பெற்றவையே. தொல் தமிழர் ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், நூறாயிரம், கோடி, பல ஆயிரம் கோடி என எண்ணுக் கணக்குகளை பயன்படுத்திய தோடு ஒன்பதை தொண்டு என்றும் தொண்ணூறை தொன்பத்து என்றும் தொளாயிரத்தை தொண்ணூறு என்றும் பயன்படுத்தியும் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02. திருக்குறள் நெறித் திருமணங்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ௦௩. திறந்த கட்டுரைப் போட்டி

## இன்றைய பார்வையில் ஆன்மீகம்

விரிந்த அகல, குறுகிய, நீள, உயர என்ற பார்வையில் ஐம்புலன்களும் ஒடுங்கி இருக்கின்ற பொழுது தான் ஆன்மீக சிந்தனை உள்வாங்கப்பட்டு சகலவற்றையும் தன்னுள் அடக்கி உயிரின் தன்மை எத்தகையது என்பதை விளக்குகின்றது ஆன்மீகம். இன்றைய பார்வையில் ஆன்மீகம் இத்தகைய தன்மை உள்ளதா?

ஆன்மீகம் ஒரு உயர்ந்த நிலையை சிந்திக்கத் தூண்டினாலும், அறிவியல் ரீதியில் சிலவற்றிற்கு உண்மைத் தன்மையை விளக்க முடியாத நிலையும் உள்ளது. அதே வேளை சிந்தையில் ஒரு தெளிவை ஏற்படுத்துகின்றது.

உதாரணமாக ஆறறிவுள்ள மனிதன் உயிர் மறு பிறப்பு எடுப்பதாக கூறினால் ஏன்? எப்படி? எதற்கு? என்ற கேள்வி எழுப் பவே செய்வான். இது எந்தளவிற்கு உண்மை, யார் கண்டார்கள். " கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்"

ஆன்மீகத்தில் சில செயற்பாடுகள் மூடு மந்திரமாகத் தான் உள்ளது. அதே வேளை இக் கலியுகத்தில் ஆன்மீக வளர்ச்சி முழுமையாக குறையவில்லை. நாகரிகம் என்பது உடையிலோ, உயர் நவீன தொழில் நுட்பத்திலோ தங்கியிருக்கவில்லை. பண்பின் ஒழுக்கத்தின் அடிப்படையில்தான் தங்கியுள்ளது. அதை ஆன்மீகத்தின் மூலம் தான் பெறமுடியும் என்பர். வேறு சிலர் ஆன்மீகம் என்றால் என்ன என்பதைப் புரியாமல் உயிர் என்ற ஒன்றில்லை என வாதிப்போரும் உளர். ஏகப்பட்ட பல பொருட்கள் சேர்ந்த கலவையின் செயல்பாடுதான் உயிர் என்று வாதிப்போரும் உண்டு.

பொதுவாக உயிர் என்பது விலை மதிக்க முடியாத ஒன்று. அந்த உயிரைத்தான் மாபெரும் சக்தியாக தன்னுள் அடக்கி பல சொற்கரிய காரியங்களை தூல, சுக்கும சரீரங்களை எடுத்துச் செயல்படுகின்றது. இரவில் விண்ணில் பல நட்சத்திரங்கள் தெரிகின்றன பகலில் அவை தெரிவதில்லை அதற்காக நட்சத்திரங்கள் இல்லை என்று கூற முடியுமா?

கர்மவினை, ஊழ்வினை என்பது எவ்வளவு தூரம் உண்மையென நம்பமுடியும் என்று மார்க்சியவாதிகள், நாத்திகர்கள் கூறினாலும் ஏன் அப்படி ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையென்றால் எல்லா மனிதர்களும் ஒரே மாதிரியில்லாமல் வெவ்வேறு விதமாக உள்ளார்கள். ஏன் பலவிதமான உயிரினங்கள் தோன்ற காரணம் என்ன?

இன்றைய பார்வையில் ஆன்மீகத்தின் கருத்துக்கள் எந்தவகையில் உள்ளன என்று சிந்தித்தால் ஆன்மீக அறிவியல் ஞானி மாணிக்கவாசகரின் திருவாசக கருத்தைப் பார்ப்போம்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருச்ச மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாக நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திழைத்தேன் எம் பெருமான்!

இதேபோல பரிணாம வளர்ச்சியின் தந்தை விஞ்ஞானி சாள்ஸ் டார்வினின் கருத்துப்படி ஒரு உயிரினத்தின் நீண்ட கால வளர்ச்சிப் போக்குதான் மறு உயிரினம் தோன்றக் காரணம் என்பதை அவருக்குப் பின் தோன்றிய விஞ்ஞானிகள் மறுத்துள்ளனர்.

தேங்காயை நட்டால் தென்னை மரம்தான் முளைக்கும் மாமரம் முளைக்குமா? ஆகவே குரங்கு பல லட்சம் வருடங்களுக்குப் பின் மனிதனானான் என்ற கருத்து ஏற்புடையதல்ல பகுத்தறிவுக்கும் உகந்தல்ல

பல்லாயிரம் வருடங்களுக்கு பின் குரங்கு பரிணாம வளர்ச்சியால் மாறித்தான் மனிதன் வந்தான் என்றால் இன்றைய குரங்குகள் ஏன் இன்னும் குரங்குகளாக இருக்க வேண்டும். மனிதனாக மாற ஏன் முடியவில்லை. குரங்கில் இருந்து தான் மனிதன் பிறந்தான் என்ற கருத்தை இன்றைய பார்வையில் ஆன்மீகம் ஏற்காது, ஆன்மீகம் அறிவியல் இரண்டையும் புறம்தள்ளக் கூடாது மனிதகுலத்திற்கும் உலகிற்கும் பயனுள்ளதாக்க வேண்டும்.

ஆன்மீகத்தை நன்கு கற்றறிந்தால் மட்டும் போதாது நடைமுறையில் அதன் படி ஒழுக ஒரு நிலைப்பட்ட மன ஒருமைப்பாடுதான் மிக முக்கியம். இது சாதாரணமாக எல்லோருக்கும் கை கூடியதொன்றல்ல.

இன்றைய அறிவியல் ஆன்மீகத்தை பல கோணங்களில் இருந்தும் பிய்த்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டி, ஊடுருவி ஆய்வு செய்து பார்க்கின்றது. அதேவேளை ஆன்மீகத்தின் ஆழ, அகலத்தை, நீள, உயரத்தை இன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை. மனித மூளையின் அபார வளர்ச்சியால் கூட இன்னும் ஆன்மீகத்தின் எல்லையை காண முடியாமல் இருக்கின்றது. மனித சக்தியால் முடியாததை ஆன்மீகத்தின் வழி நின்று கடவுளே என்னைக் காப்பாற்று என்று உடல் தாங்கி உயிர் அறை கூவி அழைக்கின்றது அது மட்டுமல்லாது எமையறியாமலே ஒரு தற்துணிவைத் தருகின்றது.

இளம் வயதில் புரட்சி பேசியவர்கள் வயதுபோனதும் ஆன்மீகவாதியாக மிளிர்ந்ததை வரலாறு காட்டுகின்றது. சிலர் ஆன்மீகத்திலும் அறிவியலிலும் கால்பதித்துள்ளனர். தனித்து ஒன்றில் நின்று சாதிக்க முடியாது திணறுகின்றனர்.

அதேவேளை சிவபெருமானை முழு முதல் கடவுளாகக் கொண்ட சைவம் பண்டையகால " ஒன்றே குலம் ஒருவனே கடவுள்" என்ற அடிப்படையிலேயே என்றும் நிலை பெற்று நடைமுறையில் திகழ்கின்றது. சரியான ஓர் ஆன்மீகப் பாதையை என்றும் காட்டி நிற்பது சைவம் ஒன்றே. இந்த சைவ ஏக கடவுள் கொள்கையைத்தான் இசுலாம் மார்க்கம் கடைப் பிடித்து வருகின்றது. ஆரியரின் ஊடுருவல்தான் பல கடவுள் வழிபாட்டை சைவத்திற்குள் புகுத்தியது. மெக்காவிற்கு கச் யாத்திரை செய்கின்றார்களே அங்கே கஃபா என்று மூடிக் கட்டி வழிபடுகின்றார்களே அது லிங்கத்தை உள்ளே வைத்துத்தான் வழிபடுகின்றார்கள். இது எத்தனை பேர்களுக்குத் தெரியும்.

இன்றைய விஞ்ஞான புதுமைகள் எல்லாம் சைவத்திற்குள் அடக்கம், கடவுள் மறுப்பு கொள்கையொன்றைத் தவிர. பொதுவுடமை கொள்கைகள் அத்தனையும் பற்றி பெரியபுராணம் பேசியுள்ளதை காணலாம். இன்றும் அறிவியலால் எட்டமுடியாத பல புத்தாக்கங்கள் பற்றியெல்லாம் புராணங்கள், வேதங்கள், இதிகாசங்களில் காணலாம். என்றால் ஆன்மீகத்தின் உயர்ந்த நிலைதான் என்ன? இன்றைய பார்வையில் ஆன்மீகம் கடவுள் ஒருவரே என்ற கொள்கையை சகல சமயங்களும் ஏற்றுக் கொண்டாலும் ஒருசில குறிப்பிட்ட சாரார் மத அடிப்படை வாதிகளாக செயல்படுவது தவிர்க்கப்பட வேண்டும். மத சார்பற்ற கொள்கை வேண்டும். சமயங்கள் எல்லாம் அறத்தில் வெளிப்பட்ட தர்ம நீதியை சொன்னாலும் அந்த அந்த சமயங்களில் உள்ளவர்கள் அதை கடைப்பிடித்து ஒழுகியதைக் காண்பது அரிது.

அதனால்தான் உலகில் பல துன்மார்க்கங்கள் ஏற்பட காரணமாக அமைகின்றன. சர்வதேச ரீதியில் எடுத்துப் பார்த்தால் வல்லரசு நாடுகள் என்பன ஏனைய வலிமை குன்றிய நாடுகளை ஏதோ ஒரு விதத்தில் அடக்கி ஆளவே விரும்புகின்றன. இதே போல ஒவ்வொரு நாடுகளிலும் உள்ள பெரும்பான்மை இன அரசுகள் அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் சிறுபான்மை இனங்களின் உரிமைகளை வழங்காது அடக்கியாண்டு வருகின்றனர் சரியான ஆன்மீகப் பாதையில் இவை தவறாகும். சகல உயிரினங்களும் வாழப்பிறந்தவை சாகப்பிறக்கவில்லை. ஆகவே உரியகாலம் வரும்வரை வாழ வேண்டிய உரிமை ஒவ்வொரு ஆத்மாக்களுக்கும் உண்டு என்பதை ஆன்மீகம் வலியுறுத்துகின்றது. ஆனால் ஒரு சாரார் உரிமைகள் மறுக்கப்பட்ட மனிதர்களாக வாழ்வதை காணலாம்.

நன்மை தீமைக் காரியங்களுக்கு எல்லாம் புதுப் புதுக் கிரியைகள், சடங்குகள் , சம்பிரதாயங்களை பணத்தை முதன்மையாக வைத்தே நடைபெறுகின்றன.

இன்றைய பார்வையில் ஆன்மீகத்தைச் சரியான முறையில் புரிந்து கொள்ளாத சனங்கள் ஓடுகிற ஓட்டத்தைப் பார்த்தால் ஏதோ போட்டு வைத்ததை எடுக்கப் போவது மாதிரி சொல்ல முடியாத ஆசை, வசதியில் உள்ளவர்களைப் போல தாங்களும் வாழ வேண்டும். அதற்காக ஆன்மீக கண்ணை மறைத்து பிழையான வழிகளில் பொருளீட்ட முனைகின்றார்கள்.

இன்றைய பார்வையில் ஆன்மீகம் சரியான முறையில் பாலர் வகுப்பில் இருந்து பல்கலைக்கழகம் வரை போதித்தால் பல புத்தாக்கங்களை செய்யலாம். அவை முன்பின் ஆபத்தான விளைவுகளை சகல ஆத்மாக்களுக்கும் பிரபஞ்சத்திற்கும் ஏற்படா வண்ணம் அமைய வேண்டும்.

சக்தியைத்தான் கடவுள் என்று வழிபடுகின்றோம். சைவத்தை தவிர ஏனைய சமயங்கள் எல்லாம் மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்டவைகளே அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வழியை காட்டுகின்றன. ஆன்மீகம் என்பது எல்லாச் சமங்களுக்கும் எல்லா ஆத்மாக்களுக்கும் பொதுவான ஒன்று சமயங்களுக்கு அப்பாற்பட்டது.

ஆன்மீகப்படி இன்று மனிதன் வாழ்வதில்லை " மனிதனை மனிதன் சாப்பிடுகின்றான்" ஆன்மீகத்தை முதன்மைப்படுத்திக் கொண்டு சகல துறைகளையும் கெடுத்து வருபவர்களாகவே இன்றைய மனிதர்கள் உள்ளனர்.

ஆட்சி பீடங்களில் இருப்பவர்கள் கூட ஆன்மீகத்தை தங்களின் சுகபோக வாழ்விற்காக பயன்படுத்தி வருகின்றார்களே ஒழிய சகல ஆத்மாக்களுக்காகவும் சர்வதேசத்தின் சுபீட்சத்திற்காகவும் பிரயோகிப்பதில்லை அதனால் தான் முன்னர் என்றுமில்லாதவாறு இயற்கை அழிவுகளுக்கு மனிதன் முகங்கொடுக்கவேண்டியுள்ளது. ஆன்மீகம் சொல்லவில்லை மதம் பிடித்து சமயம் மாறச் சொல்லி, மனிதன்தான் பணத்திற்காக, படிப்பிற்காக, வசதியான உலக வாழ்விற்காக சமயம் மாறுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியான முறையில் ஆன்மீக ரீதியில் சிந்தித்தால் இன்றைய உலகில் மனிதன் மனிதனாக இல்லை. பெயரளவில் ஆறறிவுள்ளவன் என்று கூறிக் கொண்டு ஏழாவது அறிவுப் பற்றியும் பேசுகின்றான். உள்ளத்தை வைத்து உலகத்தை பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் மேலான ஞானத்தை அடையமுடியும் என்கிறது ஆன்மீகம். ஆனால் இன்றைய பார்வையில் எவ்வளவு தூரம் வெற்றியளித்துள்ளது.

மாக்ஸியம் பேசுபவர்கள் கூட ஏதோ முற்போக்கு வாதிகள் என்று கூறி சந்தர்ப்பம் சூழ்நிலைகளுக்கேற்ற மாதிரி, மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றி, தலைமைப் பீடத்தில் உள்ளவர்கள். மட்டும், சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டு சாதாரண மக்களை சமத்துவமாக வாழச் சொல்கிறார்கள். உள்ளும் புறமும் தூய்மையான நடைமுறைகளைக் கொண்டது ஆன்மீகம் ஒன்று தான் இன்றைய பார்வையில் அது இல்லை இம்மை மறுமை இருக்கிறதோ இல்லையோ மறுமை என்ற நம்பிக்கை உள்ளத்திலிருந்தால் ஆன்மீக உணர்வுடன் மனிதன் உயர்ந்த நடைமுறைகளைக் கொண்டவனாய் இருக்க வழிவகை செய்யும். இன்று ஆன்மீகத்தால் பல சாதனைகள் நிகழ்த்துபவர்கள் குறைவு.

ஒருபுறம் பணத்தை ஏனைய வசதிகளை கொடுத்து மதம் மாற்றுகின்றார்கள் இன்னொருபுறம் மக்களிடம் பணம் ஏனைய வசதிகளைப் பெற்று மதம் வளர்கிறார்கள். மேலான சக்தியான கடவுளை வழிபடுவதற்கு கூட காசு வேண்டிய நிலையை இன்று உருவாக்கியுள்ளார்கள் மதம் பிடித்த மதவாதிகள். அதனால்தான் "காசேதான் கடவுளப்பா" என்ற ஒரு பாடலும் உள்ளது. மதம் வளர்கின்றோம் என்று மக்களை பிரிக்கும் செயல்களைத் தான் மதவாதிகள் செய்து வருகின்றார்கள். மேற்கத்தேய நாட்டு குப்பைகளையெல்லாம் நாகரிகம் என்று வழிபாட்டு தலங்களில் கூட தலைவிரி கோலத்துடன் உணர்வைத்தூண்டும் உடைகளுடன் வருகின்றார்கள். கடவுளுக்கு சோ காட்டவா அல்லது உண்மையாக வழிபாட்டில் ஈடுபடுபவர்களின் புலன்களை திசைத் திருப்பவா? இவையெல்லாம் ஆன்மீகத்திற்கு ஏற்புடையனவா?

பண்டைய காலங்களில் கடவுள் திரு வீதி உலா வரும்போது தீவெட்டி பிடித்து வருவது மரபு இன்று கடவுளுக்கு லைட் அடிக்கிறார்கள். வேண்டுமானால் லைட்டை பிடித்துக் கொண்டு வரலாம் ஆனால் கடவுள் முகத்திற்கு அடிப்பது தவறாகும். ஆதிகாலங்களில் சைவசமய முறைப்படி வைகறைப் பொழுதில் மணி அடித்து வழிபாட்டிற்கு மக்களை அழைப்பது வழக்கம் இன்று ஏனைய சமயத்தவர்களும் தங்கள் தங்கள் மார்க்க சுலோகங்களை ஒலிபெருக்கி மூலம் ஓதுவதுடன் மலர்கள் தூவி கடவுளை வழிபடுகின்றார்கள். அரசியல்வாதிகள் மக்களை ஏமாற்றி பிழைப்பது ஒருபுறம் ஆன்மீக வாதிகள் கடவுளை ஏமாற்றி பல வித மத பிரிவுகளை உண்டாக்கி பிழைப்பு நடத்துவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருபுறம் இதுதான் இன்றைய பார்வையில் ஆன்மீகம் உயிருக்கு ஒரு சாந்தி இல்லாமல் உலகத்தைக் கட்டி ஆண்டுதான் என்ன பலன்.

அண்டம் (the indivisible perfection) என்ற ஏகப் பரவெளியில் எத்தனை கோடான கோடி கோல்கல், வால்வெளிகள், வால்நட்சத்திரங்கள், துகள்கள், எரிகற்கள் இன்னும் கண்களால் பார்க்கமுடியா பொருட்கள் இருந்தாலும் உயிர் என்கிற ஆத்மாவுக்கு நிகர் எதுவுமில்லை. அந்த ஆத்மாவை தாங்கிய உடல் எதுவாக இருந்தாலும் அது வாழும் மட்டும் ஏதோ ஒருவகையில் பயன் உள்ளதாகவே இருந்து வருவதை அறியலாம். ஒவ்வொரு உயிரினமும் அதன் அறிவிற்கேற்ற முறையில் செயற்பட்டு வாழ்ந்து வருகின்றது. அறிவில் குறைந்த உயிரினமானாலும் நன்மை பயக்கும் அதன் செயலின் மூலம் உயர் பிறவியை எடுக்க தக்கதாக சமய வரலாறுகள் கூறுகின்றன.

ஆன்மீகம் சரியான முறையில் கடைப்பிடிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டால் சகல ஆத்மாக்களும் ஞானிகளாகலாம் அதனால்தான் அருட்திரு சுவாமி விபுலானந்த அடிகளார் உள்ளக்கமலமடி உத்தமனாய் வேண்டுவது என்றார். ஒவ்வொரு ஆத்மாவும் தர்ம நீதிப் படி வாழ்ந்தாலே கடவுளை வழிபட்டதுக்கு சமன் வேறு சமயங்களும் தேவையில்லை சம்பிரதாயங்களும் தேவையில்லை. இன்றைய பார்வையில் இந்த நிலையில் உள்ளனவா?

மகேந்திரன் என்.ஆர், 37 ஔவையார் வீதி,
திருக்கோணமலை.
தொலைபேசி: 026 2221536



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுப் பார்வையில் இலங்கையில் போரும் அமைதியும்



விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள் அதிகரித்து சந்திர மண்டலத்திற்கும் அப்பால் சென்று கொண்டிருக்கும் இக்காலத்திலே நினைத்த விடயங்கள் அனைத்தையும் இருந்த இடத்திலிருந்து அழிக்கக் கூடிய மிகப் பயங்கரமான அணு ஆயுதங்களை எல்லாம் வைத்துக் கொண்டு எந்த நாட்டையும் அழித்து விடுவோம் என்று தம்பட்டமடித்து தலைவிரித்தாடிக் கொண்டு இருக்கும் இச் சந்தர்ப்பத்தில் போரைப் பற்றி கூறினால் ஏற்படும் அழிவுகளைப் பற்றி போர் ஏற்படுவதற்கான காரணிகள் பற்றி மாறி மாறி வந்த அரசாங்கங்களின் அரசியல் வியூகங்களைப் பற்றி, போரின் படிமுறைகளைப் பற்றி இப்போது இரவானாலும் பகலானாலும் நினைத்த நேரத்தில் விரும்பிய இடங்களுக்கு சென்று வர சந்தர்ப்பங்கள் கிடைத்திருப்பதைப் பற்றி அமைதியாக சுதந்திரக் காற்றை சுவாசிக்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்ததைப் பற்றி, இக் கட்டுரையில் எழுதிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

முதலில் போரென்றால் என்ன என்பதை நாம் சற்று ஆழமாக பார்க்க வேண்டும். போரில் பலவிதமான பிரிவுகள் காணப்படுகின்றன. முதலாம் உலக மகா யுத்தம், இரண்டாம் உலக மகா யுத்தம் இவைகளும் ஒருவிதமான போராகும். அடுத்து மகாத்மா காந்தி காட்டித்தந்த சத்தியாக்கிரக சாத்வீக போராட்டம் இதுவுமோர் ஒரு விதமான போராட்டம். அடுத்து நாட்டுக்குள் கிளர்ந்தெழும் போராட்டம் இதுவும் ஓர் உள்நாட்டுப் போராட்டம். அபிவிருத்திகளை, எண்ணை வளங்களை, வாசனைத் திரவியங்களை கைப்பற்றுவதற்காக அந்த நாடுகளை பிடிக்கும் போர், இப்படி பல போர்கள் உலகில் நடந்து இருக்கின்றன. இதில் நமது இலங்கை நாட்டில் நடைபெற்று வந்த போர் எந்த வகையைச் சாரும் என்பது தான் இன்றைய கேள்வியாகும்.

போராட்டம் நடைபெறுவதற்கான காரணிகள் என்ன என்பதனை ஆராய்ந்து பார்த்தால் நம் நாட்டின் போர் எந்த வகையைச் சார்ந்தது என்பது தெளிவாகி விடும். வரலாற்றுப் பார்வை எனும் போரில் ஆரம்பகால காரணிகளை தொட்டுப் பார்க்க வேண்டும். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் இவர்கள் மூன்று பகுதியினரும் இலங்கையில் பல ஆண்டுகள் ஆட்சி நடாத்தி இருக்கின்றனர். இலங்கையை ஆண்ட மன்னர்களுடன் போராட்டங்களை நடாத்தி ஆட்சி நடாத்தி இருக்கின்றார்கள். இவர்களின் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் இருந்த பல இன மக்களுக்கும் ஒரே விதமான ஆட்சியை நடாத்தி இருக்கின்றார்கள். சில அரசர்களுடன் பல ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் செய்து போராட்டங்களை நிறுத்தி ஆட்சி செய்திருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் அடையாள சின்னங்களான காலிக் கோட்டை, மட்டக்களப்பு கோட்டை தேவாலயங்கள், பாடசாலைகள் இன்றும் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றதைக் காணலாம்.

**போராட்டத்தின் அவசியம் என்ன?** ஏன் இந்தப் போராட்டத்தை தொடங்கினார்கள் என்று பார்த்தால் ஓர் நாட்டில் வாழும் பல இன மக்கள், பன்னெடும் காலமாக வாழ்ந்த மக்கள், அதே நாட்டில் வாழும் இன்னுமொரு இன மக்களால் தாக்கப்பட்டால், பாதிக்கப்பட்டால், ஆட்சியாளர்களால் நெருக்கப்பட்டால், அல்லது ஒடுக்கப்பட்டால் அந்த இனம் கிளர்த்தெழுவது வரலாற்று உண்மையாகும். இலங்கைக்கு தோணியில் வந்த விசயன் ஈழத்து ராணியை , குவேனியை தமிழ் நாட்டு வழக்கப்படி தாலி கட்டி மணம்முடித்த நம் தங்கைச்சியை தமிழ் பேசும் பொன் வண்டை இந்த ஈழமுள்ளவரை, ஈழத்திலே இதிகாசமுள்ளவரை இந்த நாட்டை ஆளும் பொறுப்பு உந்தனுக்கு தான் என்று சத்தியம் செய்து சதியாக ஏமாற்றிய இலங்கையின் நிரந்தர வாசிகள் பேரினவாதிகளால் பல தடவைகள் பாதிக்கப்பட்ட நிகழ்வுகளை பார்த்தால் ஏனிந்த யுத்தம் தொடங்கினார்கள் என்பது தெளிவாய் விளங்கும்.

இலங்கை சுதந்திரமடைய முழுமையாக பாடுபட்டவர்களில் முக்கியமானவர்களான சேர். பொன்னம்பலம் இராமநாதன், சேர். பொன். அருணாச்சலம் போன்றோர் இலங்கையின் சுதந்திரத்திற்காக பல படிகளை தாண்டியவர்கள். சுதந்திரம் கிடைத்ததும் சுதந்திரத்திற்காக பாடுபட்ட ,பிரயோசனமாய் இருந்த ஏணியை உதைத்து தள்ளி விடுவது போல் தமிழர்களை நடாத்தினார்கள் ஆட்சியாளர்கள். 1931ம் ஆண்டு டொனமூர் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டது. 1947ம் அண்டு சோல்பரி சீர்திருத்தம் கொண்டுவரப்ப்ட்டது. அனைத்து திட்டங்கள் மூலமும் தமிழ் மக்களுக்கோ சிறுபான்மை இனத்தாருக்கோ பிரச்சினை தீரவே இல்லை இதனால் தமிழர்கள் விரக்தி அடைந்தார்கள். 1940ம் ஆண்டு சிங்கள மகா சபை ஒன்றை ஏற்படுத்தினார்கள்.இதில் பௌத்த இளைஞர்கள் அனேகமாக சேர்ந்தார்கள். இந்தச் சபைதான் இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் உணர்ச்சிகளை தட்டி எழுப்பியது.

பௌத்த மதத்தை அரச மதமாகவும் சிங்கள மொழியை அரச மொழியாகவும் சட்டத்தில் எழுத வைத்தனர். இதனால் தமிழ் மக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டது. தமிழ் மக்கள் கிளர்த் தெழத் தொடங்கினார்கள். இதுவே தமிழ் மக்களின் போராட்டத்தின் ஆரம்பமாகும். இதன் காரணமாக தமிழ் மக்களின் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தின் முன்னால் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இதில் பல முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.போராட்டத்தின் தன்மையை அறியாத அரசு பல காடையர்கள் மூலம் அதை கலைத்தார்கள், கல்லால் அடித்தார்கள். இரத்தம் சிந்தச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்த உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது. இந்தப் போராட்டம் ஆனது மகாசபையின் ஆர்வத்தை பலப்படுத்தியது. இதை பிரயோசனப்படுத்திய எசு. டபிள்யு.ஆர். டி. பண்டார நாயக்கா அவர்கள் 1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் என்ற தொனிப் பொருளில் தேர்தலை நடாத்தி வெற்றி பெற்றார். இருந்தும் தமிழ் மக்களுடைய குறைகளை நிவர்த்தி செய்வதற்கு செல்வநாயகத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். இந்த ஒப்பந்தம் இலங்கையில் பிரிவினையை ஏற்படுத்தும் என்று மகாசபை கூறியதற்கு இணங்க பண்டாரநாயக்காவே அந்த ஒப்பந்தத்தை கிழித்து எறிந்தார். இந் நிகழ்வும் தமிழ் மக்களை தனிப்பட்ட முறையில் போராடத் தூண்டியது.

யாழ்ப்பாணத்து மக்களால் பெரும் எதிர்ப்பு காட்ட தொடங்கியது. அதனைச் சார்ந்து தென் பகுதி சிங்கள மக்களும் இதற்கு ஆதரவு காட்டியபடியால் காலி முகத்திடலிலே ஓர் போராட்டத்தை தொடங்கினார்கள். அதுவும் கலைக்கப்பட்டது. இதனால் வடக்கிலும் கிழக்கிலும் ஒவ்வொரு கச்சேரிகளுக்கு முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டம் 1960ல் ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தில் சகல தமிழ் மக்களும் பங்கு பற்றினர். இலங்கையில் நடைபெற்ற அனைத்து போராட்டங்களையும் விட இது ஓர் முக்கிய போராட்டமாக கருதப்பட்டது. மாணவர் மன்றம், மாணவ அமைப்பாக மாற்றப்பட்டது. உரிமைகளை கேட்டு சிறீமாவோ அம்மையாரிடம் பத்து மாணவர்கள் இரத்தத்தில் கையெழுத்து வைத்து அனுப்பிய சந்தர்ப்பங்களும் உண்டு. அதே நேரம் இறந்த ஏகாம்பரம் ஐயா அவர்கட்கு மாணவர்களால் துவிச்சக்கரவண்டி மூலம் நீண்டதோர் ஊர்வலப் போராட்டம் நடைபெற்றது. சுமார் 42 நாட்கள் இந்தப் போராட்டம் நடைபெற்றது. சிறீமாவோ அம்மையாரின் ஆட்சியில் ஒரு நாள் பின்னிரவு 3.30 மணியளவில் மூன்று ஆமி வாகனத்தில் சீருடைகளுடன் வந்த சிப்பாய்கள் சத்தியாக்கிரகத்தை கலைத்தார்கள். சத்தியாக்கிரகிகளை வாகனத்தில் ஏற்றி சென்று விட்டனர். இது தமிழ் இளைஞர்களுக்கு பெரியதோர் ஏமாற்றத்தைக் கொடுத்தது.

சிறி எதிர்ப்புப் போராட்டத்தை நோக்கிப் பார்த்தால் ஊர்வலத்தின் போது பல காடையர்களால் தடைசெய்யப்பட்டது. இறுதியில் மட்டக்களப்பு முற்ற வீதியில் நடைபெற்ற கூட்டமும் கலைக்கப்பட்டது. 1974ம் ஆண்டு தமிழ்மொழி ஆராய்ச்சி மகாநாடு கூட்டப்பட்டது. இதில் பொலிசார் மிக மோசமான நிலையில் நடந்து கொண்டார்கள். மின் கம்பம் ஒன்றை சுட்டு வீழ்த்தினார்கள். இதனால் ஒன்பது இளைஞர்கள் பலியானார்கள் .பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். இதனாலும் தமிழ் மக்கள் விரக்தி அடைந்தார்கள். அடுத்து அரசாங்கக்கல்வி கொள்கையொன்று முன் வைக்கப்பட்டது. இந்த கொள்கையே இளைஞர்களை, மாணவர்களை மிக மோசமான நிலைக்கு தள்ளப்பட வைத்தது என்றே கூற வேண்டும். உயர்தரப் பரீட்சையில் 3ஏ பெற்றவர் வீதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை இன்றி அலைந்து திரியும் போது 3சி எடுத்தவர் வைத்தியராக கடமை ஆற்றுவதைக் காண்கின்றோம். இந்த நிலையே இளைஞர்கள், மாணவர்கள் அனைவரும் கிளர்ந்தெழுவதற்கு ஓர் அத்திவாரமாக இருந்தது. அனைத்து சாத்வீக போராட்டங்களும் தோல்வி அடைந்தது.

பண்டா செல்வா ஒப்பந்தம், டட்லி சேனாநாயக்க செல்வா ஒப்பந்தம், அனைத்து உடன்படிக்கைகளும் தோல்வி கண்ட நிலையிலே இளைஞர்களை ஆயுதமேந்த தூண்டியுள்ளது. வன்முறைகள் மிக மோசமான நிலையில் ஆரம்பிக்கத் தொடங்கியது. மாறி மாறி வந்த அரசாங்கங்கள் மிக மோசமான நிலையில் வன்முறையில் ஈடுபடத் தொடங்கியது. தேர்தலுக்காக யாழ்ப்பாணம் சென்ற ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் வன்முறையிலே ஈடுபடத் தொடங்கினார்கள். இந்த வன்முறைகள் இலங்கை வாழ் அனைத்து தமிழர்களையும் கதிகலங்க வைத்த வன்முறையாகும். யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் யோகேசுவரன் ஐயா அவர்களின் வீடு உடைக்கப்பட்டது. சுமார் 200 வீடுகள் அழிக்கப்பட்டன. அது மட்டுமன்றி யாழ்ப்பாணத்து மக்களின் இதயமான, பொக்கிசமான, உலகம் போற்றும் நூல் நிலையத்தை எரித்தார்கள். இலங்கை வாழ் தமிழ் மக்களின் கல்வி வளத்தை குறைத்தார்கள். தொலைத்தார்கள். சுமார் 25.000 நூல்கள் எரிக்கப்பட்டன. இந்த நிகழ்வும்இளைஞர்களை வெகுவாக பாதிக்க தொடங்கியதென்றும் கூற வேண்டும். அத்துடன் ஈழ முரசுப் பத்திரிகை அலுவலகத்தை தேடி எரித்தார்கள். இது பெரும் போராக வெளிப்படத் தொடங்கியது.

கறுப்பு யூலை அழிப்பு அரசின் திட்டமிட்ட கலகலப்பான போராகும். அத்தோடு இலங்கை பூராகவும் நடாத்தப்பட்ட போராகும். தமிழ் மக்களின் கல்வி அபிவிருத்தி பொருளாதாரம் மக்கள் குறைப்பு, இளைஞர் அழிப்பு போன்ற அனைத்தும் தலைவிரித்தாடிய மாபெரும் போராகும். 1983ம் ஆண்டு யூலை மாதம் 13 இராணுவ வீரர்கள் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டார்கள். இதனை அடுத்து 1983ம் ஆண்டு யூலைக் கலவரம் ஆரம்பமானது. இந்த ஆரம்பம் தமிழ் மக்களின் பொருளாதாரம் கல்வி போன்றவைகளை பாதித்ததோடு தமிழ் இளைஞர்களை முழுமையாக போராட்டத்தில் இறக்கியது என்றே கூற வேண்டும்.

சிங்கள அரசுக்கு முன்னால் தமிழ் மக்களால் எடுக்கப்பட்ட அனைத்து சாத்வீக போராட்டங்களும் உண்ணாவிரதங்களும் சிறி எதிர்ப்பு போராட்டங்களும் தோல்வியடைந்ததைக் கண்டு தமிழ் இளைஞர்கள் துப்பாக்கி ஏந்தி போராடத் தொடங்கினர்.தமிழ் இளைஞர்களின் போராட்டமானது சுமார் 30வருடங்களாக அமைந்திருந்தது. இப் போராட்டத்தில் அரச படைகள் தமிழ் இளைஞர்களை கைது செய்வதும் அடித்து ஆக்கினை செய்வதும் சிறைக்கு அனுப்புவதுமாக இருந்தனர். தமிழ்ப் போராளிகள் பயங்கரவாதிகள் எனும் பட்டத்தையும் தாங்கியவர்களாக தங்களது இனத்திற்காக, மொழிக்காக, அரசியல் உரிமைகளுக்காக போராடினார்கள். சில சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களில் அப்பாவித் தமிழ் மக்கள் ஒரே தரத்தில் நூறுக்கு மேற்பட்டவர்கள் இறந்த சம்பவங்களும் உண்டு. அரச படைகளும் இப்படி இறந்த நிகழ்வுகளும் உண்டு. பல அரச, அரசாங்க ஊழியர்களும் கொல்லப்பட்டுள்ளனர். இப் போராட்டத்தில் நிகழ்ந்துள்ள பல முக்கிய சம்பவங்கள் எல்லோரும் அறிந்த விடயங்களாகும். போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழ் போராளிகள் குழுக்களாகப் பிரிந்து போராடியதும் தங்களுக்குள் தாங்கள் சண்டை பிடித்து சுட்டுக் கொன்றதும், கிழக்கு மாகாண விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் அரசுடன் இணைந்தும், நீதியான போராளிகள் ஒரு குறுகிய வட்டத்தினுள் இருந்ததும் இப் போர் தோல்வியடைய முக்கிய காரணிகளாக அமைந்திருந்தது.

போரும் அமைதியும் என்று கூறும் போது எதிரும் புதிருமாக தென்படுவதைக் காணலாம். இதில் அமைதியை நாம் நோக்கிப் பார்த்தால் சென்ற காலங்களில் ஆட்சி செய்த அரசாங்கத்தின் அநீதியான அக்கிரமங்கள் இந்த நல்லாட்சி அரசாங்கத்தில் குறைந்திருப்பதே அமைதியின் முற்போக்கிற்கு ஓர் எடுத்துக் காட்டாகும். எனவே போர்க்கால வாழ்க்கையின் பல முக்கிய விடயங்களை தமிழ் மக்கள் அனுபவித்திருக்கின்றனர். அவற்றிலிருந்து கிடைத்த விடுதலையே இப்போது நாம் அனுபவிக்கும் அமைதியாகும். போர்க்கால வாழ்க்கையின் போது வெள்ளை வானில் கடத்தலும் , பிரயாணம் செய்யும் போது சோதனை சாவடிகளில் இறங்கி, ஏறுவதும், இராக்காலங்களில் வீடுகளுக்குள்ளே குடும்பம் ஒன்றாக ஒடுங்கி இருப்பதும், பகிரங்க கூட்டங்கள் நடாத்தக் கூடாதென்று தடை விதித்திருப்பதும், எவ்வித ஆர்ப்பாட்டங்களும் செய்யக் கூடாதென்றும் பல விதமான அடக்குமுறைகளில் இருந்து இன்றைய அரசாங்கம் எங்களுக்கு விடுதலை தந்தது ஓர் அமைதியாகும்.

ஊர் மக்களை நிரையிலே நிறுத்தி வாகனத்தில் முகமூடி முண்டம் ஒன்றைக் கொண்டு வந்து தலையாட்டி ஆட்களை பிடித்து சென்றதில் இருந்து விடுதலை பெற்றதே ஓர் அமைதியாகும். இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அமைதியைக் காப்போம், போரை நிறுத்துவோம் என்று வந்த இந்திய அமைதி காக்கும் படையினர் செய்த அநியாயங்கள் செம்மணியில் உறங்கும் கண்மணிகள் இப்பொழுதும் அத்தாட்சியாக காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது. இதிலிருந்து விடுதலை கிடைத்ததே மிகப் பெரிய அமைதியாகும். மேற்குறிக்கப்பட்ட போர்க்கால வாழ்க்கைகள் அனைத்திலிருந்தும் விடுதலையாகி இருப்பதே அமைதிக்கோர் எடுத்துக் காட்டாகும்.மழை ஓய்ந்தாலும் தூவானம் போகவில்லை என்பார்கள். அதைப் போன்று போர் முடிந்தாலும் போரின் இறுதியில் சரணடைந்த மக்களின் நிலை என்னவென்று தெரியாத தன்மையே இன்றும் அமைதியைக் குழப்பிக் கொண்டிருப்பது போல் தோன்றுகின்றது. இவற்றைத் தவிர தமிழ் மக்கள் ஓர் அளவிற்கேனும் நின்மதியாக வாழ நல்லாட்சி அரசாங்கம் சுதந்திரத்தை தந்திருப்பது அமைதிக்கு முதற்படியாகும். எங்கள் தேவைகள் அனைத்தையும் ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைகள் அனைத்தையும் கேட்டுப் பெறுவதற்கான ஆர்ப்பாட்டங்கள் செய்வதற்கான சந்தர்ப்பங்களை தந்திருப்பது அமைதியை சுட்டிக் காட்டுகின்றது.

இலங்கையின் தேசிய கீதத்தை தமிழில் பாடலாமென்று அனுமதியை வழங்கிய அரசாங்கம் மாணவர்களுக்கு கல்வியை கற்றுக் கொள்வதற்கான வசதியையும் ஏற்படுத்தி கொடுத்தது. தொழிலாளர்கள் தங்கள் தொழிலுக்கு சென்று, சிறப்பாக தொழிலை செய்ய சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட வாழ்க்கை வசதிகள் கிடைத்திருப்பதே அமைதியான வாழ்க்கைக்கு ஓர் அத்தாட்சியாகும். அரச படையினர் போர்க் காலங்களில் எடுத்திருந்த பாடசாலைகள் , வைத்தியசாலைகள், விளையாட்டுத் திடல்கள், பல் தேவைக் கட்டிடங்கள், கமநல கட்டிடங்கள் போன்ற கட்டிடங்கள் அனைத்தையும் மக்களின் பாவனைக்காக விடுவித்துத் தந்தது அமைதிக்கு ஓர் உந்து சக்தியாகும். பொதுமக்களின் காணிகளை தங்களின் தேவைக்காக எடுத்துக் கொண்டது மிகப் பெரியதோர் பிரச்சினையாகும். நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் படிப் படியாக எடுத்த காணிகளை விடுவித்துக் கொண்டு செல்வது அமைதியைக் காட்டி நிற்கின்றது. இறுதியாக போருக்கு பின்னால் ஏற்பட்ட இந்த அமைதியான வாழ்க்கையும் எங்களது தேசிய பிரச்சினையை தீர்த்து பெரியதோர் நீளமான , அமைதியான நிரந்தமான வாழ்க்கையை தருவதற்கு சந்தர்ப்பம் இன்னும் கிடைக்கவில்லை. இன்றைய தமிழர்களின் நிலை "பிச்சை வேண்டாம் நாயைப் பிடியுங்கள்" என்ற பழமொழிக்கேற்ப தனி நாடு வேண்டாம் நாங்கள் நின்மதியாக வாழ, தருவதைத் தாருங்கள் என்ற நிலைக்கு தள்ளப்பட்டு விட்டது. அவர்களும் குரைத்து வருகின்ற நாய்க்கு தேங்காய் துருவல் ஒன்றைப் போடுவது போல ஏதோ ஒன்றை தருவதாகக் கூறி காலத்தைக் கழித்துக் கொண்டு செல்கின்றனர்.

ஒட்டு மொத்தமாக பார்க்கும் போது இலங்கையின் ஆரம்பகாலம் தொட்டு இற்றை வரைக்கும் மாறி மாறி வந்த அனைத்து அரசாங்கங்களும் போரிலே காலங்களைக் கழித்து தங்களது ஆட்சிகளை கடத்திச் செல்கின்றார்கள். இலங்கை வாழ்தமிழ் மக்களாகிய நாங்கள் நின்மதியான, சந்தோசமான, நிரந்தரமான ஓர் அமைதி எப்போது கிடைக்குமென்று எதிர்பார்த்து காத்து நிற்கின்றோம்.

**திருவாளர். எம். கந்தப்பன்**
**பிரதான வீதி, திருக்கோயில் - 03**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருவாளர் சோ.இராசேந்திரம்
(தாமரைத்தீவான்)
ஈச்சந்தீவு, கிண்ணியா.
திருக்கோணமலை.

## கிளிநொச்சி

1. தனித்தமிழ் கண்டது கிளிநொச்சி,
தரையினிற் சிறந்தது கிளிநொச்சி!
இனித்ததைக் கண்டது கிளிநொச்சி,
ஏறென நடப்பது கிளிநொச்சி!

2. மெய்ப்பொருள் கண்டது கிளிநொச்சி,
மேன்மையைப் பெற்றது கிளிநொச்சி!
உய்வழி செல்வது கிளிநொச்சி,
ஊர்க்கு முன்நிற்பது கிளிநொச்சி!

3. போற்றிடத்தக்கது கிளிநொச்சி,
புகழினில் மிதப்பது கிளிநொச்சி!
ஆற்றலைக் கொண்டது கிளிநொச்சி,
அறிவொடு நகர்வது கிளிநொச்சி!

4. பெயர் பரப்பிடுவது கிளிநொச்சி,
பெரும்பணி சுமப்பது கிளிநொச்சி!
அயர்விலாதுழைப்பது கிளிநொச்சி,
அருந்தமிழ் வளர்ப்பது கிளிநொச்சி!

## கேண்மை நன்றி

1. கண்டதும் கற்றேனையா,
கண்களில் இன்பக் கண்ணீர்!
உண்டனன் - உள்ளந் தன்னில்
உறைந்தது - நிறைந்ததையா!

2. நற்றமிழ் துலக்கி வந்த,
நாட்காட்டிகளையும் கண்டேன்!
கற்றிடச் சான்றோர் வந்தார்,
கழிபேர் உவகை தந்தார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மடல் கண்டு மகிழ்ந்தேனையா,
மறக்கிலேன் – வாழ்த்துகின்றேன்!
குடும்பமும் வாழ்க – அன்னைக்
குமரியும் நீடு வாழ்க!

4. நூல் ஒன்றை விடுக்கின்றேன் – நன்
னூலுண்டு தக்கோர் வந்தால்....
நூல் தரும் ஆவல் உண்டு,
நுவல்கிறேன் கேண்மை நன்றி!

## கற்றுயர்வீர்

1. எது பொருந்திடுமோ அது கண்டேன்,
ஏங்கிக்கிடந்தேன் இதுவரையும்?
புதிதெனல் பழைதே பொய்யலவே!
போனது திரும்பி வருவதுவே!

2. குமரித்தமிழெனில் விடலாமோ?
கொஞ்சி மகிழ்ந்திட வேண்டாமா?
நமதுயிரான மூச்சல்லவா?
நாம் போமளவும் துணையலவா?

3. அடிமுடி காணாச் சிவ மலவா?
அளந்திடமுடியாக் கடலல்லவா?
படிபடியென்றே படித்தாலும்,
பாதியைக் கூடக்காண்போமா?

4. வெற்றிநகர் கிளிநொச்சியுடன்,
வென்றிட வேண்டி வாழ்த்துகிறேன்!
கற்றவரெல்லாம் துணை நிற்பீர்,
கல்லாதவரும் கற்றுயர்வீர்!

## வருந்துதையா!

1. தனித்தமிழ் காண்பதற்குத்
தவிதவிக்கின்றேன் – இன்றும்?
இனித்திடு தமிழ் இயக்கம்
இறப்பதன் முன் காண்பேனா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பாவாணர் தந்தார் – முன்னம்
பழமறைமலையார் தந்தார்!
பாவேந்தர் தந்தார் – மற்றும்
பலர் தரமுயன்றார் – போதா!

3. தனித்தியங்காதென்கின்றார்
தமிழறியாதார் சில்லோர்?
இனிப்பினை மாற்றுகின்றார்
இணை வேம்பும் கலக்கின்றாரே?

4. அறிவியற் புதியவைக்கு
ஆக்கச்சொல் இல்லையென்பார்?
பெறுமதிப் பாவாண, நின்
பிரிவெனை வருத்துதையா!

## போலாகும்

1. படி படி தமிழா தமிழ் படிடா,
பைந்தமிழ் தன்னைப் படித்திடடா!
குடி குடி தமிழா தமிழ்பாலைக்
குடித்திடின் பெறுவாய் பேராற்றல்!

2. தமிழ் தமிழ் என்றால் தனி இனிமை,
தமிழ்போல் இனிப்பது வேறேது?
அமுதெனச் சொல்வதும் அடுத்தது தான்,
ஆமாம் சுவைத்ததைப் பார்தமிழா!

3. ஒரு சிலரே தமிழ் தந்தார்கள்,
உச்சியில் நிற்பவர் அன்னவரே!
திரு எனில் செல்வம் – தமிழ்ச்செல்வம்
திருந்தாதோ தமிழ்க் குமுகாயம்?

4. கழகத் தமிழினைக் கற்காரோ?
கற்றே நறுஞ்சுவை காணாரோ?
பழகி வர வரப் புதிதாகும்,
பழம் விழு பாலைப் போலாகும்!

தாமரைத்தீவான்,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஒருங்கிருக்கை (யோகாசன) நெறி பற்றி அறிந்து கொள்வோம்

இங்கு சில நிழற்படங்களும், ஒவ்வொருவரும் உடல், உள நலத்தை பேணும் இருக்கைகளும் காட்டப்பட்டுள்ளன. இவற்றை எட்டு வயதிலிருந்தே செய்யத் தொடங்கலாம். காலை, காலைக்கடன் முடித்த பின் நீர் மட்டும் குடித்து விட்டு விரும்பிய இருக்கை (ஆசனம்) களை செய்யலாம் அல்லது நண்பகல் உணவின் பின் 41/2 - 5 மணி நேரம் கழித்து (உணவு செரிமானத்தின் பின்) ஐந்து அல்லது ஆறு மணிக்கு செய்யத் தொடங்கலாம். செய்முறைகளை மன்ற நிறுவநரின் நூலான ஒருங்கிருக்கை (யோகாசன) நெறி நூலை வாங்கிப் படித்துப் பயன் பெறுங்கள். (பதிப்பு 2011)

| | **இருக்கைகள் (தமிழ்)** | **ஆசனம் (வடசொல் சமஸ்கிருதம்)** |
|---|---|---|
| 1) | தாமரை இருக்கை | பத்மாசானம் |
| 2) | தலைகீழ் இருக்கை / தலை இருக்கை | சிரசாசனம் |
| 3) | உறுப்புக்கள் ஒருங்கிருக்கை | சர்வாங்காசனம் |
| 4) | ஒற்றைக்காலிருக்கை | ஏகபாத ஆசனம் |
| 5) | மயிலிருக்கை | மயூராசனம் |
| 6) | பாம்பிருக்கை | புயங்காசனம் |
| 7) | ஒருங்குமூடுதல் | யோகமுத்ரா |
| 8) | வெட்டுக்கிளியிருக்கை | சலபாசனம் |
| 9) | வில்லிருக்கை | தனுராசனம் |
| 10) | முக்கோணவிருக்கை | திரிகோணாசனம் |
| 11) | மீன் செயல் இருக்கை | மச்சாசனம் |
| 12) | கலப்பையிருக்கை | கலாசனம் |
| 13) | அரைவட்டயிருக்கை | சக்கராசனம் |
| 14) | பிற்புற(மேற்கு - கைகால் இணை) இருக்கை | பச்சிமோத்தாசனம் |
| 15) | ஒட்டகவிருக்கை | உச்ட்ராசனம் |
| 16) | முழங்கால்தலை இருக்கை | யானுசிரசாசனம் |
| 17) | நின்ற கால்கையிருக்கை | பாதகச்தாசனம் |
| 18) | காலடிஉயர்த்திய இருக்கை | உத்தான பாதாசனம் |
| 19) | படகிருக்கை | நாவாசனம் |
| 20) | உயர்த்திய தாமரையிருக்கை | உத்தித பத்மாசனம் |
| 21) | சேயிருக்கை | கர்ப்பாசனம் |
| 22) | பூநூல் இருக்கை | கோமுகாசனம் |
| 23) | வயிறு எக்கிய இருக்கை | உட்டியானா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாமரை இருக்கை




சண்முக மூடுதல்




நின்ற கைகால் இணை இருக்கை




ஒற்றைக்கால் இருக்கை



தலைகீழ் இருக்கை



ஊஞ்சல் இருக்கை



உடல் உறுப்பு ஒருங்கிருக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 24) | வயிற்றுதசை குடற்பயற்சி இருக்கை | நௌலி |
| 25) | பாதிக்கலப்பையிருக்கை | அர்த்த கலாசனம் |
| 26) | (புட்டத்தில்) ஊஞ்சலிருக்கை | தோலுங்காசனம் |
| 27) | கருடவிருக்கை | கருடாசனம் |
| 28) | சித்திருக்கை | சித்தாசனம் |
| 29) | தலைகீழ் தாமரையிருக்கை | ஊர்த்தவ பத்மாசனம் |
| 30) | கைகால் (முதுகுப்புறமாக) இணை தாமரையிருக்கை | பத்தியபத்மாசனம் |
| 31) | உத்தரன் இருக்கை | உத்தரனாசனம் |
| 32) | மலையிருக்கை | பர்வதாசனம் |
| 33) | பிண இருக்கை | சவாசனம் |
| 34) | அமைதியிருக்கை | சாந்தியாசனம் |
| 35) | முதுகுசாய் உறுப்பு ஒருங்கிருக்கை | விபரீதகரணியாசனம் |
| 36) | நாடித்தூய்மை மூச்சுப்பயிற்சி | நாடிசுத்தி பிரணாயாமம் |
| 37) | மீன் இருக்கை | மத்ச்யாசனம் |
| 38) | வச்சிர இருக்கை | வச்சிராசனம் |
| 39) | அரை மமத்ச்யேந்திரா இருக்கை | அர்த்மத்ச் யேந்திராசனம் |
| 40) | மாமூடுதல் இருக்கை | மகாமுத்ரா |
| 41) | அரை தலைகீழ் இருக்கை | அர்த்த சிரசாசனம் |
| 42) | பிறை இருக்கை | பிறை ஆசனம் |
| 43) | அரைவெட்டுக்கிளி இருக்கை | அர்த்த சலபாசனம் |
| 44) | உடல்சாய் இருக்கை | கோணாசனம் |
| 45) | மல்லாந்த வச்சிர இருக்கை | சப்தவச்சிராசனம் |
| 46) | கால் விரல் இருக்கை | உட்கட்டாசனம் |
| 47) | ஆடும் நாற்காலி இருக்கை | பவனமுக்தாசனம் |
| 48) | பின் வளைந்து உள்ளங்கால் உச்சிதொடு இருக்கை | அர்த்த விருச்சிகாசனம் |
| 49) | சேவல் இருக்கை | குக்குடாசனம் |
| 50) | தோள் இருக்கை | புசபீடாசனம் |
| 51) | கண்டபேரண்ட இருக்கை | கண்டபேரண்ட ஆசனம் |
| 52) | உயர்த்திய உடல் சாய் இருக்கை | உத்தித பார்சவகோணாசனம் |
| 53) | ஒருகால் மடக்கி மறுமுழங்கால் தலைதொடு இருக்கை | மரீச்சாசனம் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பின்புற(மேற்கு-கைகால் இணை) இருக்கை




ஒருங்கு அல்லது மாமூடுதல்




தலைகீழ் தாமரை இருக்கை




மீன் இருக்கை



நாடித்தூய்மைமூச்சுப்பயிற்சி



அமைதி இருக்கை



பாம்பு இருக்கை



மலை இருக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 54) | நின்ற ஒற்றை முழங்கால் தலைதொடு இருக்கை | பார்சிவோத்தாசனம் |
| 55) | அரை உறுப்பொருங்கு இருக்கை | அர்த்தசர்வாங்காசனம் |
| 56) | உள்ளங்கால் கூப்பி தலைதொடு இருக்கை | பத்தகோணாசனம் |
| 57) | பின்வளைந்த உச்சி உள்ளங்கால் தொடு இருக்கை | சசாங்காசனம் |

## தொடக்கப் பயிற்சியாளருக்கான இருக்கைகள்

| | | | |
|---|---|---|---|
| 1) | தாமரை இருக்கை | 1 நிமி. | |
| 2) | நாடித்தூய்மை மூச்சிப்பயிற்சி | 2நிமி | |
| 3) | பாம்பு இருக்கை | 1 நிமி. | 4 தடவை |
| 4) | வெட்டுக்கிளி இருக்கை | 0.5நிமி. | 2 தடவை |
| 5) | வில் இருக்கை | 0.5நிமி. | 2தடவை |
| 6) | பின்புற (மேற்கு - கைகால்விரல் இணை) இருக்கை | 2நிமி. | 6 தடவை |
| 7) | முதுகுசாய் உறுப்பு ஒருங்கு இருக்கை | 4 நிமி | 2தடவை |
| 8) | உடல் உறுப்பொருங்கு இருக்கை | 6 நிமி. | 3தடவை |
| 9) | மீன் இருக்கை | 1 நிமி. | 1தடவை |
| 10) | கலப்பை இருக்கை | 1 நிமி. | 2தடவை |
| 11) | முக்கோண இருக்கை | 1 நிமி. | 6தடவை |
| 12) | அமைதி இருக்கை | 10 நிமி. | 1தடவை |

## பெண்கள் செய்ய வேண்டிய இருக்கைப் பயிற்சிகள்
## தொடக்கப் பயிற்சியாளருக்கான இருக்கைகள்

| | | | |
|---|---|---|---|
| 1) | தாமரை இருக்கை | 1 நிமி. | 1 தடவை |
| 2) | நாடித்தூய்மை மூச்சுப்பயிற்சி | 4நிமி | 1 தடவை |
| 3) | வெட்டுக் கிளி இருக்கை | 1 நிமி. | 1 தடவை |
| 4) | பாம்பு இருக்கை | 1 நிமி. | 1 தடவை |
| 5) | வில் இருக்கை | 1 நிமி. | 1 தடவை |
| 6) | பின்புற (மேற்கு- கை கால்விரல் இணை) இருக்கை | 1 நிமி. | 2தடவை |
| 7) | முதுகுசாய் உறுப்பு ஒருங்கு இருக்கை | 3 நிமி | 2தடவை |
| 8) | உடல் உடலுறுப்பு ஒருங்கு இருக்கை | 15 நிமி. | 2தடவை |
| 9) | மீன் இருக்கை | 1 நிமி. | 1 தடவை |
| 10) | ஒருங்கு மூடுதல் இருக்கை | 0.5 நிமி. | 2தடவை |
| 11) | அர்த்த மச்த்யேந்திர இருக்கை | 0.5 நிமி. | 2தடவை |
| 12) | கலப்பை இருக்கை | 0.5 நிமி. | 2தடவை |
| 13) | தலைகீழ் இருக்கை | 5 நிமி. | 1 தடவை |
| 14) | அமைமி இருக்கை | 5 நிமி. | 1 தடவை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்வாழ்விற்கான மிகச் சிறந்த இருக்கைப்பயிற்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1) | தாமரை இருக்கை | 1 நிமி. | 1 தடவை |
| 2) | நாடித்தூய்மை மூச்சுப்பயிற்சி | 2நிமி | 1 தடவை |
| 3) | பாம்பு இருக்கை | 1 நிமி. | 4 தடவை |
| 4) | வெட்டுக்கிளி இருக்கை | 0.5 நிமி. | 2 தடவை |
| 5) | வில் இருக்கை | 0.5 நிமி. | 2 தடவை |
| 6) | ஒருமுக மூடுதல் | 1 நிமி. | 3தடவை |
| 7) | பின்புற (மேற்கு - கைகால் விரல் இணை) இருக்கை | 2 நிமி | 6தடவை |
| 8) | கலப்பை இருக்கை | 2 நிமி | 4தடவை |
| 9) | முதுசாய் உறுப்பொருங்கு இருக்கை | 2 நிமி | 1தடவை |
| 10) | உடல் உறுப்பொங்கு இருக்கை | 10 நிமி | 3தடவை |
| 11) | மீன் இருக்கை | 1 நிமி | 2தடவை |
| 12) | அரைமத்சேந்திரா இருக்கை | 0.5 நிமி | 2தடவை |
| 13) | கால்கை (முதுகுபுறமாக) இணைதாமரை இருக்கை | 1 நிமி | 4தடவை |
| 14) | மயில் இருக்கை | 1 நிமி | 2தடவை |
| 15) | அரைவட்ட இருக்கை | 0.5 நிமி | 1தடவை |
| 16) | முக்கோண இருக்கை | 1 நிமி | 6தடவை |
| 17) | தலைகீழ் இருக்கை | 6 நிமி | 1தடவை |
| 18) | வச்சிர இருக்கை | 1 நிமி | 1தடவை |
| 19) | வயிறு எக்கிய இருக்கை | 10 வின | 3தடவை |
| 20) | வயிற்றுத்தசை குடற்பயிற்சி | 5 நிமி | 2தடவை |
| 21) | அமைதி இருக்கை | 7 நிமி | |

## 3. அகவை 5 இற்கும் 12 உட்பட்ட சிறுவர் செய்ய வேண்டிய இருக்கைகள்

| | | |
|---|---|---|
| 1)தாமரை இருக்கை (பத்மாசனம்) | 1 நிமிட | 1தடவை |
| 2)நாடித்தூய்மை மூச்சுப்பயிற்சி | 4 நிமிட | 1தடவை |
| (நாடிசுத்தி பிராணாயாமம்) | | |
| 3)பாம்பிருக்கை(புயங்காசனம்) | 2நிமிட | 4தடவை |
| 4)வில்இருக்கை(தனுராசனம்) | 0.5 நிமிட | 2தடவை |
| 5)வெட்டுக்கிளி இருக்கை (சலபாசனம்) | 0.5 நிமிட | 2தடவை |
| 6)முதுகுசாய் உறுப்பு ஒருங்கு இருக்கை | | |
| (சர்வாங்காசனம்) | 3 நிமிட | 2தடவை |
| 7)உடலுறுப்பு ஒருங்கிருக்கை (சர்வாங்காசனம்) | | |
| 8)மீன் இருக்கை (மத்ச்யாசனம்) | 5நிமிட | 3 தடவை |
| 9)ஒரு முகமூடுதல் (யோகமுத்ரா) | 1 நிமிட | 1தடவை |
| 10)பின்புற(மேற்கு கை, கால் விரல் இணை) | 1 நிமிட | 3தடவை |
| இருக்கை (பச்சிமோத்தானாசனம்) | 3நிமிட | 4தடவை |
| 11)கலப்பை இருக்கை (கலாசனம்) | | |
| 12)அரைவட்ட இருக்கை (சக்கராசனம்) | 1 நிமிட | 2தடவை |
| 13)பின்வளைந்து உச்சி உள்ளங்கால்தொடு | 0.5நிமிட | 1தடவை |
| இருக்கை (சசாங்காசனம்) | 0.5 நிமிட | 1தடவை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்ச்சி பெற்றவர்கள் மேற்குறித்த நல்வாழ்வுக்கான சிறந்த பயிற்சிகளுடன் செய்ய வேண்டிய மிகுதிப் பயிற்சிகள்

1) பின்புறமாக கைகால் இணை தாமரையிருக்கை (உத்தித பத்மசாசனம்)
2) உயர்த்திய தாமரையிருக்கை (உத்தித பத்மசாசனம்)
3) ஆடும் நாற்காலி இருக்கை (ாவன முக்மாசனம்)
4) படகு இருக்கை (நாவாசனம்)
5) மயில் தாமரை இருக்கை (மயூர பத்மசாசனம்)
6) கருட இருக்கை (கருடாசனம்)
7)சேய் இருக்கை (கர்ப்பாசனம்)
8) நாகபாம்பு இருக்கை (சர்ப்பாசனம்)
9) அம்புவில் இருக்கை (ஆகர்சனதனுராசனம்)
10) முழங்கால் தலை இருக்கை (யானு சிரசாசனம்)
11) பின்வளைந்து உச்சி உள்ளங்கால் தொடு இருக்கை (சசாங்காசனம்)
12) கால்விரலில் இருக்கை (உட்கட்டாசனம்)
13)மலை இருக்கை (பர்வதாதசனம்)
14) இலகு இருக்கை (சுகாசனம்)
15) ஒருசோடி கால்கை உடல்தாங்கு இருக்கை (கச்யபாசாசனம்)
16)தலைகீழ் தாமரை இருக்கை (ஊர்தவ பத்மாசனம்)
17) பக்கவாட்டில் கைகால் நேர்கோட்டில் உடல்சாய் இருக்கை
18) உயர்த்திய உடல்சாய் இருக்கை (உத்திதபார்சவகோணசனம்)
19) ஒருகால் மடக்கி மறுமுழங்கால்தலைதொடு இருக்கை (மரீச்சாசனம்)
20)சேவிலிருக்கை (குக்குடாசனம்
21)பூநூல் இருக்கை (கோமுசாசனம்)
22)அரசயிருக்கை (சிம்மாசனம்)
23)உயர்த்திய குதிக்கால் இருக்கை (உத்தானு பாதசாசனம்)
24) மதசேந்திரா இருக்கை (மதசேந்திராசனம்)

இவைபோன்ற இன்னும் பல இருக்கைகள் உண்டு இவற்றை வாழ்வில் கைக்கொள்வதன் மூலம் அகத்தூய்மையையும் உள அமைதியையும் நோயிலாப் பெருவாழ்வையும் அடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. நோய் தீர்க்கும் இருக்கைப் பயிற்சிகள்

**1) நரம்புத் தளர்ச்சி**

கலப்பையிருக்கை, மீனிருக்கை, உடலுறுப்பு , ஒருங்கிருக்கை, தலைகீழ் இருக்கை, பின்புற (மேற்கு - கைகால் இணைந்த) இருக்கை.

**2) இழுப்பு (ஆச்மா)**

பாம்பிருக்கை, அரை (அர்த்த) மமத்சேந்திரரா இருக்கை, உடலுறுப்பபு ஒருங்கு இருக்கை,

பின்புற (மேற்கு - கைகால் இணைந்த) இருக்கை கலப்பை இருக்கை, முதுகுசாய் உறுப்பு ஒருங்கிருக்கை.

**3) முகப்பரு, தோல்நோய்கள்**

கலப்பையிருக்கை, பின்புற மேற்கு - கைகால் இணைந்த இருக்கை, மீனிருக்கை , உடலுறுப்பு ஒருங்கிருக்கை, தாமரையிருக்கை

**4) மலச்சிக்கல்**

கலப்பையிருக்கை, வில்லிருக்கை, (பின்புற மேற்கு - கைகால் இணைந்த) இருக்கை வயிறு எக்கிய எக்கிய இருக்கை, மயிலிருக்கை, வயிற்றுத்தசை குடற்பயிற்சி இருக்கை, தாமரையிருக்கை.

**5) மூலநோய்**

(பின்புற மேற்கு - கைகால்) இருக்கை, உடலுறுப்பு ஒருங்கிருக்கை, தலைகீழ் இருக்கை, தாமரையிருக்கை, பூநு/ல் இருக்கை, மயிலிருக்கை.

**6) வீரயக்குறைவு, விந்து நோய்கள்**

வயிற்றுத்தசை, குடப்பயிற்சி இருக்கை (நௌலி), தலைகீழ் இருக்கை, வில்லிருக்கை, சித்தர் இருக்கை, தாமரையிருக்கை, கலப்பையிருக்கை, உடல் உறுப்பு ஒருங்கிருக்கை, வயிறெக்கிய இருக்கை, (உட்டியானா) மீனிருக்கை.

**7) தொந்தி, ஊளைச்சதை**

மயிலிருக்கை, வில்லிருக்கை, கலப்பையிருக்கை , தாமரையிருக்கை, உடலுறுப்பு ஒருங்கிருக்கை, பின்புற (மேற்கு - கைகால் இணைந்த) இருக்கை.

**8) தலைவலி**

ஒற்றைக்கால் இருக்கை, தலைகீழ் இருக்கை, அரைமுக்கோண இருக்கை, நின்ற வில்லிருக்கை, நின்ற கால்கையிருக்கை.

**9) காக்காய் வலிப்பு**

உடலுறுப்பு ஒருங்கிருக்கை, வெட்டுக்கிளி இருக்கை கலப்பையிருக்கை, கலப்பையிருக்கை, தலைகீழ் இருக்கை, மீனிருக்கை, வில்லிருக்கை, வயிறெக்கிய இருக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10) **வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு**

உடலுறுப்பு ஒருங்கிருக்கை, மீனிருக்கை, கலப்பையிருக்கை, வில் இருக்கை, வெட்டுக்கிளி இருக்கை, பின்புற (மேற்கு - கைகால் இணைந்த) இருக்கை

11) **குடலிறக்கம் (கேர்ணியா)**

உடலுறுப்பு ஒருங்கிருக்கை, முதுகுசாய் உறுப்பு ஒருங்கிருக்கை, மீன் இருக்கை

12) **கல்லடைசல் (அப்பெண்டிக்)**

தலைகீழ் இருக்கை, கலப்பையிருக்கை, முதுகுசாய் உறுப்பு ஒருங்கிருக்கை, மீனிருக்கை,பின்புற (மேற்கு - கைகால் இணைந்த) இருக்கை , உடலுறுப்பு ஒருங்கிருக்கை (சர்வாங்காசனம்)

13) **சற்க்கரைநோய் (டயபெற்றிக்)**

வில்லிருக்கை , வயிறெக்கிய இருக்கை, (உட்டியானா) , கலப்பையிருக்கை, உடலுறுப்பு ஒருங்கிருக்கை, மீனிருக்கை (மத்ச்சயாசனம்), வெட்டுக்கிளி இருக்கை.

14) **குதிஉ உளைவு(கீல்வாதம்)**

வில்லிருக்கை, வெட்டுக்கிளி இருக்கை, பாம்பிருக்கை,தலைகீழ் இருக்கை, உடலுறுப்பு ஒருங்கிருக்கை, பின்புற இருக்கை (பச்சிமோத்தாசனம்)

15) **விரைவீக்கம், யானைக்கால்**

முக்கோண இருக்கை(திறிகோணாசனம்) , மீனிருக்கை, கலப்பையிருக்கை, கருடஇருக்கை, முதுகுசாய் உறுப்பு ஒருங்கிருக்கை, (பின்புற மேற்கு - கைகால் இணைந்த) இருக்கை, உடலுறுப்பு ஒருங்கிருக்கை

16) **மஞ்சற் காமாலை**

தாமரையிருக்கை, மயிலிருக்கை, கலப்பையிருக்கை, ஒருமுக மூடுதல் (யோகமுத்ரா), மீனிருக்கை, வெட்டுக்கிளியிருக்கை, நாடித்தூய்மை, மூச்சுப் பயிற்சி, வில்லிருக்கை, அரை தலைகீழ் இருக்கை, கலப்பையிருக்கை, உடலுறுப்பு ஒருங்கிருக்கை, மீனிருக்கை, அரைமச்சேந்திரா (அர்த்தமத்ச்சேந்திரா), பின்புற (மேற்கு - கைகால் இணைந்த இருக்கை) (பச்சிமோத்தானாசனம்)

17) **சூதகக் கோளாறுகள் (பெண்கள்)**

அரைமச்சேந்திரா இருக்கை(அர்த்தமத்ச்சேந்திராசனம்) முதுகுசாய் உறுப்பு ஒருங்கிருக்கை, வெட்டுக்கிளியிருக்கை, நாடித்தூய்மை, மூச்சுப்பயிற்சி, வில்லிருக்கை, அரை தலைகீழ் இருக்கை, கலப்பையிருக்கை, உடல் உறுப்பு ஒருங்கிருக்கை, பின்புற இருக்கை (பச்சிமோத்தானாசனம்)

18) **குட்டம்**

கலப்பையிருக்கை, மீனிருக்கை, வில்லிருக்கை , உடலுறுப்பு ஒருங்கிருக்கை, பின்புற (மேற்கு கை கால் இணை) இருக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வளர்த்த சங்கம்

பேராசிரியர் முனைவர் மகாவித்துவான், முத்தமிழ் வித்தகர், வாகீசகலாநிதி, கலாபூசணம், வாக்கின் மன்னன் கனகசபாபதி நாகேஸ்வரன் மொழித்துறை சப்ரகமுவ பல்கலைக்கழகம்.

பாரததேசப் பண்டைய தமிழகக்கத்தில் தமிழ்ப் புலவர்கள் கூடித் தலை, இடை,கடை என மூன்று சாங்கங்கள் கூட்டி அவற்றில் அமர்ந்து தமிழ் வளர்த்தார்கள் என்று கூறுவது மரபாக இருந்து வருகிறது. பாரத கண்டம் தமிழ் வளர்த்த வரலாறு மிகுந்த நயமுடைத்து தமிழ் என்பது மொழி மட்டுமன்று அது ஒரு பண்பாடு. சமயம், கலை, அறிவியல் என்று பரந்து விரிந்த செழுமையுடைத்து இலக்கிய வரலாறு ஆய்வாளர்கள் சங்ககாலம் சங்கமருவிய காலம் என்று பிரித்துக் கூறுவர். இன்னும் சிலர் சங்கம் என்பதே கிடையாது என்பர். வாதப் பிரதிவாதங்களுக்கும் எல்லை கிடையாது. அது ஒரு பொழுதும் ஆராய்ந்து அறிந்து விடவும் முடியாது என்றும் சான்றுகள், விடயங்கள், பெயர்கள், ஊர்கள் கொண்டே இவ்வரலாறு துலக்கமுறும் பொதுநோக்கில் கடைச்சங்க காலத்தில் எழுந்தலையே, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் எனக் கொண்டு வருவதும் தமிழகத்தில் வழக்கமாய் இருந்து வருகிறது. பொதுவாகச் சங்கம் என்னும் சொல்லானது இடைச் சங்கத்தையே குறித்து நிற்கும். சங்கம் வளர்த்த தமிழ் என்பது பிரசித்திவாய்ந்ததொன்று.

மதுரைத் தமிழ்ச்சங்கம், திருவையாறு கரந்தைத் தமிழ்ச்சங்கம், முடியுடை மூவேந்தர் காலத்துச் சங்கம், கொழும்புத் தமிழ்ச்சங்கம் , யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம், வவுனியாத் தமிழ்ச்சங்கம் , வவுனியா முத்தமிழ் மன்றம் , யாழ்ப்பாணம் திருநெறி தமிழ்ச்சங்கம் , குமரித்தமிழ் மன்றம், வட இலங்கை சங்கீத சபை, யாழ்ப்பாண முத்தமிழ் வெளியிட்டுச்சாலை, பேராதனை பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம், கொழும்பு பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம், சப்ரகமுவ பல்கலைக்கழ கலாசார மன்றம், இலண்டன் தமிழ்ச்சங்கம், கனடா தமிழ்ச் சங்கம், நோர்வே தமிழ்ச் சங்கம், யேர்மனித் தமிழ்ச்சங்கம், சுவிச் தமிழ்ச் சங்கம் என்று இன்று உலகளாவிய நிலையிலே பரந்து விரிந்து தமிழ் தொண்டாற்றும் சங்கங்களும், மன்றங்களும் , சபைகளும் , நிறுவனங்களும், பல்கிப் பெருகியுள்ளமையைக் காணலாம். இவற்றின் முழுநோக்கமும் தமிழ்மொழி, தமிழினம், தமிழ்க் கலாசாரம், தமிழர் முத்தமிழ், தமிழ் நூல் வெளியீடுகள், தமிழர் சமயம் வளர்த்தல் என்னும் நோக்கங்களையே கொண்டமைந்துள்ளன. போட்டிகள், விழாக்கள், பரிசளிப்புக்கள் சாதனைகள், கௌரவிப்புக்கள், பட்டம் விருது வழங்கல் என்பனவும் உற்சாகப்படுத்தி ஊக்கமளிக்கும் நல்ல செயற்பாடுகளாகும். மாநாடுகள், கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், கலந்துரையாடல், கலைவிழாக்கள், ஆய்வரங்குகள் என்பனவும் இன்று தமிழ் வளர்க்கும் நிறுவனங்களால் முன் மொழியப்பட்டு வருகின்றமை பாராட்டப்பட்டத்தக்க செயற்பாடுகளாகும்.

தமிழாராய்ச்சி மாநாட்டை உலகளாவிய ரீதியில் சோழத்தில் பெருமை ஈழநாட்டுத் தீவகத்திற்கேயுரியது. நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழ்த்தூதர் வண. பேராசிரியர் தனிநாயக அடிகளார், மன்றம் நிறுவித் தமிழ் ஆராய்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநாடுகளைத் தொடக்கி வைத்தார் என்பது ஈண்டு சுட்டிக் காட்டப்பட வேண்டிய செய்தி . இன்று செந்தமிழ், செம்மொழி, உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் ஒலிக்கிறது, தவழ்கிறது. பேராசிரியர் தனிநாயக அடிகளாருக்குப் பின் பேராசிரியர் கலாநிதி சுப்பிரமணியம் வித்தியானந்தன் அவர்களும், அவரோடு இணைந்த பேராசிரியர்களும் , ஆய்வாளர்களும், தலைமை ஆய்வு நிலையில் முன்னெடுத்து உலகத் தமிழர்களிடையே மாநாடுகளை நிகழ்த்தினர்.

திருவையாறு தமிழ் ஐயா கல்விக்கழகம், ஔவைத் தமிழ் கோட்டம் 16 ஆவது மாநாட்டினை 2018இல் நடத்தத் தீர்மானித்துள்ளனர். திருவையாறு முன்னால் மு. கலைவேந்தன் பொறிஞர் கலைஞர் முகில்வேந்தனும், அறிஞர் குழாமும், கரந்தைத் தமிழ்ச்சங்கத்துடன் இணைந்து புரியும் தமிழ்ப்பணி, ஆய்வு மாநாடுகள், கௌரவிப்புக்கள், மலர் வெளியீடுகள், விதந்து குறிப்பிடப்பாலென. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் பாஸ்கரன் அவர்களது தலைமையில் பல தமிழ் வளர்ச்சிப் பணிகள் பல்கலைக்கழக மட்டத்திலும், வெளியிலும், முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக முனைவர் பாஸ்கரன் அவர்களது தலைமையில் பல தமிழ் வளர்ச்சிப் பணிகள் பல்கலைக்கழக மட்டத்திலும், வெளியிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக முனைவர் மு. கலைவேந்தன் தலைமையில் தமிழகத்திலேயே பொதுநூலகத்திற்குரிய நூல்களைச் சேகரிப்பதாகும்.

இந்திய கவுன்சலரராக யாழ்ப்பாணத்திலே பணிபுரியும் மாண்புமிகு நடராசன் அவர்களது அரிய முயற்சியும் முனைவர் மு. கலைவேந்தனது பெருந்திட்டமும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தினதும், ஔவைத் தமிழ்க் கோட்ட அறிஞர்களதும், தமிழக புத்திஜீவிகளினதும், எழுத்தாளர்களினதும் பதிப்பகங்களினதும் பெரும் பங்களிப்பினால் நாற்குவியல்கள் மலைபோல் காட்சியளிக்கும் நிழற்படங்களைத் திருவையாறு தமிழ் முகில் பத்திரிகை, சஞ்சிகை வெளியிட்டுள்ளமை தமிழ் கூறு நல் நூலகத்தினாலே போற்றிப் பாராட்டத்தக்க பெரும் பணியாகும். இது செயற்தக்க அரிய காரியம். இன்னும் நம்மவர்கள் மன்றங்கள், சங்கங்கள் ஆற்ற வேண்டிய பணிகள் ஒரு சில உதாரணங்களே.

உலகத் தமிழ் கலைஞர்கள் 1000 பேரது கவிதைகள் அடங்கிய தொகுப்பு நூல் வெளிவருவது கண்டு கொள்ளப்பட வேண்டியதொன்று.

அண்மையில் தமிழ்முகில் சஞ்சிகையிலே ஒரு நூலின் அட்டைப்படம் வெளிவந்ததைக் கண்டேன்.

"வடமொழியின் மூலம் தமிழ் அல்லது தமிழே வடமொழியின் மூலம்" என்றும் விவரிக்கக் கூடிய வகையில் நூல் வெளிவந்துள்ளது. இதன் தாற்பரியம் போலும் அலசாய்வது இவ்விடயம் மிகமிக முக்கியத்துவமானது.

பயில்நிலை, பேணுநிலை என்ற இரு வகை நிலைப்பாடுகள் இன்று அவசியமாயுள்ளன. மொழியின் வளர்ச்சி அதன் நெகிழ்விலேயே தங்கியுள்ளது.

ஆனால் அதன் சீவிதம் அதைப் பேணும் நிலையிலேயே தங்கியுள்ளது என்பது உணரப்பட வேண்டும். தொடர்ச்சி நிலை – இணைப்பு மொழி வளர்ச்சிக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வுக்கும் நிலைபேற்றிற்கும் அவசியமாகும். இதற்கு வரலாற்றாய்வு, இலக்கிய ஆய்வு, பெயராய்வு, , ஊர்ப்பெயராய்வு, பண்பாட்டாய்வு, சமயநிலை ஆய்வு, மானுடவியலாய்வு, மொழியியலாய்வு, சமுதாயவியலாளர்களின் அவசியமாகின்றன. பழமையினடியாகவே, புதுமை நிலைபெற முடியும். முற்றிலும் நவீனம் என்பது முற்றாத பிரசவமாகும். அடிஅத்திவாரம் உறுதியானபின் கட்டட நிர்மாணம் பெலமாகும் என்பது போலவே பழமையினடியான புதுமையாகும்.

இன்று தமிழ்மொழி ஆய்வு விரிவடைந்து விட்டது. உலக நாகரிகக் கலப்பும் , தமிழரது உலக வியாயகமுவும், அறிவியல் அபிவிருத்தியும், கலாசார சங்கரிப்பும், இலக்கிய மொழிகளின் இணைப்புச் சொற்கள், கருத்துக்கள், உச்சரிப்புக்கள் என்பவற்றில் பாரிய அதிக தாக்கங்களை உண்டு பண்ணிவிட்டன. இலக்கியம் பன்மொழி இலக்கியமாகி விட்டது. சொற்கலப்புக்கள் ஆக்க இலக்கிய நெறியாகி விட்டது எனினும் மூலச்சொற்களின் தமிழ்மயப்படுத்திய விவாதத்தினை கைவிடப்பட வேண்டும் என்பது அர்த்தமல்ல. தமிழ் கலவாது தனித்தியங்கதக்கதான செம்மொழி ஆற்றலுள்ள மொழி என்பது தான் நிரூபணமாக முடியும் என்பது பேருண்மை. ஆதலினால் தமிழின் மூலம் (Root) என்பது அறிவியல் தேடலாகிறது.

குமரித்தமிழ் மன்றம் என்பது பூர்வீக பழமையின் செழுமை மாறாத இயல்பின் கடல்கொண்ட வரலாற்றை நினைவூட்டுவது. இன்று தமிழ் வளர்த்த தீர்த்தை நினைவு படுத்துவது காலத்தின் தொன்மையை எடுத்துரைப்பது கனவோ என ஐயுறும்படி ஈர்ப்பது இதன் பல் பயன்பாட்டுப் பணிகள் மேம்பட வேண்டும் . வளரவேண்டும், விசாரிக்க வேண்டும், விரிவாக்கம் பெற வேண்டும், மொழி, மத, இட, பண்பாட்டு அடையாளங்களைப் பேணும் இனமாகவே இன வளர்ச்சி பெறவேண்டிய நிலை உண்டு. உண்மை முக்கியமானது, தொன்மையானது, இயற்கையானது, இங்கிதமானது, பின்பற்றத்தக்கது என்ற முறையிலேயே தமிழ்ப் பண்பு வளர்த்தெடுக்கப்பட வேண்டியுள்ளது. இதற்கான உணர்ச்சி ஒவ்வொருவருக்கும் உண்டாக வேண்டும். பாடத்திலிருந்து புதிய செல்நெறியை உருவாக்கியதே செய்யத்தக்கது. அது அரசியலுக்குப் பொருந்தும்.

தமிழுக்கும், வடமொழிக்கும் உள்ள இணைப்பு மிகமிக அலாதியானது. சங்கம் என்னும் சொல் தமிழ் அன்றும் என்றும் அது வடசொல்லின் மரூஉ என்றும் கூறுவர் சிலர். ஆகவே தமிழ்நாட்டில் வடமொழி இடங்கொண்ட பிறகே சங்கம் தோன்றிற்று என்றும் அவர்கள் கருதுகின்றனர். இக்கருத்து பிழையானதாகும் இதற்குப் போதிய சான்றுகள் சில. சங்கம் என்ற சொல் பிற்காலத்தையடுத்ததாக இருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை இதற்கு நேரான தமிழ்ச் சொற்கள் உள, கூடல், அவை, மன்றம் என்பன சங்கத்தைக் குறிக்கும் தமிழ்ச் சொற்களாகும். தமிழ்ச் சங்கம் அல்லது கூடல் வளர்த்த இடமாகிய மதுரையானது கூடல் என்னும் பெயராலும் வழங்கி வருகிறது. இஃது இடவாகுபெயர், தமிழ்வார்த்த கூடலைத் தமிழ் எழுகூடல் என்ற புறப்பாட்டு ஒன்று குறிப்பிடுகிறது. (புறம் 58) சங்கம் என்னும் பெயர் ஏற்படுவதற்கு முன்பு கூடல் என்னும் சொல்லே வழங்கியிருத்தல் வேண்டும். உயர் தனிக் கூடலியைத் தந்த ஒண்தீந்தமிழ் என்றோ ஒரேவிடத்து உயர் தமிழ் கூடலியைத் ஒண்டீத் தமிழ் என்றோ நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறமுடியுமன்றோ.

சமணரும், பௌத்தரும் தத்தம் சமயங்களை வளர்ப்பதற்காக சங்கங்களை நிறுவினர். மதுரையிலே நடைபெற்று வந்த கூடலை முதன்முதல் அவர்களே சங்கம் என்று பெயரிட்டழைத்திருக்க கூடும். வைதிகரும், ஆரியரும், சமணரும், பௌத்தரும், தமிழகத்தில் நுழைந்த பிறகு ஏற்பட்ட ஆயிரக்கணக்கான பெயர் மாற்றங்களுக்கு இஃதும் ஒன்றாக இருக்க வேண்டும் பெயர்மாற்றம் காரணமாக வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கம் புதியதொரு வடிவமைப்பிலேயே இன்றும் நடக்கிறது. ஞானிகள் காலத்துக்காலம் சங்கம், கலைமாற்றம், என்பனவற்றின் தோற்றத்திற்குக் காரணமாகின்றனர். சமித்தி என்ற சொல் இன்று உலகளாவியது சாயிசமித்தி என்றுள்ளது, சாயிமன்றம் உள்ளது. இவை புதியவை ஏதோவொரு வகையில் ஆன்மீகம் நோக்கி ஒருங்கிணையும் தன்மை இவற்றிற்குண்டு. மத இணைப்பு, கூட்டு ஒருங்கிணைப்பு ஒன்றுபடல் ஒரு நோக்கம் என்பன இலட்சியம்.

முனைவர் கே.கே. பிள்ளை மேல்வருமாறு கருத்துரைப்பார் "சங்க இலக்கியம் ஒன்றிலேனும் சங்கம் என்னும் சொல் காணப்படவில்லை என்பதுண்மையே. இதற்குத் தக்கதொரு காரணமும் உண்டு. இக்காலத்தில் நூல் இயற்றும் ஆசிரியர் ஒருவர் தான் இந்நூலை இன்ன இடத்தில், இன்ன பல்கலைக்கழகம், நிகழும் பொழுது ஆக்கினேன் என்று கூறித் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ளும் மரபு இல்லை. இச் செய்திகளை நாம் அறிய வேண்டுமாயின் நூல் அச்சிடப்பட்ட ஊர், காலம் இவற்றைக் காட்டும் ஏட்டைத் திருப்பி பார்க்க வேண்டும். பண்டைய புலவர்களும் இம்முறையைப் பின்பற்றி வந்தனர். தனிப்பாடலாசிரியரோ, நூலாசிரியரோ, தொகுப்பாசிரியரோ, இன்ன ஊரில், இன்ன காலத்தில் தாம் தம், பாட்டையோ, நூலையோ, தொகுப்பையோ படைத்ததாகக் குறிப்பிடும் வழக்கத்தை மேற்கொண்டிலர். இக் காரணத்தினாலேயே சங்கம், கூடல், மன்றம் என்னும் சொற்கள் சங்க இலக்கியத்தில் காணப்படவில்லை. அன்றி இப்பெயர்கள் அடங்கியிருந்த பாடல்களோ, நூல்களோ அழிந்து போயிருக்கக் கூடும் அல்லது அழிக்கப்பட்டிருக்கக் கூடும் (யாழ் நூலகத்தை எரியூட்டியமை போன்று) தமிழ்ச்சங்கத்தைப் பற்றிய குறிப்புக்கள் இறையனார்களவியல் உரையிற்தான் முதன் முதல் காணப்படுகின்றன. தலை, இடை சடைச் சங்கங்களின் வரலாற்றை அவ்வுரை சுருக்கிக் கூறுகின்றது. அவ் வரலாற்றைப் பிற்கால உரையாசிரியர்களான பேராசிரியரும், அடியார்க்கு நல்லாரும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

கடல்கொண்ட தென்மதுரையில் முதற் சங்கம் நடைபெற்று வந்தது. சிவபெருமான் அகத்தியானார், முருகக்கடவுள் முருஞ்சியூர் முடினாகனார் குபேரன் முதலான ஐந்நூற்று நாற்பத்தொன்பதின் அதன்கனை அமர்ந்து தமிழ் வளர்த்தனர். அச்சங்கத்துடன் தொடர்புகொண்டிருந்த புலவர்களின் தொகை மொத்தம் 4449 அவர்கள் பரிபாடல் பலவற்றையும் முதுநாரை, முதுகுரு, களதியாருனர் என்ற நூல்களையும் இயற்றினார்கள். இத்தலைச்சங்கம் தொடர்ந்து 4440 ஆண்டுகள் நடைபெற்று வந்ததாக கூறப்படுகிறது. காய்சினவழுதி முதலாக கருக்கோன்ஈறாகப், பாண்டிய மன்னர் எண்பத்தொன்பதின்மர் இச் சங்கத்தைப் புரிந்து வந்தார்கள். அவர்களுள் எழுவர் தாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் புலவர்களாவுகம் திகழ்ந்ததார்கள். அக்காலத்தில் வழங்கிய இலக்கண நூல் அகத்தியம் ஒன்றேயாம்.

இடைச்சங்கம் தோன்றி வளர்ந்தது கபாடபுரத்தில் தென்மதுரை கடல் கடல்கோளுக்குள்ளாயிற்று கபாடபுரம், பாண்டிநாட்டுத் தலைநகரமாயிற்று. இடைச்சங்கம் அங்கு நிலைப்பட்டது. வெண்டேர்ச் செழியன் முதலாக, முடத்திகுமாறன் ஈறாக ஐம்பத்தொன்பதின்மர் பாண்டிய மன்னர்கள் இச்சங்கத்தின் புரவலர்களாகப் பணியாற்றினார்கள். அவர்களுள் ஐவர் தாமே புலவர்களாகவும், அச்சங்கத்தில் அமர்ந்திருந்தனர்.

அகத்தியனார், தொல்காப்பியனார், இருந்தையூர்க் கருங்கோழியர், மோசியார், வெள்ளூர்க்காப்பியர், சிறுபாண்டரங்கனார், திரையன் மாறனார், துவரைக்கோன், கீரந்தையார், முதலாய் இச்சங்கத்திலமர்ந்து தமிழாராய்ந்தார்கள். இந்தக் கூடலில் வீற்றிருந்த புலவர்கள் மூவாயிரத்து எழுநூற்றவர், கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை, அகவல் முதலிய நூல்களை அவர்கள் பாடினார்கள். அகத்தியர், தொல்காப்பியர், மாபுராணம் , இசைதுணுக்கள், பூதபுராணம் ஆகிய இலக்கண நூல்களை அவர்கள் பயன்படுத்தி வந்தார்கள் . இச்சங்கம் மூவாயிரம் ஆண்டுகள் நடைபெற்றதெனவும் கூறப்பட்டுள்ளது. பிறகு கபாடபுரத்தை கடல் கொண்டுபோய் விட்டது. (நமது காலத்தில் சுனாமி போல்) இக்காரணத்தினால் கடைச்சங்கம் உத்தர மதுரையில் (வடமதுரையில்) கூடிற்று . இப்போது பாண்டிய நாட்டிலுள்ள மதுரை இதுதான். இச்சங்கத்திலமர்ந்து தமிழ் வளர்த்த புலவர்கள் நாற்பத்தொன்பதின்மர் இவர்களுள் வேர் பாண்டிய மன்னர். சேந்தம் பூதனார், அறிவுடைவரானார், பெருங்குன்றூர்க்கிழார், இளந்திருமாறன், மதுரையாசிரியர், நல்லந்துவனார், மருதனின் நகனார்,கணக்காயனம் மகனார், நக்கீரனார் ஆகியவர்கள் ஏனைய புலவர்களிற்சிலர். நாற்பத்தொன்பதின்மர் பாடிய பாடல்கள் நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை நானூறு, நற்றிணை நானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலிநூற்றைம்பது, பரிபாடல், எழுபது கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை முதலியன கடைச்சங்க காலத்தில் வழங்கிய இலக்கண நூல்கள் அகத்தியமும் தொல்காப்பியமாம். இச்சங்கம் 1850 ஆண்டு காலம் நீடித்ததாகவும் கூறப்பட்டுள்ளது. இக்கடைச்சங்கத்தை மதுரையில் நிறுவியவன் பாண்டியன் முடத்திரு மாறன் என்பவன் . இதன் இறுதியாண்டுகளில் அரசாண்டவன் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி இக்கருத்துக்கள் பல இறையனார் களவியல் உரையில் விரிவாக எழுதப்பட்டுள்ளது.

இன்றைய தமிழ் இளஞ்சந்ததியினர் மயங்கும் இடம் சங்கக்கடையும் 'தமிழ்ச்சங்கமும்' என்பனவாகும். 'சங்கக்கடை' என்பது 'கூட்டுறவுச்சங்கம்' என்ற பொருளிலே பல பெயரிலமைந்த இணைப்பு நிறுவனத்தினது 'வியாபார நிலையம்' என்பது சங்கக் கடையாகும். சங்கம் நிறுவித் தமிழாய்ந்த இடம் தமிழ்ச்சங்கமாகும். நூல்வெளியீடுகள் பல "சங்கப்பலகையிலேற்றப்பட்டன" "கல்வி, கேள்வி ஒழுங்காகக் கற்ற சிறந்த சான்றோர்களாகிய வித்துப்புலமை மிக்கவர்கள் நிறைந்துள்ள அவை முன்னிலையில் நூலை அரங்கேற்றுதல்முறை" என்பதாகும். (கந்தபுராண நூலும் கச்சியப்ப முனிவராலே அரங்கேற்றப்பட்ட போது 'திகடசக்கர' புணர்ச்சி பற்றி முருகக்கடவுள் தோன்றி உணர்த்தியதாகவும் செய்தியுண்டு.) எனவே சிவன், முருகன் ஆகியோரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கப்புலவர் என்னும் சிறப்புக்குரியவர் என்பது பெறப்படும்.

தமிழ் வளர்த்த சங்கம் என்னும் இந்த விடயம் பொருள் பற்றிய ஆய்வு மிகமிக நீளமானது. இரசனை மிக்கது. வரலாற்று நோக்கு மிக்கது. கடைச்சங்கத்தின் தோற்றத்தைப் பற்றிய செய்தியை இறையனார் களவியல் உரை ஆசிரியர் மட்டுமன்றித் திருவிளையாடற்புராணம் எழுதிய பரஞ்சோதி அடிகளும் தம் நூலில் விரித்துரைத்துள்ளார். பொதுமக்கள் இந்நூல்களைத் தேடியெடுத்துப் படித்தறிய மாட்டார்கள். தமிழைக் கற்காதோரும் இவ்விரு நூல்களையும் வாசிப்பது கடினம் என்பதும் சுட்டத்தக்கது. எல்லோருக்குமாகவே ஈண்டு திருவிளையாடற் புராணச் செய்தியை எடுத்துக்காட்ட விழைகிறேன்.

முன்னொரு காலத்தில் வங்கிய சேகர மன்னன் என்பவன் பாண்டிநாட்டை ஆண்டு வந்தான். அப்போது வாரணாசியில் பிரமதேவன் பத்து அசுவமேத யாகங்களை முடித்துக் கொண்டு கங்கையாற்றில் தன் மனைவியர் சரசுவதி, காயத்திரி, சாவித்திரி ஆகிய மூவருடன் நீராடச் சென்றான். இந்த குலப்பெண் ஒருத்தியின் இன்னிசையில் தன் உள்ளத்தைப்பறி கொடுத்த சரசுவதிதேவி சற்றுப்பின் தங்கினாள். அவளை மானிடப்பிறவி எடுக்குமாறு பிரமன் சபித்தான். கலைமகள் தன் பிழையை மன்னித்துத் தனக்குச் சாப விடுதலை பணிக்கும்படி தன் கணவனிடம் மன்றாடினாள். நான்முகக் கடவுளும் உளமிரங்கி அருள்சுரந்து தன் சாபத்துக்குக் கழுவாய் ஒன்று கூறினான்.அஃதென்னவெனில் கலைமகளின் உடல் ஐம்பத்தொரு எழுத்தாலானது. (இன்றும் ஒரு சில புத்திசீவிகள் கல்விக்கும் சமயத்துக்கும் அல்லது மொழிக்கும் சமயத்திற்கும் தொடர்பில்லை என்று கூறியவற்) அவற்றுள் 'ஆ'.முதல் 'ஹ' 'க' வரையிலான 48 எழுத்துக்கள் உலகில் புலமைமிக்க சான்றோர்களாய்ப் பிறப்பார்கள். அவ்வெழுத்துக்கள் யாவற்றினுள்ளும் ஊர்ந்து நின்று அவற்றைச் செலுத்தி வருகின்ற 'அகரம் போன்றவனைச் சிவபெருமான் 49 ஆம் புலவராக வீற்றிருந்து அப்புலவர்கட்குப் புலமையை வளர்த்து முத்தமிழையும், நிலை நிறுத்துவான் இவ்வாறு கூறிப் பிரமன் கலைமகளைத் தேற்றினான் என்கிறது திருவிளையாடற்புராணம் (பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற் புராணம் பாடம் 51,) தமிழ்மொழி வாழுவதற்குப் பணியாற்ற வேண்டும் என்று கருதுவோர் அறிந்து கொள்ள வேண்டிய வரலாறுகள் உள்ளன. இறையினார் களவியல் எனும் அகப்பொருலிலக்கணம் இயற்றப்பட்ட வரலாறு பற்றியறிவது, திருவிளையாடற்புராணத்திலுள்ள செய்திகளைத் தெளிவுற விளங்குவது என்பன அத்தியவசியமாகும். இளந் தமிழர் சிந்தனைக்கென ஒரு சிலவற்றை ஈண்டு குறிப்பிடலாம்.

" பாண்டி நாட்டில் 12 ஆண்டுகள் மாபெரும் பஞ்சம் ஒன்று தோன்றி மக்கள் அவலப்பட்டனர். உணவின்றிப் பசியினால் வாடினர். அவர்களுடைய துன்பத்தைக் கண்டு உள்ளமுடைந்த பாண்டியன் கேட்டுக்கொண்டபடியே அவனுடைய அவைப் புலவர்கள் அனைவரும் பாண்டிய நாட்டைத் துறந்து தத்தமக்கு விருப்பமான ஊர்களில் தங்கக் கழித்தும் வந்தனர்.

12 ஆண்டுகள் கழித்துப் பாண்டிய நாட்டில் நன்மழை பெய்தது. பயிர்கள் செழிப்புற்றன. மக்களும் நல்வாழ்வு எய்தினர். மன்னனும் உளமகிழ்ந்து புலவர்கள் அனைவரையும், தேடித் தன் அவைக்கு மீண்டும் அழைத்து வருமாறு பல இடங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆள் போக்கினான். ஆட்கள் பல்வேறு இடங்களிலும் தேடித் திரிந்து புலவர்களைத் திரட்டிக்கொண்டு வந்து சேர்ந்தனர். ஆனால் திரும்பி வந்த புலவர்கள் அனைவரும் எடுத்து சொல் இலக்கணங்களில் மட்டும் வல்லுனராகக் காணப்பட்டரேயன்றி பொருள் இலக்கணத்தில் தேர்வுக்குரியவர் அவர்களுள் ஒருவரேனும் இலராயினர்.

மன்னன் பெரிதும் கனன்றான் . பொருளையாய்ந்து வாழ்க்கையிற் பயன் பெறுவதற்காகவே எழுத்தும், சொல்லும் உள்ளன எனவே பொருள் உணர்த்தும் இலக்கணத்தை மீண்டும் மக்கள் யாரிடம் கற்றால் பயன் பெறுவர் என்று மன்னன்ஏங்கி நின்றவுடன் அவனுடைய கலற்சிக்கு இரங்கியவனாய் ஆலவாய்க் கடவுள் அகப்பொருளை விளக்கும் அறுபது சூத்திரங்களை மூன்று செப்பேடுகளின் மேல் பொறித்துக் கோயில் கருவறையில் தன்பீடத்தின் கீழ் இட்டு வைத்தான் . கோயில் அருச்சகர் அவ்வேடுகளைக் கண்டெடுத்து மன்னன் கைகளில் சேர்த்தான். அவற்றைப் பெற்று அளவற்ற மகிழ்ச்சியில் ஆழ்ந்த பாண்டியன் அச்சூத்திரத் தட்டு உரைகாண முயன்றான். நக்கீரனார் அவற்றுக்குச் சிறப்பானதொரு உரையை இயற்றிக் கொடுத்தார். முருகப்பெருமானின் கூறான உருத்திர சன்மன் என்பான் இவ்வுரையை அரங்கேற்றக் கேட்டு மகிழ்ந்தான். இறையனார் அகப்பொருள் நூன்முகம் தெரிவிக்கும் வரலாறு இது இவ்வரலாறு கல்லாடத்தின் மூன்றாம் பாடலிலும் குறிப்பிடப்படுகிறது.கல்லாடத்தை நாவலர் பெருமான் அச்சேற்றியுள்ளார்.

'கல்லாடம் கற்றவனோடு சொல்லாடதே ' என்பது பழமொழியாகும். வெட்டிப்புமு, அண்டபுமுகு, பச்சைப்பொய் , கம்பக், பம்மாத்து, பேய்க்காட்டு, அதிர்வெடி, பிசத்தல் அலட்டல், என்றும் சிலர் கூறிவருகின்றனர். இவர்களது உண்மை எதுவென்பதே கேள்வி இது ஆராய்ச்சிக்குரிய அலுவல்.

விஞ்ஞானபூர்வமான, பக்கசார்பற்ற ஆய்வே உண்மையை துலங்கச் செய்யும் என்பதே அனுபவம். அது முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது முக்கியம். அதற்கு உதவுதல் அதைவிட முக்கியம். தமிழ்ச்சங்கங்கள் மூன்றும் தோன்றி வளர்ந்த வரலாறும், இறைபயனார் அகப்பொருளும் அதன் வரலாறும் உரையும் எழுந்த வரலாறும் தெய்வீக நிகழ்ச்சிகள் அளவைக்கு ஒவ்வாத கால வரைகள் ஆகியவை கலந்துள்ளன என்பது உண்மை. எனினும் அவற்றை முற்றிலும் கற்பனை என்று புறக்கணித்தலாகாது. எப்பொருள் எத்தன்மை தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்பது நியதி. எனவே எவராயினும் இப்புராண வரலாறுகளை நன்கு ஆராய்ந்து அவற்றுள் உண்மை காணலே பொருத்தமாகும்.

பரஞ்சோதி முனிவரின் காலம் இன்னதென திட்டமாக அறியமுடியவில்லை. இவரன்றிப் பெரும்பற்றப் புலியூர் நம்பி என்பவரும் ஒரு திருவிளையாடற் புராணம் பாடியுள்ளார். இவர் 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பரஞ்சோதி முனிவர் காலத்தால் இவருக்குப் பிற்பட்டவர். தமிழ்சங்கத்தைப் பற்றி கூறும் புராணங்கள் இவையிரண்டுந்தாம். மன்னர்களின் பரம்பரையிலும் 64 திருவிளையாடல்களின் வைப்பு முறையிலும் இவ்விரண்டு புராணங்களுக்கும் ஒன்றோடொன்று முரண்படுகின்றன. இறையானார் களவியலுரை இவ்விரண்டிற்கும் முற்பட்டதாகும். இப்புராணங்களின் கூற்றுக்கும் களவியல் உரையையாற்றியவர் தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திருக்குமிடையே பல வேறுபாடுகள் உண்டு எனவே புராண ஆசிரியர் இருவரும் களவியல் உரையாசிரியரும் அவ்வக் காலங்கள் தத்தமக்கு கிடைத்த குறிப்புகளைக் கொண்டு தமிழ் சங்கங்களைப் பற்றிய செய்திகளைத் தத்தம் நூல்களில் சேர்த்திருக்க வேண்டும். பல்வேறு காலங்களில் தமிழ்ச்சங்கங்களைப் பற்றிய செய்திகள் மறைந்து குன்றாமல் செவிவழியாகவே தொடர்ந்து வந்து கொண்டிருந்தன என்று ஊகிக்க இடமேற்படுகின்றது. கற்பனைக் கதைகளும், செய்தித் தாள்களும், செய்திகளைத் திரட்டித்தராத ஒரு காலத்தில் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் ஒரு வரலாற்றை முற்றிலும் கற்பனை என்று புறக்கணித்து விடல் பேதமையாகும். எனவே தமிழ்ச் சங்கங்கள் பற்றிய செய்திகட்கு ஓர் அடிப்படை இருந்திருக்க வேண்டும் என்பது உறுதியாகக் கூறலாம். தமிழ்ச் சங்கங்கள் பற்றிய வரலாறுகளில் வரும் மன்னர்கள் புலவர்கள் ஆகியவர்களுள் பலர் இயற்றிய பாடல்கள் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன. அதனால் அப்புலவர்கள் உயிருடன் வாழ்ந்திருந்தவர்கள் புனை பாத்திரங்கள் அல்லர் என்பதை மறுக்க முடியாது. பாண்டிய மன்னர் அவையின் பல புலவர்கள் வீற்றிருந்த வரலாற்றை வேள்விக்குடிச் செப்பேடுகளும் குறிப்பிடுகின்றன. கற்பனை வளம் செறிந்தவர்கள் உண்மை வரலாற்றுடன் சில பெயர் கதைகளையும் சேர்த்துத் திரித்து வெளியிட்ட செய்திகள் பண்டைய நூல்கள் பலவற்றுடன் இடம்பெற்று விட்டன. எனவே தமிழ்ச்சங்கம் என்று பிற்காலத்தில் பெயரெய்திய கூடல் அல்லது மன்றம் ஒன்று பாண்டிய மன்னர் தலைமையில் இயங்கி வந்த வரலாற்றை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் ஐயமில்லை.

இனி தமிழ்ச்சங்கம் எத்தனை, ஒன்றா, இரண்டா? என்பதை ஆராயலாம். கபாடபுரம் பாண்டியனுடைய தலைநகராயிருந்தது. பிறகு தென்மதுரை தலைநகராக மாறியதற்கு இராமாயணம், மகாபாரதம், கௌடியலரின் அர்த்த சாத்திரம் ஆகிய நூல்களை சான்றுகள் கிடைக்கின்றன. கன்னியாகுமரிக்குத் தெற்கில் துறைமுகம் ஒன்று இருந்ததாகப் பிளினி கூறுகிறார். " மலிதிரை ஊர்ந்து தன் மண்கடல் வௌவியின் மெலிவு இன்றி மேற் சென்று மேவார் நாடு இடம், படப் புலியொடு வில் நீக்கிப் புகழ் பொறித்த தென்னவன்" என்று முல்லைக் கலியலும், "பஃறுலியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு தென் திசையாண்ட தென்னவன்" என்று சிலப்பதிகாரத்திலும் இதைப்பற்றிக் குறிப்பிடப்படுகின்றன. இவற்றினடிப்படையில் நோக்கின் வட மதுரையானது பாண்டி நாட்டின் தலைநகராமாவதற்கு முன்பு மேலும் தெற்கில் அமைந்திருந்த தென்மதுரையிலிருந்தும் ஆட்சி புரிந்து வந்தனர் என்ற வரலாறு உண்மை என்பது உறுதியாகின்றது. தென்மதுரை ஒன்று செயற்பட்டு வந்தற்குப் புறச்சான்று வேறொன்றும் உண்டு. இலங்கையின் வரலாற்றைக் கூறும் மகாவம்சம் என்னும் நூலில் அந்நகரம் குறிப்பிடப்படுகிறது. விசயன் என்னும் மன்னனும் அவன் தோழர்களும் அங்கிருந்துதான் தமக்கு மணப்பெண்கள் தேடிப் பெற்றனராம். சிங்கள மொழியில் கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட "சத்தர்மரலங்காரம்" என்னும் நூலும், தட்சின் மதுரான் என்ற ஒரு குறிப்புக் காணப்படுகிறது. பாண்டிய நாட்டின் தலைநகரம் இருமுறை மாற்றப்பட்டிருப்பினும், மாறியமைத்த காலங்களில் மீண்டும் மீண்டும் தமிழ்ச் சங்கம் ஒன்றைப் புதிதாக நிறுவியதன் காரணம் காண இயலாது. எனினும் செவிவழிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகளும் தமிழ்ச் சங்கங்களில் காணக்கிடைக்கும் அகச்சான்றுகளும் மூன்று சங்கங்கள் இயங்கி வந்த செய்தியை உறுதிப்படுத்துகின்றன. தொல்காப்பியர் இரண்டாம் சங்க காலத்தில் வாழ்ந்தவர். தொல்காப்பியத்தில் பல நூற்பாக்களில் 'என்ப மொழிப் என்மனார் புலவர் பங்குற உணர்ந்தோர்' பன்னுங்காலை என்று கூறித் தமக்கு முற்பட்டிருந்த இலக்கண ஆசிரியர்களின் முடிவுகளின் மேல் தொல்காப்பியர் தன் முடிவுகளைச் சார்புறுத்துகின்றார். எனவே தொல்காப்பியத்துக்கு முன்பு இலக்கண நூல்கள் வழங்கி வந்திருக்க வேண்டுமென்றும் அவ்விலக்கணங்கள் தோன்றுவதற்கு காரணமாக உயர்வகை இலக்கியம் தமிழ்மொழியில் பெருகியிருக்க வேண்டுமென்றும் கொண்டு வருவதுதான் பொருத்தமாகும். இவ்விலக்கிய படைப்புக்கள் யாவும் முதற்சங்க காலத்திலோ அன்றி அதற்கு முன்போ பின்போ தோன்றியிருக்க வேண்டும். எனவே கடைச்சங்கத்துக்கு முன்பு இரு சங்கங்கள் ஒன்றன்பின் ஒன்றாக இயங்கி வந்தன என்பதைத் திட்டமாக மறுக்கவே முடியாது. ஆனால் இச்சங்கங்கள் ஒவ்வொன்றும் பல்லாயிரம் ஆண்டுகள் நீடித்து நடைபெற்று வந்தன என்பதையும் ஒவ்வொன்றுக்கும் இடையில் இத்தனையாண்டுகள் ஓடின என்பதையும் தக்க சான்றுகள் இன்றி ஒப்புக் கொள்ளுதல் ஆராய்ச்சி முறைக்கு முரணாகும் என்பர் டாக்டர் கே.கே. பிள்ளை(200:79) மூன்றாம் சங்க எப்போதும் கூடிற்று. எத்தனையாண்டுகள் செயற்பட்டு வந்தது என்னும் கேள்விக்கு உடன்பாடான விடை இன்னும் ஆய்வாளரிடமிருந்து வரவில்லை. மூன்றாம் சங்கத்தின் காலம் கி.மு.500 முதல் கி.பி.500 வரை நடந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் சிலர் இற்றைக்கு பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே கடைச்சங்கம் நடைபெற்றது என்று கூறுவர். பரிபாடலிலும், சிலப்பதிகாலத்திலும் காணப்படும் சில நிகழ்ச்சிகளைக் கொண்டு வானவியல் கணிப்பின்படி கணக்கிட்டு, கடைச்சிங்கம் நடைபெற்ற காலம் கி.பி.7 அல்லது 8ஆம் நூற்றாண்டாகத்தான் இருக்க வேண்டுமென்று எல்.டி. சுவாமி கண்ணுப்பிள்ளையாவர்கள் கூறுவர். அந்நாட்களில் கொடுக்கப்பட்டுள்ள காலக் குறிப்புக்களைத் திருத்தமாகக் கணித்தறிவதற்குத் தேவையான குறிப்புக்கள் அவற்றுள் கிடைக்காததினால் அவருடைய முடிவை ஏற்றுக் கொள்ளவியலாது என்பர் டாக்டர் கே.கே. பிள்ளை (200:80)

இலக்கண அமைதியிலோ, சொல்லாமைப்பிலோ, பொருள்கூட்டியோ, தேவாரத் தமிழுக்கு ஒப்பானதொரு மொழிவடிவத்தை எட்டுத்தொகை, பத்துப் பாடல்கள் ஒன்றிலேனும் காணவியலாது மேலும், தேவாரப் பாடல்களில் தமிழச்சங்கத்தைப் பற்றிய குறிப்புக்கள் கிடைக்கின்றன.

திருஞானசம்பந்தர் தமிழ் திருவாலவாய்த் திருப்பதிகத்தில் கூடல் ஆல்வாய் என்று குறிப்பிடுகின்றார். நன்பாட்டுப் புலவனாய் சங்கம் ஏறி நற்கணகக் கிழி தருமிக்கு அருளினோன். என்று திருநாவுக்கரசரும் பாடியுள்ளார். ஆகவே இவ்விரு சமயகுரவரும் சங்க காலத்திற்குப் பிற்பட்டவர்கள் என்பது திண்ணம். மாணிக்கவாசகர் கி.பி. 792 முதல் 835 வரை அரசாண்ட வரகுணபாண்டியனின் உடன் காலத்தவர் அவர் தம்முடைய திருக்கோவையாரில் "வான் உயர் மதில் கூடலின் ஆயந்த ஒண் தீந் தமிழ்" என்று சங்கம் வளர்த்த தமிழைப் பாராட்டுகிறார். கூடல் என்ற பெயர் வாய்ந்த ஒரு நகரத்தில் அமர்ந்து தமிழாராய்ந்த புலவர்கள் மதுரமான பாடல்களைப் பாடினாராதலின் கூடலின் ஆயந்த ஒண் தீந் தமிழ் என்று புகழ்ந்துரைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சான்றோர் நினைவு வெளியீடு







## தமிழர் உறுதிமொழி

01. பிறக்கும் குழந்தைக்கு தனித் தமிழில் பெயரிடுவோம்.
02. எழுத்துத் தமிழுள் கிரந்த, ஆங்கில, வடமொழி எழுத்துக்கள் சொற்கள் , பேச்சுவழக்குகளை புகுத்தாதும், இலக்கண வரம்பை மீறாமலும் எழுதுவோம்.
03. பெயரின் முதல் எழுத்துக்களை தனித்தமிழில் இட்டு , கையொப்பங்களை தமிழில் இடுவோம்.
04. கோவில் வழிபாடு , தமிழன் வீட்டு நிகழ்வுகளை வேற்றுமொழி தவிர்த்து தமிழில் மட்டும் நடத்துவோம்.
05. வள்ளுவம் போற்றும் மாந்த அன்புக் கோட்பாடுகளில் தலைநிமிர்ந்து நிற்போம்.
06. தைப்பொங்கல் நாளை நமது ஆண்டுத் தொடக்கமாகவும் திருவள்ளுவர் தொடராண்டில் தொடக்கநாளாகவும் கொள்வோம்.
07. இன அழிப்பை (கருக்கலைப்பை) நாமே செய்யாது தவிர்ப்போம்
08. பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் என்ற நிலையில் சாதி சமய பெண்ணடிமை, சிறுவர் சீரழிப்பு, குடும்ப வன்முறை நீக்கி சமன்மை பேணுவோம்.
09. தமிழர் தம் பண்பாட்டு நிகழ்வுகளில் எமக்கு என்றுள்ள சீருடைகளை அணிவோம்.
10. எம் பண்பாட்டை ஒழுக்கவியலைச் சீரழிக்கும் போதைப்பொருள், கொலை, கொள்ளை, கையூட்டு (இலஞ்சம்) ஊழல் , பாலியல் வன்முறை போன்ற இழிவுகளிலிருந்து இனங்காப்போம்.
11. இளம் தலைமுறைக்கு எம் வரலாறு, மொழி இலக்கிய இலக்கணம், காப்பியங்கள், திருக்குறள் பற்றிய புரிதலை ஏற்படுத்துவோம்.
12. உடல் உள நலம் பேண ஒருங்கு (யோகாசன) இருக்கை பயில்வோம்.

**இலங்கைக் குமரித்தமிழ்ப்பணிமன்றம்**
வெளியீடு - 02

நிறுவநர் : நாவை. குமரிவேந்தன் (மகேந்திரராசா)
ஆளுநர் குழு : நாவை குகராசா (சமாதான நீதவான்)
: நல்லினி (புனிதமலாவதி) குமரிவேந்தன்
பொருளாளர் : வேந்தினி (சுவேந்தினி) நிரஞ்சலன்
: 84, வெற்றி (ஜெயந்தி) நகர் கிளிநொச்சி.

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி

## தமிழர் உறுதிமொழி

01. பிறக்கும் பிள்ளைகளுக்குத் தனித்தமிழில் பெயரிடுவோம்.
02. தமிழுள் கிரந்த, ஆங்கில எழுத்து, வடமொழிச்சொற்களை நுழைப்பதைத் தவிர்ப்போம்.
03. கையொப்பத்தைத் தமிழிலேயே இடுவோம்.
04. பெயரின் முதலெழுத்துக்களையும் தனித்தமிழில் எழுதுவோம்.
05. கோயில் வழிபாடு, வீட்டு இன்பியல்(திருமணம், புதுமனைப் புகுவிழா போன்ற), துன்பியல் நிகழ்வுகளைத் தனித் தமிழிலேயே நடத்துவோம்
06. எமது பண்பாட்டு நிகழ்வுகளில் தொன்ம(புராண) இழிவுகளை நீக்குவோம்.
07. எழுத்துத்தமிழுள் (இலக்கண) பேச்சுவழக்கைப் புகுத்துவதைத் தவிர்ப்போம்.
08. சமயம் சார்ந்த இழிவு ஒழுக்கவியற் தொன்மக்கதைகளைக் களைவோம்.
09. வள்ளுவம் போற்றும் ஒழுக்கவியலில் தலை நிமிர்ந்து நிற்போம்.
10. தைப்பொங்கல் நாளை தமிழரின் ஆண்டுத்தொடக்கமாகவும் திருவள்ளுவர் தொடராண்டின் தொடக்க நாளாகவும் கொள்ளுவோம்.
11. கிழமையின் புதன்கிழமையை அறிவன்கிழமை என்றும் சனிக்கிழமையை காரிக்கிழமையென்றும் பயன் படுத்தப் பழகிக்கொள்வோம்.

நா.வை.குமரிவேந்தன் (மகேந்திரராசா)
நிறுவனர்,
**இலங்கைக் குமரித் தமிழ்ப்பணி மன்றம்**
16/2, மருத்துவமனை சுற்றுவட்ட வீதி, குடியிருப்பு, வவுனியா,
அல்லது
84, வெற்றியெயந்திநகர், கிளிநொச்சி.
கைப்பேசி: 077 6203788
வெளியீடு-01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியுரை

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை

செய்ந்நன்றி கொன்ற மகற்கு"(கு.110)

என்பது உலகப்பொது மெய்யியல் தந்த திருவள்ளுவப் பெருந்தகையின் வைரவரிகள். இவ்வாக்கு எம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் பசும்மரத்தாணிபோல் பதியவேண்டும். இது தொல் தமிழன் காட்டிய பண்பொழுக்கத்தின் தனிப்பெரும் கூறாகும். அந்த வகையில் இந்தக் குமரித் தமிழ்ப்பணிமன்றச் செயற்பாடுகளிலே என்னை, அதாவது என்னூடாய் வெளிப்பட்ட தமிழ்த் தேடலை தட்டிக்கொடுத்து மெருகூட்டிய என் அன்புடை நெஞ்சங்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டவன். குறிப்பாக கடந்த மூன்று ஆண்டுகள் எம் நடுவில் இந்திய நாட்டின் இலங்கை, யாழ்.துணைத் தூதரகத்தின் தூதுவராக வருகை தந்து இந்திய அரசின் பல தமிழ்மக்களுக்கான வாழ்வியல் செயற்றிட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்தவரும் எந்த ஒரு தனிமனிதரையும் குறைத்து மதிப்பிடாது எல்லோரும் சமத்துவ சமதன்மை உடையவர்கள் என்ற வகையில், மனித குலம் ஏற்றத்தாழ்வு இல்லாதது என்பதை வெளிப்படுத்தி நின்று, இந்த தமிழ் மக்களுடன் நின்று ஒட்டி உறவாடிய பண்புக்கும் பணிவுக்கும் எடுத்துக்காட்டாய் விளங்கிய பண்பாளன் மாண்புமிகு.திரு.ஆறுமுகம் நடராசன் அவர்களிற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இவர் சுறவ(தை)த் திங்கள் தி.ஆ.2046(2015)இல் யாழ்.இந்தியத் துணைத்தூதரகத்தின் தூதராகப் பொறுப்பேற்ற அன்றே அறிமுகமானவர். காரணம் நான் போற்றும், என்னை அடையாளப்படுத்திய தமிழன்னையின் தமிழர் நாட்காட்டி தான். செய்தித்தாள் ஊடாகப் பார்த்தவர், தொலைபேசி அழைப்பெடுத்து என்னை வாழ்த்தியதோடு, அடுத்தநாட் காலை தூதரகத்தில் எமது சந்திப்பும் நடைபெற்றது. அதன் பின் இந்திய துணைத்தூதரகம் நடத்திய எல்லா விழாக்களுக்குமே அழைப்பு வரும், விழாக்களில் என்னைப் பெருமைப்படுத்தவும் அவர் தவறுவதில்லை. அத்தோடு 2015 பங்குனித்திங்களில் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் அரங்கேறிய குமரித் தமிழ்ப்பணிமன்ற நூல் வெளியீடு, யாழ் மாவட்ட பள்ளி நூலகங்களுக்கான நூல்கள் அன்பளிப்பு விழாவில் தூதரும் அவரது துணைவியார் மதிப்பிற்குரிய திருவாட்டி சாந்தி நடராசனும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

அதன்பின் 2017 மாசித்திங்களில் நெடுந்தீவில் நடைபெற்ற உலகத்தாய்மொழிநாள், நெடுந்தீவின் பல்தொழில்சார் மூத்தகுடிகள், பல்கலைக்கழக புகுமுக மாணவர்கள் நன்மதிப்பில் இவர்களுக்கான அன்பளிப்புக்களை வழங்கி நன்மதிப்புச்செய்தார். அது மாத்திரமல்லாது இன்று நடைபெறுகின்ற இம்மன்றத்தின் 5ஆம் ஆண்டு நிறைவுவிழாவிலும் கலந்து சிறப்பிக்கின்றார். நான் அழைத்தபோதெல்லாம் வருகைதந்து என் தமிழன்னையைப் பெருமைப்படுத்தியதற்காக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு என்றென்றும் நன்றியுடையவன். இவர் என் தமிழ்மொழிச் செயற்பாட்டை தகுதியுடையதாய் ஏற்றுக்கொண்ட பின்பே எனக்கு தமிழ் இலக்கியத்துறை சார்ந்த விருதுகள் கிடைக்கப்பெற்றன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்

மாண்புக்கு மாய்வது மன்"(கு.996)

இந்த உலகமானது இங்கு நடக்கின்ற கொடூரத்தனங்களால் மண்ணுள் புதைந்துவிடாது இருப்பதற்குக் காரணம் நம்மிடையே காலத்திற்குக் காலம் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு திரு.ஆ.நடராசன் போன்றவர்களே என்பார் பெருநாவலர் வள்ளுவர் பெருமான். எனது அறிவறிந்த கடந்த 50 ஆண்டு வாழ்க்கை நீரோட்டத்தில் இவரைப்போன்ற ஒரு பண்பாளரை நான் காணவில்லை, சந்திக்கவில்லை என்றுதான் கூறுவேன். இவ்வாண்டு(2018) "இந்திய வீடு" வளாகத்திலே நடைபெற்ற 69ஆவது இந்தியக் குடியரசுநாள் விழாவில் கலந்துவிட்டு அங்கு காலை உணவருந்திய பின் பேரா.திரு.சிவலிங்கராசா அவர்கள் தேனீர் அருந்திய ஏனத்தைக் கையில் வைத்துக்கொண்டு அருகிலிருந்தவரோடு பேசிக்கொண்டிருந்தபோது அப்பக்கம் வந்த துணைத்தூதர் அவர்கள் அவரின் ஏனத்தை வாங்கியபோது பேராசிரியரவர்களே மிகவும் சங்கடப்பட்டு விட்டாராம். இந்நிகழ்வு இராசராசசோழன் திரைப்படத்தில், சோழன் தஞ்சைப்பெருவுடையார் கோவிலுக்கு சிற்பம் செதுக்கிக்கொண்டிருந்த சிற்பி தன்வாயில் கொதுப்பிக்கொண்டிருந்த வெற்றிலை எச்சிலை ஏந்த அதற்கான ஏனத்தை நீட்டிய காட்சிதான் நினைவுக்கு வந்தது.

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை

அணியுமாம் தன்னை வியந்து"(கு.978)

இந்தியத்துணைக் கண்டத்தின் ஒரு உயர் அரச, பண்பான பணியாளரின் நட்புக்கிடைத்ததற்கு என் தமிழன்னைக்கும், அவள் அறிமுகமாக்கிய பெருமைக்கும் மதிப்பிற்கும் உரிய மாண்புமிகு திரு.ஆ.நடராசன் அவர்களுக்கும், எனது நன்றியைத் தெரிவித்து, செல்லுமிடமெல்லாம் சீரோடும் சிறப்போடும் அவரும், அவர் குடும்பமும் நூறாண்டு வாழ இனிய தமிழ் வாழ்த்துக்களை தெரிவித்து தமிழன்னையை இறைஞ்சி நிற்கின்றேன்.

நூல் வெளியீட்டு விழாக்களிலே கலந்தும் எனது நூல்களுக்கு வெளியீட்டுரை, அணிந்துரைகள், மதிப்பீட்டுரை வழங்கியும், வருகை தந்து முதன்மை, சிறப்பு விருந்தினர்களாகவும், இந்த 5ஆம் ஆண்டு நிறைவு விழா மலருக்கு வாழ்த்துரை அனுப்பியும் எனக்கும், இம்மன்றத்துக்கும் மெருகூட்டித் தட்டிக்கொடுத்த பேராசிரியர் திரு.கு.திருமாறன்(திருச்சி), பேரா.சி.சிவலிங்கராசா, பேரா.வே.வேல்நம்பி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனை.திரு.செ.திருநாவுக்கரசு, வாழ்நாட் பேரா.திரு.சண்முகதாசு, திரு.த.குருகுலராசா, செந்தமிழ்ச்சொல்லருவி.திரு.ச.இலலீசன், தமிழருவி.திரு.சிவகுமாரன், முனை. தமிழ்மணி.திரு.அகளங்கன், திரு.மா.கணபதிப்பிள்ளை, மாண்புமிகு.திரு.சி.சிறிதரன், நாடாளுமன்ற உறுப்பினர், வண.தமிழ்நேசன் அடிகளார், திரு.அ.சத்தியானந்தன் ஆசிரியர் அவர்கட்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

இவ்விழாவிற்கு பல்தொழில்சார் மூத்தகுடிகள் நன்மதிப்பு, கட்டுரைப்போட்டியாளர்களுக்கான பரிசில்களை வழங்கும் கொடையாளர்களான கே.பி.கே நிறுவனம், தொழிலதிபர்.மா.தெய்வேந்திரம், தொழிலதிபர்.திரு.சிதம்பரநாதன்(ச.நீ), காவேரி கலாமன்றம், குமரிக் குடும்பத்தைச் சேர்ந்த தவமலர் விசயரத்தினம் இணையர், மலர்விழி சிவகரன் இணையர் ஆகியோருக்கும் எமது நன்றிகள் என்றும் உரியது.

இன்றைய வெளியீடுகளான 'தமிழ் எழுச்சி", 'சமயப்பன்மையியமும்" அகஈ(ஆண்)கமும், 'வலிய கனவுகள்", 'விழாமலர்" ஆகிய நூல்களை வேலைப்பளுவின் நடுவிலும் மனநிறைவோடு பதிப்பித்துத் தந்த வேழன் பதிப்பக உரிமையாளர் திரு.பாலேந்திரராசா, பணியாளர் யாவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

இலங்கை குமரித்தமிழ்ப்பணி மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவந்த நூல்கள்...




வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org